பாலபாரதி

பு. ௧ 1925 வ. 2

# பால பாரதி

2 2

1925

வைகாசி

JL
m211, N24B8
N25.2.2
160205

1433

தபால் எண்—ம. ககூஅ௦.

"BALA BHARATI,"

Sheramadevi., S. I. R.

# பாலபாரதி

புத்தகம் ௨ | வைகாசி, கலியப்தம் ௫௦௨௭. | பகுதி ௨

ஓர் செந்தமிழ் மாதப் பத்திரிகை.

ஆசிரியர்:

வ. வெ. ஸுப்ரஹ்மண்ய ஐயர்.

பரத்துவாஜ ஆசிரமம், சேரமாதேவி.

OFFICE OF THE ... 18 SEP 1925 MADRAS

Vol II. May 1925. No. 2.

"பாலபாரதி" சந்தாவிகிதம்

வருஷச் சந்தா: { உள் நாடு ரூ. ௫—௦—௦.
வெளி நாடு ரூ. ௧—௮—௦. }

தனிப் பிரதி அணா ௧௦.

## "பால பாரதி" விஷய அட்டவணை

வைகாசி, ௫0உஎ.

——(0)——


மஹாத்மா காந்தி வாழ்க ... ௬௫

ஸம்ராட் அசோகன் (ஸ்ரீ மஹேச குமார சர்மா) ... ... ௬௬

பாரத நாட்டில் வீரர் மலிந்ததேன்? (ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்) எ௩

ஸ்வென் ஹெதின் (ஸ்ரீ சி. ஸுப்ரஹ்மண்ய சர்மா) ... ... எ௬

பூமிதேவியும் செல்வமும் (ஸ்ரீ வ. நடராஜன்) ... ... அ௫

புத்தர் நீதி நெறி (ஸ்ரீ இலக்குமணப்போற்றிகள்மொழி பெயர்த்தது) அஅ

உலகின் அத்தியற்புதக் காட்சி (ஸ்ரீ சி. கந்தையா)... ... ௯0

ஆனந்தரங்கப் பிள்ளையின் தினசரி ... ... ௯௪

நமது சிற்பச் செல்வம் ... ... ௯எ

ஹர்ஷ சக்ரவர்த்தியின் சமயம் (ஸ்ரீ ச. செல்லம்பிள்ளை) ... க0௩

கம்பராமாயணம் (ஸ்ரீ வ. வெ. ஸுப்ரஹ்மண்ய ஐயர்) ... க0௪

இஸ்லாமும் சாஸ்திர பரிசீலனையும் ... ... கக௩

எதிரொலியாள் (ஒரு சிறு கதை) ... ... கக௬

புஸ்தக விமரிசனம் ... ... கஉ௬

ஆலோகன ஆவலோகனம் ... ... கஉஅ



## உங்களுக்கு எது வேண்டும்?

18-காரட் கோல்ட் பிளேட் கேஸ்.

பொன் கில்ட் டயல் ரவுண்ட் ஷேப்

ரிஸ்ட்லெட் கடியாரம்



பக்கத்தில் கீழ்வளைவுள்ள பொன் கில்ட். இதனுடைய டயல்களில் பார்ப்பவர்களுக்கு வெகு ஆச்சரியத்தை யுண்டு பண்ணும். இது பார்வைக்கு ரூ. 100-அல்லது அதற்கு மேலும் மதிப்புள்ளதாய்த் தோன்றும் உயர்ந்த சாமான்களால் செய்து சரியான காலம் காட்டும். நெடுங் காலம் போகும். ஆண் பெண் இரு பாலர்களும் உபயோகிக்கலாம்., குறைந்த விலை ரூ. 7. 3 கடியாரங்கள் ஒரே தடவையில் வாங்கினால் விலை ரூ. 20.

விலாசம்:—

உயர்ந்த ஜெர்மன் அலாரம்

டைம் பீஸ்



இது புதிதாக ஜெர்மனி தேசத்திலிருந்து வரவழைக்கப் பட்டது. காலத்திற்கு மணியைக் காட்டுவதன்றி இதில் கண்ட அற்புதமான பொம்மைகள் ஆடவும் குதிக்கவும், கண் இமிட்டவும் செய்யும். இது தவிர அலாரம் மணியும் அடிக்கும். மிக்க ஆச்சரியமானவை. முந்துங்கள். மூன்று வருஷத்துக்கு உத்தரவாதம்.

விலை ரூபா 5.

**வி. எஸ். வாச் கம்பெனி,**
தபால் பெட்டி 105, மதராஸ்.

## "லோகோபகாரி,"

கோமளேசுவரன்பேட்டை, சென்னை.
ஓர் அரிய வாரப் பத்திரிகை.

——(0)——

சுவையுள்ள ராஜீய, சாஸ்திரீய, தார்மிக வியாசங்களைத் தாங்கிவருவது.

வருஷ சந்தா: இந்தியா பர்மா லங்கைக்கு ரூ. ௪.
வெளி நாடுகளுக்கு ரூ. ௬

## "சிந்தாமணி,"

ஒரு உயர்தர செந்தமிழ் மாதப் பத்திரிகை பல அறிஞரின் அரிய வியாசங்களுடன் கிரௌன் 1/4ல் எஉ—பக்கங்கள் கொண்டது.

பத்திராதிபர்:— சகோதரி பாலாம்பாள்

வருட சந்தா-உள் நாடு ரூ-௩. வெளி நாடு ரூ-௬. மாதிரி பிரதி அணா க0 (தபால் முத்திரையாக அனுப்பவும்) கிடைக்குமிடம். காரியஸ்தன், சிந்தாமணி, விவேகாச்ரமம், மைலாப்பூர், சென்னை.

## தமிழர்

ஒரு சிறந்த தனித்தமிழ் மாதப் பத்திரிகை
பத்திராதிபர்: ஸ்ரீமான் உ. க. பஞ்சரத்தினம்

வருஷ சந்தா: உள் நாடு ரூ. உ-அ. வெளி நாடு ரூ. ௩. மாணவர் பதிப்பு ரூ. உ-0-0. ஆயுட் கால சந்தா ரூ. உ௫. கிடைக்குமிடம்:
"தமிழர்" தெப்பக்குளம், திருச்சி.

## ஆரோக்கிய தீபிகை

ஆசிரியர்: யூ. ராம ராவ்

வியாதியில்லாதவர் வியாதி வாராமல் காத்துக் கொள்வதற்கும் வியாதியுள்ளவர் சுய சிகிச்சை செய்துகொள்வதற்கும் சிறந்த வழிகளைக் காட்டும் ஓர் மாதப் பத்திரிகை. வருஷ சந்தா ரூ. க-அ. கிடைக்குமிடம்: காரியஸ்தர், ஆரோக்கியதீபிகை, ௩உ௩, தம்புசெட்டித் தெரு, சென்னை.

## "பாலபாரதி" புஸ்தகசாலை சேரமாதேவி.

——[*]——

| | நூல் | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| க. | மகாத்மா காந்தி ... | க | 0 | 0 |
| உ. | ஆரோக்கிய வழி ... | 0 | கஉ | 0 |
| ங. | நீதி தர்மம் ... | 0 | ங | 0 |
| ச. | இந்தியாவைப் பற்றிய உண்மை ... | 0 | ங | 0 |
| ரு. | கிரிபாலா நாடகம் ... | 0 | ச | 0 |
| சா. | அர்ச்சுன சந்நியாசி ... | 0 | கஉ | 0 |
| எ. | வால்மீகி விஜயம் ... | க | 0 | 0 |
| அ. | விவேகாநந்தரின் வர்த்தமான பாரதம் ... | 0 | க0 | 0 |
| கூ. | தன்னம்பிக்கை ... | 0 | அ | 0 |
| க0. | ரவீந்திர டாகூரின் கதைகள் க-ம் தொகுதி | 0 | கஉ | 0 |
| கக. | ஷை உ-ம் தொகுதி ... | 0 | கஉ | 0 |
| கஉ. | லாபந்த ப்ரகாசம் ... | 0 | அ | 0 |
| கங. | ஜரதுஷ்டிரன் ... | 0 | க | ங |
| கச. | குரு கோவிந்த சிங்கன் (எ0 க்கம்) | 0 | ச | 0 |
| 15. | V.V.S. Aiyar's English Translation of the *Kural* 2nd Edition ... | 5 | 0 | 0 |

SOUTH INDIAN SHRINES

Describes the chief temples in all aspects. Double Crown Quarter 638 Pages: 251 Illustrations, Rs 6/

VAIDYANATHAN BROS.,
TRIPLICANE, MADRAS, S. E.

## BUSINESSMEN!

வியாபாரிகளே!! தொழிலாளர்களே!!

இந்தியாவில் செய்யப்படும் தொழில்களின் அபிவிருத்தியை நாடி நாங்கள் ராவ்ஸ் இண்டஸ்ட்ரியல் டைரெக்டரி (Rao's Industrial Directory) என்று வெளிப்படுத்தப் போகிற புஸ்தகத்திலும், மான்யுபேக்டரோர்ஸ் ஸர்வீஸ் அண்டு இண்டிஸ்டிரியல் ரெவியூ (Manufacturers Service and Industrial Review Monthly) என்ற மாதாந்தரப் பத்திரிகையிலும் தங்களுடைய விளம்பரங்களை வெளிப்படுத்துவோம். இந்தியா, பர்மா, சிலோன் முதலிய இடங்களில் செய்யும் தொழில்களும் வியாபாரங்களும் இந்த புஸ்தக மூலமாயும் எங்கள் மாதாந்தரப் பத்திரிகை மூலமாயும் தெரிந்துகொள்ளலாம். இவ்வளவு முக்கியத்தான விஷயங்கள் அடங்கிய புஸ்தகத்தை (Directory) வர்த்தக மித்ரன் (Business friend) என்றே சொல்ல வேண்டும். அதனால் ஒவ்வொரு வியாபாரியும் கைத் தொழில் செய்பவரும் இப் புஸ்தகத்தில் தங்களுடைய விளம்பரங்களைச் செய்வதுடன் மன்னியில் புஸ்தகத்தையும் பத்திரிகைகளையும் தங்களிடத்தில் வைத்துக் கொள்வது மிகவும் அவசியம் என்பது நாங்கள் சொல்லவும் வேண்டுமோ?

விளம்பரத்தால் தான் இங்கிலாந்து, அமெரிக்கா ஜெப்பான், ஜெர்மனி முதலிய மேல் நாட்டார்கள் தங்களுடைய கைத் தொழில்களையும் வியாபாரங்களையும் விருத்தி செய்து உலகத்திலுள்ள செல்வங்களைச் சம்பாதித்துப் போய்த் தங்களுடைய தேசங்களை மிகவும் முன்னுக்குக் கொண்டு வருகிறார்கள். விளம்பரந்தான் வியாபாரத்துக்கு அடிப்படை. மேல் நாட்டார்கள் விளம்பரத்திற்காக பகுதி முதலுக்கு மேல் சந்தோஷமாக செலவழிக்கிறார்கள். ஆகையினால் தான் (விளம்பரத்தினால்தான்) அவர்கள் இவ்வளவு மேன்மையான ஸ்திதியில் இருக்கிறார்கள். இதுவே உங்கள் சமயம். ஒரு போஸ்டு கார்டு அனுப்பினால் விபரங்கள் முழுவதும் தெரியப்படுத்தப்படும். நம்முடைய தொழில்களை மேல் நாட்டார்கள் தொழில் போல அபிவிர்த்திக்குக் கொண்டு வர வேண்டுமென்று நாங்கள் மிகவும் முயற்சி செய்துகொண்டு வருகிறோம். இந்த பத்திரிகைக்குமேல் என்ன அத்தாக்ஷி வேண்டும்? உடனே முந்துங்கள் [Our Directory advertisement Forms close with out Prior Intimation] முன் அறிவிக்கை செய்யாமல் டைரக்டரி ஆர்டர்கள் வாங்குவதை நிறுத்திவிடுவோம். முந்துங்கள்! முந்துங்கள்!!

உடனே எழுதுங்கள்!

The Manufacturer's Service, Tinnevelly Junction.
மான்யுபேக்டரர்ஸ் ஸர்வீஸ், திருநெல்வேலி ஜங்ஷன்.


ஓம்

# பாலபாரதி


| | | |
|---|---|---|
| புத்தகம் உ | வைகாசி, கலியப்தம் ரு0உஎ. | பகுதி உ |


THE REGISTRAR OF BOOKS 18 SEP 1925 MADRAS

## மஹாத்மா காந்தி வாழ்க!

(ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் பாடியது)

——()——

அறங்கொண்ட திருவுருவம் அருளென்னும் அழகோடும் அமைந்ததில்,
மறங்கொண்ட விலங்குவலி மானிடரை யுண்ணுவதை மனத்தில் எண்ணித்
திறங்கொண்ட ஆன்மவலித் தெய்வமெனத் தேசமிகு தவத்தி னாலே,
பிறன்கொண்ட சுதந்திரத்தைப் பெறமீண்டு வழிகாட்டப்பிறந்தோன் வாழி!

சாந்தமெனுஞ் சுவையோடுஞ் சத்தியத்தி லுதித்தவொரு கனியோ! தேவர்
எந்துதவ வொளியனைத்தும் ஒருடலில் வந்திடுமெய்த் தவமோ! இன்றே
மாந்தர்பிணி மிடியடிமை வற்றிடவே வகையளிக்கும் மருந்தோ! என்றாய்!
காந்தியெனும் பெயருடைய கருணையுரு வாகியவென் கண்ணானே!

விரதமொடு சிறை புகுந்தும், நயருழன்றும், மெலிந்ததவச் சுடரே! ஏழைக்
குருகிமிடி யணிந்தவ! எம் உயிர்போன்ற சக்கரத்தை யருளச் செய்தே,
பரிவுடனெம் மானமதைப் பரிபலித்தாய்! பஞ்சமரின் உரிமை யீந்தாய்,
விரிவுடைய பல மதத்தோர் பிரிவரிய ஒற்றுமையில் மேவ வைத்தாய்!

ஒரு கொடிக்கீழ் பாரதமும் உள்ளத்தில் ஒருப்பட்டே, உயர் அறத்தின்
பெருவெளியில் மகிழ்வோடும் பிறங்குகின்ற பீடுறுமந் நாளி லுன்னை
அருமையுடன் சுதந்திரத்தின் அம்மையுடன் ஆலயத்தில் அணிகள் செய்தே
பெருமையுடன் உலகேத்தும், பிறர்க்காக வாழ்வெடுத்த பெரிய வாழ்வே!

புத்தரென்றும், அப்பரென்றும், பொறைமிகுந்த ஏசுவென்றும் புனிதநல்லார்
எத்தனையிங் குதித்தனரோ அத்தனையர் எழிலெல்லாம் இசைந்தேயொன்றாய்
இத்ததியுன் னுருவெடுத்தே யிவ்வுலகின் போரொடுங்க இவர்ந்தவோ! என்
சித்தமிசை யகலாத திருவுடைய குருமுனியே சிறந்து வாழி!

# ஸம்ராட் அசோகன்

(ஸ்ரீமான் மஹேச குமார சர்மா எழுதுவது)

## எட்டாம் அத்தியாயம்

### மதுரா நகரியில்

மதுரா நகரத்துப் புத்ரதேவாலயங்களின் வான் தோய் சிகரங்கள் காணப்படத் தொடங்கின. அச் சிகரங்களின் கொத்துவேலை அத்தியந்த மனோஹரமாய் விளங்கியது. தேவாலயங்களிலிருந்தெழும் மணியோசை செவிகளைப் பிளப்பதாயிருந்தது. அவ் வோசைக்கு முன் நகர மாந்தர்களின் அரவம் காதில் விழமாட்டாமல் அடங்கிவிட்டது. தனிகர்களின் மாட மாளிகைகளும் உயர் பதவி வாய்ந்த செல்வச் சீமான்களின் ஒப்பிலா உப்பரிகைகளும் மதுரா நகரியில் நிறைந்திரா விட்டால், தூரத்திலுள்ள எவருக்கும் இங்கே ஜனங்கள் வசிக்கிறார்களென்றே தோன்றாது. நகரத்தைச் சூழ்ந்துள்ள நந்தவனங்களிலிருந்து நறு மணம் ஏந்தி வீசும் பனியைக் காற்றுச் செய்யாதிருந்தால், இத்தகைய நிர்ஜனமான ஆரண்யத்திலே இத்தகைய அழகிய தேவாலயங்கள் கட்டப்பட்டிருப்பது வீணென்றே மிகமிக தூரத்திலுள்ள எவருக்கும் தோன்றும். இக் காரணத்தினாலேயே மதுரையை நோக்கி வந்துகொண்டிருந்த இளம் பிராயமுள்ள பிரயாணி தன் வயதுசென்ற கூட்டாளியைக் கேட்ட கேள்வி பொருத்தமற்றதா யில்லை.

இளம் பருவப் பிரயாணி மாதர்க்குரிய மென் குரலில் கேட்டதாவது—"சியாமசுந்தரரே, நீர் சொன்ன மதுரா நகரி இது தானோ? இங்கே ஆலயங்களைத் தவிர வேறொன்றும் காணப்படவில்லையே. இந்த மணியோசையோ காது செவிடு படும்படி ஓயாமல் முழங்கிக் கொண்டிருக்கிறது. இப்படியே அறுபது நாழிகையும் நடந்து வந்தால், இங்கே காதத்துக்குக் காதவழி தூரம் வரையில் யாரும் தங்கமாட்டார்கள்—வருவதற்கே அவர்களுக்குத் தைரியம் உண்டாகாது. அப்படியிருக்க அங்கே போய் வசிப்பதைப்பற்றிக் கேட்க வேண்டுமா?"

அவ் விளம் பிரயாணியின் குதிரையோடு இன்னொரு குதிரையின் மீது நரை முத்துப் பெரியம்மை ஒருத்தி சவாரி செய்துகொண்டு வந்தாள். அவள் கூறினாள்—"பிரணயினி, எனக்கும் முதலிலே இப்படித்தான் தோன்றியது. ஆனால் அந்த அழகிய மாடமாளிகைகளைக் கண்ட பொழுது, மதுரா நகரி இதுதான் என்று நிச்சயமாகிவிட்டது."

இளம் பிரயாணி சொல்லியது—"அம்மா, இதோ காணப்படுவது ஒரு காலும் மதுரா நகரமன்று. அப்படியிருந்தாலும், அது பாழூராகவே இருக்கும். ஏனென்றால் இவ் விடத்திய தேவாலயங்களிலிருந்து இவ்வளவு கடோரமான மணியோசை எது முதல் உண்டாகத் தொடங்கியதோ, அப்பொழுதே ஜனங்கள் இவ் வூரை விட்டு விலகி வேறே எங்கேயாவது புறப்பட்டுப் போயிருப்பார்கள். இது மனிதன் வாச ஸ்தானமாயிருந்தால் கொஞ்சமாவது அதன் அறிகுறிகள் காணப்படுமே; மனிதரின் குரல் கேட்குமே; அவர்களுடைய கொடுத்தல் வாங்கல், தொழில், வியாபாரம் முதலியவைகளின் கோலாகலம் கொஞ்சமாவது காதில் விழுமே.

அதற்கு விடையாகச் சியாமசுந்தரன் ஏதோ பேச எத்தனிக்கையில், அந்தப் பெரியம்மை மொழிந்தாள்—"பிரணயினீ, மணியின் இந்தப் போராசையின் முன்னே மனிதரின் இரைச்சல் எப்படிக் கேட்கும்? இந்த நகரம் ஒருநாளும் பாழடைந்த பட்டணமாக மாட்டாது."

சியாம சுந்தரன் சிந்தனை செய்து மெல்லப் பேசலுற்றான்—"இந்து மதி மகாராணி பெருமாட்டி, இதோ எதிரில் காணப்படுகிறதே, அது நகரியா அல்லவா; நகரியாயிருந்தால், மதுரா நகரியா அல்லவா; மதுரா நகரியாயிருந்தால், அது பாழூரா அல்லவா, என்னும் இந்தக் கேள்விகள் மிகமிக முக்கியமானவை. இக் கேள்விகளுக்குச் சமாதானம் சொல்ல வேணுமானால் சமூகம், இராஜநீதி, இதிகாஸம், புராதன தத்துவம் முதலிய பல விஷயங்களை ஆராய்ந்தே சொல்ல வேண்டும். ஆகையால் இப்பேர்ப்பட்ட கேள்விகளுக்கு வேறொரு சமயம் சாவகாசமாய் பதில் சொல்லுவோம். இப்பொழுது தங்களிடம் இரண்டு செய்திகள் சொல்லவேண்டி யிருக்கிறது. அவற்றை விண்ணப்பிக்க ஆஜ்ஞை செய்தருளும்படி வேண்டிக்கொள்கிறேன்."



பெரியம்மை கூறினாள்—"சியாம சுந்தரரே, நீர் சொல்ல விரும்புவதை நிராடங்கமாய், ஆனால் சுருக்கமாய்ச் சொல்லலாம்."

சியாம சுந்தரனுடைய அகடவிகடமும் சந்தர்ப்பத்துக்கு ஒவ்வாத கல்விப் புலமையும் அவ் விளம் பிரயாணிக்குப் புதியவையல்ல. அவள் அவன் பக்கல் புன்னகையோடு ஒரு பார்வை பார்த்தாள்.

சியாம சுந்தரன் தொடர்ந்து சொல்லலாயினான்—"இந்துமதி மஹாராணியாரே, தாங்கள் அடிக்கடி பிரணயினி தேவியை அவருடைய பெயரைச் சொல்லி அழைக்கிறீர்களே, அது சரியல்ல. அவரது உண்மை உருவத்தை மறைப்பதற்காகத்தானே அவருக்குப் புருஷ வேஷம் போட்டிருக்கிறது. நாம் ஹரித்துவாரம் போய்ச் சேருகிற வரையில் மிகுந்த ஜாக்கிரதையுடன் பிரயாணம் செய்ய வேண்டும். ஆகையால் இப்பொழுது பிரணயினி தேவியை அவருடைய புதிய ஆண்பால் பெயராகிய பிரதோதன் என்றே அழையுங்கள். இதை நன்றாய்க் கவனத்தில் வைக்கவேணும்."

"நீர் மட்டும் எப்போதும் அம்மாவைத் தங்குதடையில்லாமே, மறவாமே, பெயர் சொல்லியே அழைப்பதை விடவேண்டாம். நான் சொல்லுகிறேன், நீர் அவரை இந்துமதி மஹா ராணி பெருமாட்டி என்பதற்குப்பதில் கலிங்காதிபதி மிருகேந்திர மகீபன் பட்டமஹிஷி என்று தவறாமல் ஜாக்கிரதையாய்ச்சொல்லிக்கொண்டே போனால் நாம் அவசியம் க்ஷேமமாய் ஹரித்துவாரம் போய்ச் சேரத் தடையில்லை."

"பிரணயினி தேவி—என்கிற பிரதோத மகாராஜா" என்று சியாம சுந்தரன் மேலும் சொல்லப் போகையில்—

பிரணயினி கூறினாள்—"இந்த 'என்கிற' பெயரைச் சேர்த்துச் சொல்லுகிற அழகு இன்னும் திவ்யமாயிருக்கிறது. இதனால் இரண்டு லாபம் உண்டாகும். ஒன்று என் பெயரை அடிக்கடி எடுப்பதினால் அதை மறந்து போவதற்கு வழியில்லை. மற்றது புதிய பெயரைப் பிரயோகிப்பதனால் நம்மை ஒருவரும் அடையாளம் கண்டு பிடிக்கவே மாட்டார்கள். இப்பொழுது இதில் ஒரு விசேஷம் இருக்கிறது. இப்படி நீர் என் பெயரைச் சொல்லுகையில், 'என்கிற' என்று தொடங்கும் பாகம் மட்டும் நம் சத்துரு பக்ஷத்தார் செவிகளில் விழாதிருக்கவேண்டும். அப்பொழுது வேடிக்கையாய்த்தான் இருக்கும்."

இந்துமதி—"பிரணயினீ" என்று விளித்து ஏதோ சொல்லத் தொடங்குகையில், சியாமசுந்தரன் இடையே தடுத்து—"பார்த்தீர்களா, அதற்குள் மறந்து விட்டீர்களா! 'பிரதோதமஹாராஜ' என்று சொல்லுங்களேன், உங்களுக்குப் புண்யமாய்ப் போகிறது," என்றான்.

"சரி, பிரதோத மஹாராஜா, நீர் சியாமசுந்தரரை வீணே பரிகாசம் செய்யவேண்டாம். அவரோ விருத்தர். அவர் மிகுந்த ஜாக்கிரதையுடனே வார்த்தையாடுகிறார். நாம் பேச்சின் அவசரத்தில் தெரியாமலே அகப்பட்டுக் கொள்ளாமல் இருக்கவேண்டுமென்பதே அவருடைய கவலை. அவர் வீண் பேச்சுகளைப் பெருமைப்படுத்துகிறவரல்ல. அன்னமானது நீர் கலந்த பாலினின்று நீரை நீக்கிப் பாலைமட்டும் கொள்வதே போல் நாம் அவர் பேச்சில் சாரத்தை மாத்திரம் கிரகிக்க வேண்டும்."

"என்னுடைய முதல் செய்தியைத் தாங்கள் ஒப்புக்கொண்டுவிட்டதற்காக நன்றி பாராட்டுகிறேன். இனி

இரண்டாவது செய்தியை விண்ணப்பிக்க ஆஜ்ஞை செய்தருளும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்."

புருஷவேஷம் பூண்டிருந்த பிரணயினி கூறினள்—"அதற்குள் முதல் ஆஜ்ஞை பழசாய்ப் போச்சோ?

"இரண்டாவது செய்தி என்னவென்றால்—இந்துமதி மஹாராணி பெருமாட்டியாரே—"

பிரணயினி இடையே தடுத்துரைத்தாள்—"திவ்யம்! கலிங்காதிபதி மிருகேந்திர ராஜமஹிஷி!"

"தங்கள் பெயரை மாற்றி வேறு பெயர் வைத்துக்கொள்ளுங்கள்."

"அப்படியானால் எனக்குச் சுலபமாகவே என் தாயாரின் நாமகரணமஹோத்ஸவத்தைப் பார்க்கும் பாக்கியம் முதன்முதல் கிடைக்கும்" என்று தொடங்கிப் பிரணயினி வேடிக்கையாய்ப் பேசத் தொடங்கினள்—"ஆனால், ஓய் சியாமசுந்தரரே, இத்தனை வயசான பிறகு அம்மாவைத் தொட்டிலில் இட்டு ஆட்டினால், எவ்வளவு அதிசயமாயிராது!"

பிரணயினியின் பேச்சைக் கவனியாமலே இந்துமதி இயம்பினள்—"சியாமசுந்தரரே, என் பெயரை மாற்ற வேண்டிய அவசியமில்லை. நம்முடைய பிரயாணத்தில் ராஜவைபவம் பாராட்டாவிட்டால் குடி முழுகிப்போய் விடுமே யென்று பயப்பட வேண்டியதில்லை. நீர் என் பெயரோடு 'மஹாராணி பெருமாட்டி' என்ற பிருதாவளியைச் சேர்த்துப் பாடாமலிருந்தால், அதுவே போதும். ஜனங்களுக்கு நான் யார் என்ற சம்சயமே உண்டாகாது. இதைத் தவிர எனக்காகப் பயப்படுவதற்கு ஒரு காரணமும் இல்லை. சத்துருக்களின் கையில் அகப்பட்டுக் கொண்டாலும், எனக்கு ஒரு கெடுதியும் வாராது. பிரணயினியையே நாம் முக்கியமாய் ரக்ஷிக்க வேண்டும். இவளை உத்தேசித்துத்தானே இந்தப் போர் மூண்டது! இதற்காகவே நாம் அவளுக்குப் புருஷவேஷம் போட்டிருப்பதும், இந்த உடுப்பு இவளுக்கு இவ்வளவு பொருத்தமாய் இருப்பதைப் பார்த்து—"

இந்துமதி தேவியும் சியாமசுந்தரனும் பிரணயினி பூண்டிருந்த அந்தத் திவ்யமான புருஷவேஷத்தைச் சிறிது நேரம் உற்று நோக்கிய வண்ணமாய் இருந்தனர்.

இந்துமதி மீண்டும் மொழியலுற்றாள்—"இந்த வேஷம் இவளுக்கு இவ்வளவு பொருத்தமாய் அமைந்திருப்பதைப் பார்த்து, இது என் ஜிதேந்திரனாகவே இருக்கவேண்டுமென்று எனக்குப் பல தடவையும் பிரமை உண்டாயிருக்கிறது."

இந்துமதி பிரணயினியைப் பிரேமையோடு பார்த்துக்கொண்டிருந்தாள்.

சியாமசுந்தரன் சொன்னான்—"ஆமாம்; பிரணயினி தேவியினுடையவும் இளவரசு ஜிதேந்திர தேவனுடையவும் முகவிலாசம் ஒரே அச்சாகத்தான் இருக்கிறது. முகச்சாயல் முழுதும் ஒன்றே; பேச்சு வகையும் ஒன்றே: இன்னும் சொல்லப் போனால், குதிரைச் சேணம் கூட இருவருடையதும் முழுவதும் ஒரே மாதிரிதான். நாலு வருஷத்துக்குமுன் இளவரசு இந்திரபுரத்துக்கு வந்திருந்தார். அப்பொழுது ஒரு நாள் மஹாராஜா பிரணயினி தேவிக்கும் இளவரசைப் போலவே உடுப்புப் போட்டு, தம்முடன் கொலுமண்டபத்துக்கு அழைத்துவந்தார். அப்பொழுது இரண்டு இளவரசர் வீற்றிருப்பதைப் பார்த்து எங்கள் எல்லோருக்கும் அதிக ஆச்சரியம் உண்டாயிற்று. எவரை இளவரசரென்று அறிந்து வணங்க வேண்டுமென்று விளங்கவில்லை. சிலர் பிரணயினி தேவியையே இளவரசரென்று எண்ணி வணங்கினர்; மற்றுஞ் சிலர் உள்ளபடியே இளவரசரை வணங்கினர்கள். நானோ இளவரசரையும் பிரணயினி தேவியையும் மடியில் வைத்துச் சீராட்டினவன். அப்படிப்பட்ட நான்கூடப் பிரமித்துவிட்டேன். ஆனால் நான் அப்பொழுது ஒரு சூழ்ச்சி செய்தேன். நான் இருவரையும் இளவரசரென்று மதித்து வணங்கினேன். என்னுடைய யுக்தியையும் விஞ்சி, மந்திரி விசாகானந்தனார் இரண்டு தடவை வணங்கினார். அப்பொழுது மஹாராஜா மந்தஹாஸம் செய்து—'இதைத் தான் பண்டிதர்களின் புனைசுருட்டு என்கிறது,' என்றார். இந்தச் சமத்காரத்தை முதலில் உற்பத்தி செய்தது நானாகையால், மஹாராஜா என்னைப் பாராட்டாததைப் பற்றி முறையிட்டேன். அவர் என் யோக்கியதையையும் கற்பனைச் சாதுர்யத்தையும் கொண்டாடி என்னை பெருமைப் படுத்தினார்."

பிரணயினி சற்று ஞாபகம் மூட்டிக்கொண்டு கூறினள்—"நல்லது, அப்பொழுது உமக்கு என்ன வெகுமானம் கிடைத்தது?"

"மஹாராஜா எனக்கு ஸமயோசித ஸபாரஞ்ஜக சிகாமணி என்ற பட்டம் அளித்தார். இந்துமதி மஹாராணி பெருமாட்டியாரே!—"

"திரும்பியும் மறந்துவிட்டீரே! என்றாள் பிரணயினி.

"ராணி பெருமாட்டியாரே!"

"திவ்ய தரம்!"

பிரணயினியின் பக்கல் பயந்து பயந்து பார்த்துக்கொண்டே சியாமசுந்தரன் தொடங்கினான்—"இந்துமதி பெருமாட்டியாரே,—"

"அது ஒன்றுமே வேண்டாம். பெயருக்குப் பதிலாக அம்மா என்றுமட்டும் சொன்னால் போதும்."

சியாமசுந்தரனுக்கு அப்பொழுதுதான் புத்தியில் உறைத்தது. அதன் மேல் அவன் கூறலுற்றான்—"அம்மா, நேற்று அந்தக் கிராமத்தில் நாம் தங்கியிருக்கையில், பிரதோத மஹாராஜா எனக்கு முந்தியே விழித்தெழுந்த பால சூரியனை ஆநந்தமாய்ப் பார்த்துக்கொண்டிருந்தார். அதற்குள் என் நித்திரை தெளிந்தது. நான் இளவரசாகிய ஜிதேந்திரனையே பார்த்துக்கொண்டிருப்பதாக எனக்குப் பிரமை உண்டாயிற்று. ஸாக்ஷாத் யுவராஜாவே என் பக்கத்தில் இருக்க, நான் படுத்திருப்பது சரியல்லவென்று எனக்குப் பட்டது. ஆகவே நான் ஒரு யுக்தி செய்தேன். இவரைப் பாராதவன் போல் படுத்திருக்கலாமென்று தீர்மானித்துப் போர்வையினால் முகத்தை மூடிக்கொண்டு குறட்டைவிடத் தொடங்கினேன். அப்பொழுது இளவரசின் குரலைப்போல் என் காதில்—'ஓய் சியாமசுந்தரரே, இன்னம் உமக்குத் தூக்கம் மாளவில்லையா?' என்று விழுந்ததைக் கேட்டவுடனே, நான் திடுக்கிட்டுத் தடபுடலாய் எழுந்திருந்து, என் பிழையைப் பொறுத்துக்கொள்ளும்படி கேட்க எண்ணி,—மஹாராஜா என்று நான் அழைத்தவுடனே, யார் மஹாராஜா என்று கேள்வி பிறக்கவே, என் அசட்டுத்தனம் வெளிப்பட்டது. உடனே, 'பிரதோத மஹாராஜா' என்று சொல்லிவிட்டு என் வார்த்தையைச் சமாளித்துக்கொண்டேன்."

பிரணயினி—"சியாமசுந்தரரே, சமாளித்துக்கொண்டதாக நீர் நினைத்துக் கொள்ளலாம். ஆனால் உம்முடைய தடுமாற்றத்தைப் பார்த்து நான் உம்முடைய பயத்துக்குக் காரணம் இன்னதென்பதை அப்பொழுதே தெரிந்துகொண்டேன். அம்மா, ஹரித்வாரம் போய்ச் சேர்ந்ததும், யுவராஜ தரிசனம் கிடைக்குமோ இல்லையா? அண்ணாவைப் பார்த்து எத்தனையோ நாளாய்விட்டதே."

இந்துமதி—"ஜிதேந்திரனை என் கண்ணால் எப்போ காணப்போகிறேனென்று அவ்வளவு ஆவலாய் இருக்கிறது எனக்கு. ஹரித்வாரம் போய்ச்சேர இன்னும் எத்தனை நாள் பிடிக்கும்?"

"அம்மா, என்னை இப்படி அரைகுறையான கேள்விகள் கேட்கவேண்டாம். நீங்கள் கேட்கும் இந்தக் கேள்விக்கு ஆயிரம் விடை சொல்லலாம். நாம் பிரயாணம் செய்யும் வேகத்தையும் பிரயாணத்துக்கு உபயோகிக்கும் சாதனத்தையும் யோசித்து இதற்கு விடை சொல்லவேண்டிவரும். நாளொன்றுக்கு நாம் எத்தனை நாழிகை நேரம் செல்வோம் என்பது நம் பிரயாண வேகத்தை நிர்ணயிப்பதாகும் எந்த வாகனத்திலேறிச் செல்வோமென்பது பிரயாண சாதனத்தைத் தீர்மானிப்பதாகும். இவ் விரண்டு அம்சங்களையும் யோசித்துப் பார்த்து என்ன முடிவு ஏற்படுகிறதோ அதை ஆதாரமாக வைத்தே விடை சொல்லவேண்டும். நாம் இப்பொழுது செல்லும் வழியை விட்டு வேறு திசையில் செல்லும் பக்ஷத்திலும், நாம் இப்பொழுது எவ்வளவு நேரம் பிரயாணம் செய்கிறோமோ அதற்கு

நாலத்தனை நாழிகை நேரம், அதாவது, இருபது நான்கு—எண்பது நாழிகை நேரம் பிரயாணம் செய்யும் பட்சத்திலும், குதிரைச் சவாரியை ஒழித்து யானையின் ஹௌதாவி லேறிச் செல்லும் பட்சத்திலும் எவ்வளவு நாளாகும்"—என்று சியாம சுந்தரன் தனக்குள்ளாகவே கணக்கிடத் தொடங்கினான்.

பிரணயினி சிரித்துக்கொண்டே—"அப்படியானால் யானையின் ஹௌதாவைப் புரட்டித் தலைமேல் வைத்துக்கொள்ள வேண்டிய சந்தர்ப்பமும் நேரிடலாம். சியாம சுந்தரரே, நீர் மகா கணித விற்பன்னரா யிருக்கிறீர். உமது கணக்குத் திறமை எங்களுக்கு ருஜுவாய்விட்டது," என்றாள்.

சியாம சுந்தரன்—"பொறுங்கள் இன்னும் ஒரு முத்தொகைக் கணக்குப் போட்டாலொழிய இந்தக் கேள்விக்கு பதில் சொல்ல முடியாது."

அதன் மேல் இராணி இந்துமதி வெறுத்துக் கூறினாள்—"உம்முடைய முத்தொகைக் கணக்கை இப்போ கட்டிவையும்."

"எவ்வளவு விரைவாய் இப்போது நாம் போய்க்கொண்டிருக்கிறோமோ அதே வேகத்தில் போனால் எத்தனை நாளில் ஹரித்வாரம் போய்ச் சேரலாம்—?"

"வேகத்தின் அளவு என்னவோ தெரிந்தே யிருக்கிறது. இனி எந்த வழியாய்ப் போவ தென்பதையே தீர்மானிக்க வேண்டும்."

"எதிரே, நேராக, சமீபமாய் இருக்கும் வழிதான்."

"பேஷ், கணித நிபுணன் கூட இவ்வளவு நேராய்க் கேள்வி போட மாட்டானே. சரி, வேகமும் வழியும் தெரிந்துவிட்டது. இனி—"

"இனியும் இல்லை நுனியும் இல்லை; சுருக்கமாய் நேரான பதில் சொல்ல வேணும்."

இந்துமதி தேவி சிறிது கோவத்துடன் சொன்னாள், "ஹரித்வாரம் இங்கிருந்து எவ்வளவு தூரம்?"

"நடுவில் எங்கும் தங்காமே, வழியைவிட்டு இரண்டடிகூட இந்தண்டை அந்தண்டை அசையாமே, நேர் வழியே சென்றால், இங்கிருந்து அஞ்சு மடங்கு இருபத்தஞ்சு யோசனை தூரம் இருக்கிறது ஹரித்வாரம்."

"அதாது சுமார் எட்டு நாளைய பிரயாணமோ?"

"ஆமாம், மதுரையில் இரண்டு நாள் தங்காமல் போனால் சரியாக எட்டே நாளைய பிரயாணமே. ஆனால் இந்திர புரத்திலிருந்து புறப்பட்டது முதல் குதிரைகளுக்கு ஓய்ச்சலே இல்லை; நாமும் இளைப்பாறவில்லை. ஆகையால் நாம் இன்றைக்கும் நாளைக்கும் மதுரையில் தங்கினால் நன்றாய்இருக்கும். குதிரைகளுக்குங்களைப்புத் தீரும். நாமும் உத்ஸாஹமாயிருப்போம்."

இராணி இந்துமதி கூறினாள்—"அப்படியானால் சரி. ஆனால் மதுரையில் இரண்டு நாள் ஒருவர் கண்ணிலும் படாமல் கழிப்பதெப்படி?"

"மதுரையைப் போன்ற பட்டணத்தில் இரண்டுநாள் வரையில் தலை மறைந்திருப்பது சாத்தியமில்லை. ஆனால் இங்கே ஒரு பணக்கார வியாபாரி எனக்கு அறிமுகமானவர். அவருக்கு மிகப் பெரிய மனோஹரமான மாளிகை இருக்கிறது. அதிலேயே நாம் இரண்டொரு நாள் தங்கலாம். அதிலிருந்து மேலே பிரயாணத்தில் தங்க வேண்டிய இடங்களையும் சுலபமாய் ஏற்பாடு செய்து கொள்ளலாம்."

இந்துமதி தேவி சியாம சுந்தரன் சொன்ன யோசனைக்கு இணங்கினாள். இரண்டு நாள் மதுரையில் தங்குவதென்று நிச்சயமாயிற்று. இப்படிப்பட்ட பாழடைந்த ஊருக்குப் போவதினால் சிறிதும் பிரயோஜனமில்லையென்று பிரணயினி இது வரையில் சொல்லிக் கொண்டிருந்தாள். இவ்விடத்திய கடோரமான மணியோசையினால் காது செவிடுபட்டுப் போமென்றெண்ணினாள். ஆனால் அவர்கள் அவ்வூருக்குள் பிரவேசித்து, ஜனங்கள் கூட்டம் கூட்டமாய்த் தம் தம் காரியங்களில் அமர்ந்திருப்பதைப் பார்த்தும், மதுரா நகரி பாழூர் அல்லவென்றும் அழகிய வாசயோக்கியமான பெரும் பட்டணமென்றும் அவளுக்கு நிச்சயமாயிற்று. மெள்ள மெள்ள சியாம



சுந்தரன் பெரியம்மையையும் பிரதோத மஹாராஜனையும் இட்டுக் கொண்டு தனக்கு அறிமுகமான பணக்கார வியாபாரியின் அழகிய மாளிகைக் கருகே வந்து சேர்ந்தான்.

தன்னுடைய பழைய நண்பன் தன்னைப் பார்த்தவுடனே விரைந்து எதிர்கொண்டு உபசரிக்க வருவான் என்று எண்ணியிருந்தான் சியாம சுந்தரன். ஆகையால் அவன் தூரத்திலிருந்தே அந்த அழகிய மாளிகையை நோக்கிக் குதிரையை விட்டிறங்கி வந்தான். வருகையில் தன் அலங்கோலமாயிருந்த உடையை ஒரு கையால் முழுவதும் ஒழுங்காய்த் தூசி தட்டிச் சுத்தப்படுத்திக் கொண்டே மெள்ள மெள்ள மாளிகைக்குச் சமீபமாய் வந்து நின்றான். அப்பொழுதும் நந்தி குப்தன் இவனை வரவேற்றுபசரிக்க வரவுமில்லை, வர முடியாமைக்காக மன்னிப்புக் கேட்டுக் கொள்ளவுமில்லை.

அப்பொழுது சியாம சுந்தரன் தனக்குள்ளே—"எங்கேயாவது வெளியே போயிருக்கச் கூடும். கால் ழிகையில் திரும்பி வாராதிருக்க மாட்டார்," என்று ாதானப்படுத்திக்கொண்டு அங்கேயே மிக முறுக்காய் ்றிருந்தான். பிரணயினியோ இன்னும் குதிரையின் லேயே ஆரோஹணித்திருந்தாள். இந்துமதி ட்டும் குதிரையினின்றும் இழிந்து ஒரு பக்கமாய் ன்று கொண்டிருந்தாள்.

கால் நாழிகையும் கழிந்தது. ஆனால் சியாம சுந்தரனுடைய நந்திகுப்தன் அவனை அன்புடன் வரவேற்கும் பொருட்டு வரவில்லை.

பிரணயினி—"சியாம சுந்தரரே, நீர் அந்த மாளிகையையாவது அந்தவியாபாரியையாவது மறந்துபோக வில்லையே? உம்முடைய நண்பன் மதுராபுரியிலேயே இருக்கலாம்; ஒரு வேளை அவர் மாளிகை இங்கே இல்லாமல் இருக்கக்கூடும். அல்லது அவர் மாளிகை இங்கே இருக்கலாம், ஆனால் அவர் இங்கே வசிக்காமல் இருக்கக் கூடும். —இரண்டில் எதுவாயிருந்தாலும் நிராசையே பண்ணிக்கொள்ள வேண்டும். ஆகையால் உம்முடைய நண்பன் மதுரையிலேயே வசிக்கிறவரென்றும் அவருடைய மாளிகையும் இங்கேயே இருக்கிறதென்றும் உமக்கு நிச்சயமாய் நினைவிருந்தால், எங்கேயாவது போய்த்தேடும். இல்லாவிட்டால் ஊருக்கு வெளியிலுள்ள அந்த தர்மசாலையில் தங்கியிருப்பதில் தோஷமில்லை. அங்கேயே இரவு முழுவதும் படுத்திருப்போம். பொழுது விடிந்ததும் எழுந்து புறப்பட்டுப் போவோம்."

சியாமசுந்தரன்—"பிரதோத மஹாராஜா, கொஞ்சம் பொறுங்கள். நான் இங்கே வந்திருப்பதுமட்டும் என் மித்திரனுக்குத் தெரியட்டும், பிற்பாடு பார்த்துக்கொள்ளும், அவர் எப்படி ஓடி வருகிறார் என்று."

"அவருக்கு வேறே விதத்தில் தெரிய வருவதைப் பார்க்கிலும் நாமே தெரிவித்துவிட்டாலோ?"

"அப்படியும் செய்யலாம்," என்று ஒப்புக்கொண்டு ஒரு வழிப்போக்கனைப் பார்த்து—"நந்திகுப்தன் செட்டியாரிடம் நான் வந்திருக்கிறேனென்று சொல்லு," என்று கூறிவிட்டு சியாமசுந்தரனுடைய திருமேனி மிக்க கர்வத்துடன் அங்கேயே நின்றது.

அவ் வழிப்போக்கன் அந்த விசித்திரமாகிய 'நான்' என்னும் பதார்த்தத்தை விசித்திரமாய் ஏற இறங்கப் பார்த்துவிட்டுத் தன் வழியே சென்றான். பிறகு இன்னொரு கால் நாழிகை கழிந்தது. அப்போதும் நந்திகுப்தன் செட்டியார் தம் பழைய நண்பனை வரவேற்கக் குதித்தோடி வரவில்லை.

சியாம சுந்தரன் இன்னொரு வழிப்போக்கனுக்கு உத்தரவு பண்ணினான்—"நந்திகுப்தன் செட்டியாரிடம் நான் சியாம சுந்தரன் வந்திருப்பதாய்ச் சொல்லு."

அவனும் சியாமசுந்தரனை நகசிகை பரியந்தம் உற்றுப் பார்த்துக்கொண்டே போய்விட்டான்.

சற்று நேரத்துக்குள் சியாம சுந்தரன் மூன்றாம் வழிப்போக்க னொருவனிடம் சென்று இவ்வாறு கட்டளையிட்டான்—"விரூபாக்ஷன் மகன் சியாம சுந்தரன் என்னும் நான் வந்திருக்கிறேன். நான் வந்திருக்கும் செய்தியை நந்திகுப்தன் செட்டியாருக்குத் தெரியப்படுத்தி அவரை இங்கே சீக்கிரம் அனுப்பு."

"பலே! பராக்கு விருபாக்ஷன் மகனார் சியாம சுந்தரனாருக்கு!" என்று கட்டியம் கூறிக்கொண்டே போய் விட்டான் அவ் வழிப்போக்கனும்.

இப்பொழுது சியாம சுந்தரனுக்குத் தன் நண்பன் மீது மிகுந்த கோபம் மூண்டு விட்டது. அவன் பின்னுமொரு பாட்டை சாரியைப் பிடித்துக்கொண்டு பயமுறுத்திக் கூறினான்—"நந்திகுப்த செட்டியாரிடம் விருபாக்ஷன் மகன் சியாமசுந்தரன்என்னும் நான்இந்திரபுரத்திலிருந்து வந்திருக்கிறேன்; அவருக்கு நான் இளமை தோழன் என்று தெரிவித்து, தயைசெய்து சிரமத்தைப் பாராட்டாமல் இவ்வளவு தூரம் வந்து போகும்படி சொல்லு."

அவ்வழிப்போக்கன்கூட சியாமசுந்தரன் பிதற்றலைச் சட்டை செய்யாமல் வழி நடந்தான்.

பிரணயினி—"சியாம சுந்தரரே, இது என்ன வேடிக்கை? முழு வம்சாவளியையும் பாடிக் காட்டினீர்; இதிஹாஸமெல்லாம் படிப்பித்துக் கேட்பித்தீர்; இவ்வளவு பகீரதப் பிரயத்தனம் செய்து ஒரு வழிப்போக்கனாவது உம்முடைய செய்தியைக் கொண்டு போய்ச் சேர்ப்பிப்பானா? இரவோ சமீபிக்கிறது. நீரே சுயமாய்ப் புறப்பட்டுப்போய் உம்முடைய நந்திகுப்தன் செட்டியார் இருக்கிறாரா இல்லையா வென்று தெரிந்து கொண்டு வாரும்."

வெகு நாள் கழித்துத் தன் நண்பனைத் தான் காண வந்திருக்க, அவன் தன்னை வரவேற்று உபசரியாதிருப்பதையும், அதற்கு மாறாகத் தானே அவன் வீட்டைத் தேடிப் போகவேண்டி நேர்ந்ததையும் நினைக்க நினைக்க சியாம சுந்தரனுக்கு வருத்தம் உண்டாயிற்று. அவன் தனியே இருந்தால், இரண்டு மூன்று நாள்வரை ஊண் உறக்கமின்றிக் காத்திருந்து, தன்னை உபசரிக்கும் பொருட்டு நந்திகுப்தன் வரவை எதிர்பார்த்துக் கிடந்திருப்பான். இப்பொழுதோ அவன் அப்படி செய்யக் கூட வில்லை. விதி யின்றி வேகமாய் அடி யெடுத்து வைத்து விருபாக்ஷன் மகனார் சியாம சுந்தரனார் அவ் வழகிய திரு மாளிகைக்குச் சென்று கால் நாழிகை கழித்துப், போனபடியே வந்த புது மணவாளனைப் போல் முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டு திரும்பி வந்து சேர்ந்தார்.

பிரணயினி வினவினாள்—"ஸ்வாமிகளே, என்ன செய்தி? உமது நண்பன் நந்தகுப்தனார் எங்கே?"

"பரகதி அடைந்து விட்டார்," என்றான் வாடின முகத்துடன் சியாம சுந்தரன்.

அப்பொழுது இந்துமதி முன்வந்து—"எப்போ?" என்று கேட்டாள்.

"பத்து வருஷம் ஆய்விட்டது."

பிரணயினி—"பத்தே வருஷமா? அப்படியானால் உமக்கு அவருடன் அறிமுகம் எப்போது முதல்."

"நாற்பது வருஷத்துக்கு முந்தியே அவரை நான் பார்த்திருப்பதுண்டு. நாங்கள் இளமையில் சேர்ந்து குதித்து விளையாடியிருக்கிறோம்."

"ஆகையால்தான் இவ்வளவு பழமையான அறிமுகமுள்ளவர் வீட்டுக்கு எங்களை அழைத்துப் போக எண்ணியிருந்தீராக்கும்?"

"ஆம்," என்றான் வருத்தத்துடன் சியாமசுந்தரன்.

"சரி, இப்பொழுது மேலே செய்ய வேண்டியதென்ன?"

சியாம சுந்தரன் தன் பல்லவியையே பாடிக் கொண்டு—"இப்போ இனிமேல் என்ன செய்யலாம்? ஆண்டாண்டுதோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ? துக்கத்தைப் பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டும்."

இந்துமதி வேசாறி விளம்பினாள்—"சியாம சுந்தரரே, உம் மரித்துப் போன மித்திரனைப் பற்றி எனக்கு, விசாரிக்க வேண்டுவதில்லை. இப்போ எங்கே போய்த் தங்குவோம் என்பதே கேள்வி."



"அம்மா, என்னுடைய மித்திரன் நினைவு வரவும் எனக்கு அடக்கமுடியாத துக்கம் வந்துவிட்டது. அதனால் நான் தவறி ஏதாவது சொல்லியிருந்தால், மன்னித்தருளவும். நந்திகுப்தனுடைய—"

"இனி நந்திகுப்தனுடையபெயரை எடுக்கவேண்டாம்."

"நான் சொல்வதைக் கொஞ்சம் கேட்க வேண்டும். நந்திகுப்தனுக்கு ஒரு மகன் உண்டு. பெயர் உபகுப்தனாம். அவன் இங்கே சமீபத்திலேயே இருப்பதாகத் தெரிகிறது. கூடுமானால் அவன் வீட்டிலேயே போய்த் தங்கலாம்."

# பாரத நாட்டில் வீரர் மலிந்ததேன்?

நத்தார் தகவில ரென்ப தவரவர்
எச்சத்தாற் காணப் படும்.

ஒவ்வொரு நாட்டின் பெருமையும் அதிலுதித்த பெரியோரின் பெருமையால் அளக்கப்படும். சிக்கந்தர் இருந்த கிரேக்க நாடென்றும், கேசரி பிறந்த ரோம நகரமென்றும், ஹனிபாலன் பிறந்த கார்த்தாகமென்றும்,நப்போலியன்இலகியபிரான்ஸென்றும், வாஷிங்தன் உதித்த அமெரிக்காவென்றும் உலகு புகழ் பேசுகையில், ஒவ்வொரு இந்திய மனமும், "நம் நாட்டில் அத்தகைய வீரர் இலரோ?நாகரீக நாடுகளுக்கு நாகரீகங் கற்பித்த நமது பாரத நாட்டிற்கு வீர மக்கட் பேறு குறையோ!" என்று வினவுகிறது. அம் மனதை நம் நாட்டுச் சரித்திரங்கள், இராமாயணம், பாரதம், பெரிய புராணம், விஷ்ணு புராணம், பாகவதம் முதலியவற்றில் சற்று செலுத்தினால் எந் நாட்டின் வீரச் சரிதைகளும் வெட்கும்படியான சோதிச் சிம்மம்போன்ற நமது பாரத வீரரின் திரு உரு எதிர் வந்து நிற்கும்.

ஐந்தினை யடக்கிய ஆன்ம வீரர்கள்
ஐந்தினை யாளுறும் ஆண்மை வீரர்கள்
ஐம்படன் செம்மனை யணிசெய் வீரர்கள்
ஐந்தினர்க் கணவி அருமை வீரர்கள்,

சினத்தோ டுலகைச் செயிப்பதினி யாரும்
மனமடக்கி வாழ்தலே மாண்பு,

என்பதற்கிணங்க, தம் புலன்களை நெறியறியுப்த்துத் தன்னயம் விடுத்து, ஆசையை வென்று, புவியின் நலத்திற்காகக், கல்வி,வழிபாடு, முதலியவற்றில் உழைத்த ஆத்ம வீரர் எத்தனை கோடி இப் புண்ணிய பூமியை அலங்கரித்தனர்! சோர்வு விடுத்துச் சுயேச்சையுடன் தமது தோள் வலியையும் வாள் வலிமையும் தம் நாட்டுப் பகைவர்மீது, அறம் பிழைத்த அரக்கர் மீது, செலுத்தி, பாரத தேவியின் ஊழியத்தில் தமது இறுதி மூச்சுப் பிரிவதே வீடென விரும்பிய வீர க்ஷத்திரியர் எத்தனை பேரை நமது பாரத அன்னை படைத்திருக்கிறாள்! ஐங்கடன் முவாது இல்லறத்தைச் சுமந்தும்,தன்னயந்துறந்தும்,தேவிற்கும்நாட்டிற்கும் ஊழியஞ் செய்த எத்தனை பெண் மணிகள், எத்தனை ஆண் சிம்மங்கள் பாரத தேவியின் பரிதிமைந்தராயினர்! ஆருயிர்ப் பணியே ஐயனின் பணியெனத் தேர்ந்து தனது சமூகத்தினருக்காகப் பயிர்த்தொழிலும் வேண்டிய தொண்டும் செய்யும் பெரும் பேற்றினைப் பெற்ற வீரத் தொண்டர்கள் பல் கோடியைப் பயந்த நமது பாரத நாடு, தனது வெற்றிக் கோபுரத்தைத் தெளிசங்கரத்திலும் மேலாகவே உயர்த்தி நிற்கிறது.

வசிட்டன், கௌசிகன், மனு, பராசரர், சுகர், அகத்தியர், வள்ளுவர், தாயுமானவர், பட்டினத்தடிகள், இராமலிங்க ஸ்வாமிகள், பரமஹம்ஸர், இராம தீர்த்தர் போன்ற தன்னையறிந்து அனைத்தையும் அறிந்த ஆன்ம வீரரை வணங்காத சிரங்களுளவோ! ஸ்ரீ ராமர், கண்ணன், அருச்சுனன், சிபி, அனபாய சோழன், ராஜராஜ சோழன், பொற்கைப் பாண்டியன், சிவாஜி, ப்ரதாப் சிங், குரு கோவிந்தன், முதலிய ஜெய வீரர்களைப் புகழாத வாய்களும் உளவோ! அவர்களைப்பற்றி எண்ணுங்காலே ஒரு வீர வுணர்ச்சி தன் நாம்புகளூடு பாயாத இந்தியரும் உளரோ! இன்னும் ராம ராஜ்யம், குப்த ராஜ்யம், பாண்டிய ராஜ்யங்களின் மடியில் வளர்ந்த கலைவல்ல வீரர்களை எண்ண முடியுமோ? பாரத தேவியின் பண்டை மைந்தர் ஒவ்வொருவரும் அவளுக்கு ஒரு கையென விளங்கினர். போரும், அரசாங்கமும், சிற்பமும், கல்வியும், கலைகளும், ஒரு வீர வுணர்ச்சியுடன், போகமாக எண்ணி அக் காலத்தில் செய்யப்பட்டன. பழைய கோவில்களில் நமது பெரியோரின் சிற்ப வன்மையைப் பார்க்கிறோம். பல கோட்டைகளில், அவர்களுடைய போர் வன்மையைக் காண்கிறோம். பல தர்ம ஸ்தாபனங்களில் அவர்களுடைய ஆருயிர் வழிபாட்டின் ஆர்வத்தைக் காண்கிறோம். இந்தப் பாரத நாட்டின் ஒவ்வொரு துளி மண்ணும் மலை நிகர் மாண்மையரால் புனிதஞ் செய்யப்பட்டது. எத்தனை கோடிக் கோடி வீரர்கள் தங்கள் உயிரை, அறத்திற்காக அர்ப்பணித்து வீரவின்னடைந்திருக்கின்றனர்! எத்தனை பெரியோர்களின் ஞாபகச் சின்னங்களைச் சரித்திர மூலமாயும், கட்டிடங்கள், கல்வெட்டுகள், பாட்டுகளின் மூலமாயும் பாரத தேவி நமக்குக் காட்டி இன்னும் நம்மை ஊக்கி நிற்கின்றனள்! தேசு பொருந்திய தாசுமஹாலையும், சித்தூர்க் கோட்டை, செஞ்சிக்கோட்டை, ராஜக்கோட்டை, அஜந்தாக் குகை, குவாலியர் கோட்டை, டேக்கா முதலிய விடங்கள் நமக்கு எத்துணை வீரங் கொடுத்து நிற்கின்றன!

பண்டைய இந்தியர் இவ்வளவு சீர்மையுற்றதற்குக் காரணம் என்ன? அவர்கள் தங்கள் வாழ்வின் அறத்தைச் சரியாக அறிந்து கொண்டது தான். உலகம் ஒரு கோயில். அதன் வினைக் கனியாகவே மக்கள் படைக்கப்படுகின்றனர். ஒவ்வொருவரும் ஒவ்வொரு வினையைச் செய்யவே அனுப்பப்படுகின்றனர். அவ்வினையை அறிந்து அதை நன்கு செய்து முடிப்பதே ஈசனருளை அடையும் வழி என்று ஒவ்வொரு பாரதனும் அறிந்திருந்தான். ஊணும், உறக்கமும், ஊடலும், கூடலும், ஈனலும், பேணலுமான அன்னமய கோச சம்பந்தமான வேலைகள் விலங்குகளுக்கும் பொதுவாகவே புள்ளன. ஆறாம் பகுத்தறிவு படைத்த மனிதனே, அன்பு, அறம், நன்றி, இரக்கம், பிறர்க்கென வாழல் முதலிய அரிய குணங்களுடன், பெருத்த மூளையுடன் உலகின் மற்ற உயிரினங்களின் பொறுப்பை வகிக்கிறான்.

> மக்கள் கருமத்தால் மூவகைப்படுவர்: மக்களுள் விலங்கு, மக்களுள் மனிதன் (வீரன்) மக்களுள் தேவன்

என்றவாறு,

விலங்குகளுக்கும் மக்களுக்கும் பொதுவாயுள்ள அன்னமயகோச விவகாரங்களையே கவனித்துக்கொண்டு, சினம், பொறாமை, தன்னயம் நசை, தீய எண்ணம், முதலிய இருள் தன்மைகளுக்கு அடிமையாக இருப்பவன் மக்களுள் விலங்காவான். அவன் வேண்டுமென்று பிறருக்குத் தீங்கிழைப்பவன். அவன் முடிவில் தனக்கே தீமையைத் தேடிக்கொள்ளுவான். இரக்கமும் பகுத்தறிவும் அவனிடம் அரிது. சத்தியமும் ஞானமும், தவமும், இரண்டு சொல்லுமான உத்தமரின் குணங்கள் அவனிடம் இரா. எவ்வகையிலாயினும், வயிற்றை வளர்த்து, சிற்றின்பம் நுகர்ந்து சிறு வாழ்வு வாழ்ந்து சாவெனும் இருட்குகையுள் நுழைபவனே அவன் செய்யும் போர்களெல்லாம் பேராசையுடன் பிறர் உடைமைகளை வௌவிடவே யாகும், தர்மம் அதன் அடிப்படையாயிருக்காது. எளியோரை நசுக்கி, அவர்கள் செல்வத்தையும் வலிமையையும் உறிஞ்சுவர் விலங்கர். அவர்கள் வாணிபமெல்லாம் தன்னயத்தோடு பிற நாடுகளின் செல்வத்தை உறிஞ்சுந்தகையன. தங்களை உயர்த்திக்கொள்வதில் பிறரைக் கெடுக்கும் பித்துள்ளவர் அவரே. அவர்கள் கண்டு பிடிக்கும் பொறிகளும் ஆயுதங்களும் தன்னினும் எளியோரை விரைவிற் கொன்று தாம் முன்னேறுவதற்கேயாம். அவர்பலம் உடல் பலம். தெய்வ பலத்தின் நம்பிக்கையே அவனிடமில்லை. இப்படிப்பட்ட மனிதனுவது, ஜாதியாவது பூமாதேவிக்குப் பெருஞ் சுமையேயன்றி வேறில்லை.

மனிதருள் மனிதன் வீர அமிசமுள்ளவன். சோர்வு விடுத்துச் சுயேச்சை யடைந்தவன். நன் முயற்சியுடையவன். தான் கொண்ட உறுதியான கொள்கைக்காக உயிரை ஈபவன். சத்தியத்திற்காகவும் தர்மத்திற்காகவும் வாழுபவன். புகழ்பட வாழ்ந்து தன் பெயரை உலகின் மனதில் பதிய வைப்போன். அவன் செய்யும் போர்களெல்லாம் அறத்தை நிலைநிறுத்தவும் மறத்தைக் கண்டிக்கவுமே. கடவுள் கொடுத்த இந்தக் காய ஆலயத்தைப் பலமாகவும், சுத்தமாகவும் வைத்துக் கொண்டு அதைக் கடவுள் தனக்குக் கொடுத்த வினையிலேயே இட மனிதன் கடமைப் பட்டிருக்கிறான். பிறருக்கு அடிமையாகாது தன் உடைலுணை ஒரு சிறு தொழிலால் போதிய அளவு அடைவது மனிதன் கடமை. தைரியமும் வீரமும், நேர்மையும், உறுதியும், இரக்கமும் மனிதனுக்குரிய குணங்கள். வீரன் உலகின் புகழ்க்குரியவன்.

மனிதருள் தேவன் தன்னையறிந்தவன். ஆழ்ந்த அத்யாத்ம உணர்ச்சியுள்ளவன். தன்னயத்தை முற்றும் துறந்தவன். கீதையில் சொல்லியிருக்கிறபடி பயமின்மையும், தூய வாழ்வும், ஞான யோகத்தில் உறுதியும், தியாகமும், புலனடக்கமும், வேத ஆராய்ச்சியும்; விரதமும், நேர்மையும், அஹிம்சையும், உண்மையும், கோபமின்மையும், துறவும், சாந்தமும், தயையும், அவாவின்மையும், இனிமையான பேச்சும், மரியாதையும், நிலைபெற்ற உள்ளமும், பலமும், மன்னிக்கும் தன்மையும், பொறுமையும், சுத்தமும் கொண்டு, பொறாமையும், கர்வம் இன்மையும், தேவ அமிசமாகப் பிறந்த மனிதனுடைய குணங்கள். மனோ வாக்குக் காய வைராக்கிய முள்ளவன் தேவன். இதமும், உண்மையும், வேத போதலும் வாயினால் செய்யும், வைராக்கியம். உயர்ந்த எண்ணங்களும், அன்பும், அடக்கமும்; உண்மையான நினைப்பும், மன வைராக்கியமாகும். தேவர், பெரியோர், குருமார் இவர்கள் சேவையும், சுசியும், நேர்மையும், கற்பும், அஹிம்சையும், சரீர வைராக்கியம் என்று கீதை கூறுகிறது. இந்தகைய தேவகுணமுள்ளவன் தன்னையே பரோபகாரத்தில் கரைத்துக் கொள்ளுகிறான். ஒரு விளக்கு எப்படித் தன் எண்ணெயும் திரியும் அழிவதைக் கருதாது உலகிற்கு வெளிச்சந் தருகிறதோ அது போலவே தான் நோயுறினும், சிறைப்படினும், சிதைவுறினும், உலகிற்கு இதஞ் செய்பவன் தேவனாவன். ஏசுநாதரும், புத்தரும், மஹாத்மாவும், இதற்கு உதாரணராவர். இவர்கள் வாழ்வே அறவாழ்வு.

பண்டை இந்தியர் மேலேசொன்ன அறவாழ்வு வாழ்ந்தனர். தம் கடமையை யுணர்ந்து மனச்சான்றின் ஏவுதல்படி ஒழுகினர். உண்மைத் தாயாகவும், ஞானத்தைத் தகப்பனாகவும், அறத்தைச் சகோதரனாகவும், தயையைத் தோழனாக

வும், சாந்தத்தைப் பத்தினியாகவும்; மன்னிக்கும் தன்மையைப் புத்திரனாகவும் கொண்டு வாழ்ந்த தருமபுத்திரன் வாழ்வை யாரே அறியார்! மாயா நரகைத் தன்எதிரே கண்ட தருமன், அதில் துயர்ப்படும் அனைவரும், "ஐயனே, நீர் எம்மை நோக்கி வரவர எமது நரக வாதனை தணிகிறது," என்றலும் "அடியேன் உங்கள் வேதனை முற்றுந் தணிய நரகத்திலேயே வீழ்கிறேன்," என்று சொன்னதைச் செய்கையிற் காட்டினான். பிறகு தரும புத்திரனின் தியாகத்தை மிகவும் மெச்சி, இந்திரனே அவனை சுவர்க்கத்திற் கழைத்துச் சென்றான்! உலகை யெல்லாம் பாழ்படுத்திக்கொண்டிருந்த மலைகளின் சிறகரிய, தவ வலியால் வஜ்ராயுதம் போன்ற உறுதி பெற்ற தன் முதுகெலும்பை ததீசி முனிவர் இந்திரனுக்கு அளித்தார்! தனது என்பையும் தம் நாட்டின் நன்மைக்கே உரிமையாக்கும் உயர்ந்தோர் வாழ்ந்த நாடன்றோ நமது பாரத தேசம்! கீர்த்தியில்லாத வேந்தும், தவமில்லாத அந்தணரும், தொழிலில்லாத மாந்தரும், இந் நாட்டில் இருந்ததில்லை. பிற நாடுகளின் எழுச்சியையும் நாகரீகத்தையும் நம் நாட்டோடு ஒப்பிடுங்கால் அவை யெல்லாம் நேற்று உதித்தவை போன்றன. நாகரீகம் என்னும் பதம் மற்றைய நாடுகளில் உச்சரிக்கப்படு முன்னரே நம் நாடு நாகரீகத்தின் எல்லையைக் கண்டிருந்தது. கி. மு. ௩000-த்திலேயே இந்துக்கள் வான சாஸ்திரத்திலும் க்ஷேத்திர கணிதத்திலும் பூரண ஞான மடைந்திருந்தனர். எல்லோரா, எலிபந்தா போன்ற மலைக் கோயில்களைப் பார்த்தாலே, நம் நாட்டின் பழமை விளங்கும். இந்திய நாகரீகமே உலகில் முந்திய நாகரீகம். எகிப்து, யவனம், பாரசீகம், அமெரிக்கா, முதலிய இடங்களில் இந்துக்கள் குடியேறித் தம் நாகரீகத்தைப் பரவச் செய்தனர். சீனமும் ஜப்பானும் ஸ்காந்திநேவியாவும் தங்கள் நாகரீகத்தை இந்தியாவினின்றே கற்றன.

நமது பழைய பாரத நாட்டில் வீரர் மலிந்ததற்கு மற்றொரு காரணம் நம் மரசின் உயர்ந்த நீதி. பசியும், பிணியும், வறுமையும், மடமையும் மக்கள் வாழ்வைச் சிதைக்காது மன்னர் ஆண்டனர்.

பிணியின்மை செல்வம், விளைவின்பம் ஏமம்
அணி யென்ப நாட்டிற்கிவ் வைந்து,

என்பதற்கிணங்க நாடு நலம் பெற வேண்டிய நல் வளங்களைப் பெற்றிருந்தது.

சிற்றூரில் தேயம் தெரியும்படி யெல்லாம்
வற்றாது ஓங்கிடவே வாழ்,

என்றபடி, நமது கிராம ஆட்சியே தேச ஆட்சியைத் தெரிவித்தது. பஞ்சாயத்தார் மனச்சாட்சிக்கு மாறின்றி எளிதாய் அனைவருக்கும் நீதி கொடுத்ததும், தொழிலாளிகளுக்குப் போதிய அளவு மானியங்களித்து தொழில்களை ஓச்சியதும், கலைஞருக்கு வேண்டிய பரிசும் ஆதரவும் தரப்பட்டதும், நீர்ப்பாய்ச்சல், பயிர்த்தொழில் கைத்தொழில், வாணிபம், தீர்வைகள், வரிகள், கிராமத்திற்கு வரும் அயலார்களைக் கவனித்தல் முதலிய வற்றிற்காக வெவ்வேறு இலாகாக்கள் ஏற்படுத்தி ஒழுங்காக ஆட்சிமுறை நடந்ததுவும், சரித்திரங்களும் அயல் நாட்டுப் பிரயாணிகளின் குறிப்புகளும் கூறுகையில், நமது மனம் நம்மை அப்படிப்பட்ட அரசாட்சிக்குக் கூவி யழைக்கிறது! ஒரு முறை ஒரு பாண்டிய மன்னன் ஆயிரக்கால் மண்டபத்தில் தன் வேலையிலேயே கவனமாயிருந்த சிற்பி யொருவனுக்கு வெற்றிலை மடித்துக் கொடுப்போனாயினான்! பொற்கைப் பாண்டியன் மாறுவேடம் பூண்டு தன் ஆட்சியின் குறைகளை யறிந்து களைந்து தன் குடிகளின் தேவைகளை யீந்தான். ஒரு முறை தான் நள்ளிரவில் ஒரு அந்தணன் வீட்டுக்கதவை தல்லென்னக்கோடு தட்டியும், அது அந்தணனுக்கு ஐயம்



விளைத்ததால் தட்டிய கையைக் குறைத்தான்! எள்ளளவும் தன் குடிகளுக்கு இடர்வாராது முந்கால மன்னர் ஆண்டதனா லன்றோ நம்நாட்டு மன்னர்,

தாயொக்கும் அன்பில்; தவமொக்கும் நலம் பயப்பில்;
சேயொக்கும் முன்னின்றொருசெல்கதியுய்க்குநீரால்;
நோயொக்கும் மென்னில் மருந் தொக்கும்;நுணங்கு [கேள்வி
ஆயப் புகுங்கால் அறிவொக்கும் எவர்க்கு மன்னன்,

என்றும், "உயிரெலாம் உறைவதோர் உடம்பு மாயினான்," என்றும் போற்றப் பெற்றுள்ளார். ஒரு இளங் கன்று தன் மகனுடைய தேர்க்காலிடைப்பட்டு இறந்ததாக முறையிட்ட ஒரு பசுவிற்கு நீதி யளிக்கும் பொருட்டு, ஒருமைந்தன் தன் குலத்திற் குள்ளான் என்பது முனாராது தருமம் தன் வழிச்செல்கை கடனென்று தன் மைந்தனை வீதிவிடங்கனைத் தேர்க் காலில் கொடுத்தான் அனபாய சோழன். அந்த நீதியுணர்ச்சியோடு நிலவிய நமது ஆட்சியே மக்கள் மனதை உயர்த்தியது. வீரத்தனத்திற்கு ஒரு மதிப்பும் ஆதரவும் இருந்தகாலம் எப்போது திரும்புமோ!

இராமாயண மஹாபாரதநாட்களில் நம் நாட்டு வீரரின் தொகையை எண்ணத் தொலையாது. புத்தருக்குப் பிறகும், சந்திரகுப்தன், சமுத்திரகுப்தன், அசோகன், பாலாதித்தியன், சிலாதித்தியன், ஸ்ரீஹர்ஷன் முதலியோர் காலங்களிலும் நம்நாடு வீரமைந்தரால் இலகியது. பிருதிவிராஜன் முகம்மது கோரியோடு போர்செய்து வீழ்ந்தபோது வீரவிளக்கு "பக் பக்" கென்று அவியத் தொடங்கியது. அவ் வீரவிளக்கு அணையாது அடிக்கடி தூண்டிக்கொண்டிருந்தவர்கள் இராஜபுத்திரரும், மராட்டியரும், சீக்கியருமே.

முகம்மதிய மன்னர் இந்திய வீரர்களைத் தங்கள் ஆட்சியில் ஆதரித்தனர் எனினும் உண்மையான வீரருக்கு நாட்டன்பு மிகுந்து அயல் நாட்டரசனிடமிருந்து நமது நாட்டை மீட்க வேண்டும் என்று தோன்றிற்று. இந்த உணர்ச்சி கொழுந்துவிட்டெரியத் தொடங்கியதும் அநேகரின்று கணக்கில்லாதவீரர் உதித்தனர். "நம்நாடு நம் தருமம்" என்ற உணர்ச்சியே உலகம் வியக்கத்தக்க ஜெயவீரனைத் தோற்றியது "இறந்தால் வீரசுவர்க்க மடைகிறாய், ஜெயித்தால் பூமியை ஆளுகிறாய்; ஆகலின் எழுந்து போர்செய்; அது க்ஷத்ரியன் கடமை; தன் கடமையைச் செய்யாதவர் இகழ்ப்படுவார், பாபமடைவார்; பலனைக் கருதாது, கடவுளிடம் மனதைவைத்து உன் கர்மத்தைச்செய்." என்னும் பகவத் கீதையின் வீரவாக்கியம் பலர் நரம்பிற்கு வீரவலி ஈந்தது.

ராணா பிரதாப சிங்கனின் வீரமும், பொறுமையும், தேசாபிமானமும் இணை காணத்தக்கதன்றோ? படைபெருக்க அக்பருடன் அவனினத்தவரும், பணத்திற்கும், உத்யோகத்திற்கும், ஆசைப்பட்டுப்போய்ச் சேர்ந்தனர். அவன் தனியாயிருந்து மலையில் வசிக்கும் பில்லர்களைத் துணைகொண்டு அக்பருடன் ௨௫ ஆண்டுகள் கடும்போர் புரிந்தான். தனது நாட்டிற்காக வறுமையுண்டான், கடுமையான விரதங்களைக் கொண்டான். சொல்லொணாத் துயருழன்றான். ஆனால் தன் மானத்தை மட்டும் அக்பருக்கு விற்க எண்ணவில்லை. இன்று பிரதாப சிங்கனை எண்ணினாலே நமக்கொரு வீரவுணர்ச்சி எழுகின்றது. ராவல் சாதி பென்ற ஒரு அக்னிகுலத்து வீரன் நோயினால் இறப்பது குறைவென்று, தன் சாகும் படுக்கையினின்றெழுந்து ஒரு மன்னனோடு வலியில் போர்செய்திறந்தான்! பகைவன் கோட்டைக்குள் புகுந்துவெற்றி பெறுவதற்குத் தடையாக, யானை முட்டித்தள்ள முடியாமல் கோட்டைக் கதவில் இரும்புமுளைகள் இருப்பதைக்கண்டு யானைக்கு

மெத்தெனும்படி தன் மார்பை யீந்த அந்த சக்தாவத ராஜபுத்திரனின் பெருமைதான் என்னே? அரசிளங் குமாரனை உதய சிங்கனைக் காக்கத்தன் மகவையே வனவீரனதுகத்திக்கிரையாக்கிய பன்னாவின் வீரமன்றிதான், எத்தகையது? ஔரங்கஜேபின் மனதைக் கலக்கச் செய்த துர்க்காதாசின் வீரப் பெருமை விளம்பவும் படுமோ! தன் பதினொரு செல்வ மைந்தரையும் அல்லாவுதீனுடன் போர்செய்து விழ அனுப்பிய சித்தூரின் இராணியான பத்மாவதியின் நாட்டன்பும், தாராபாயின் வீரப் பெருக்கும், ராணி துர்க்காவதியின் அற்புதத்துணிவும், நீலா என்ற ஒரு கற்பரசி பகைவனைக் கொன்று தன் கணவனை மீட்ட காட்சியும் கவி பெற்றுப் புவி போற்றும் செயல்களன்றோ! இராஜபுத்திர வீரச்சோலை இவ்வளவு ரமணீயமாயிருக்கிறது! நாட்டன்பும் கடமையுணர்ச்சியுமே இவ்வீரரை எழுப்பின.

சீக்கியர் ஒருவீர ஜாதி. அவர்களும் "சுதந்திரம், சுதர்மம்" என்னும் ஆவேச மொழிகளில் கிளப்பப்பட்டவரே. பயங்கரமான தியாகம் செய்து அன்றுமுதல் இன்றுவரை தியாகத் தீயை அணையாமல் வைத்திருப்போர் அகாலிய சீக்கியரே. குரு அருச்சுனனைப்பகைவர் சுடுசட்டியில்வாட்டி வதக்கினு மவன்தன் மதத்தை விடவில்லை. தேகபகதூர் தன் மதத்திற்காகத் தன்கழுத்தை ஈந்தான். குரு கோவிந்தனோ தன்சிஷ்யரை உண்மையான வீரராக்கி பெரும் கோட்டைகள் கட்டி போர்முனையில் ஔரங்கஜேபிற்கு அபார வேலை யீந்தான். ஜொராவர், பத்தே என்ற அவன் மைந்தர் அரசாங்கத்தார் தம்மைச்சுற்றிச் செங்கற் சுவரெடுத்துப் புதைத்துக்கொன்ற போதினும் ஸத் ஸ்ரீ அகால் என்றே கூவினார்கள். சுந்தரி மாயி பாகோ என்ற பெண்கள் குருகோவிந்தனோடு சேர்ந்து வாளேந்தித் தம் நாட்டிற்காகப் போர் செய்தனர். குருகோவிந்தன் ஆனந்த பூரில் பகைவர்களால் நெருக்குண்டபோது சில சிஷ்யர் மோசமாக இரவில் தம் தலைவனைவிட்டு வீட்டிற்கு ஓடினர். ஆனால் அவர்களுடைய வீர மனைவியர், 'நீங்கள் இப்படிப் பேடித்தனமாகத் திரும்பி வருவது எங்களுக்கு லஜ்ஜை. மறுபடி குருவிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு நாட்டிற்காகப் போர்செய்யுங்கள்' என்று அனுப்பி விட்டனர்! இன்றைக்கும் அகாலியர், ௩௦,௦௦௦ பேர் சிறை புகுந்தும், ௪௦௦ பேர் இறந்தும், ௨௦௦ பேர் காயப்பட்டும், தமது சத்தியாக்கிரகத்தைச் செய்து தர்மத்தைக் காக்கின்றனர்.

மஹாராஷ்டிரரை ஒரு வீர ஜாதியாகத் திரட்டித் தர்ம யுத்தம் செய்த சக்கரவர்த்தி சிவாஜியின் சரிதையை அறியாத பாரதரும் உண்டோ? தன் குருவிற்காகப் புலிப்பால் கறந்து வந்தான். பகைவர் சூழ்ந்தாலும் பக்தியில தன்னை மறந்து தன் காப்பைக் கடவுளிடம் ஒப்படைத்திருப்பான். ஒரு முறை ராமதாஸருக்குத் தனது அரசை யீந்து பின்பு அவர் ஆணையால்பெற்று ஆண்டான் ஔரங்கஜேபிற்கு அவன் கொடுத்த அச்சத்தை அளவிட முடியுமா! இந்த தர்மமே சிவாஜியா உதித்தது.

தமிழ்நாட்டின் வீரத்தனம் பேர்போனதன்றோ சேர சோழ பாண்டியருள் கணக்கற்ற வீர உதித்திருந்தனர். சிறுவன் களிறெறிந்து ப டனென்னும் உவகை என்ற ஞான்றினு பெரிதே என்னும் பெண்களும், தன் கணவ னேற்றைப்போர்க்களத்தில் இறந்திருக்க இன்னு செரு.'பறை கேட்க வியப்புற்று, தன் மற்றொ மைந்தன் கையில் வேல் கொடுத்து, எண்ணெ தடவிக் குடுமியைச் சீவி, போர் முக மனுப்பி அந்தாயின் நாட்டன்பும், தன் மகன் போ முனைக்கு அஞ்சி ஓடி வந்தானென்றதும் "மண் மர்க்குடைந்தனனாயின், உண்டமுலை யறுத்திடுவ யான்" என்று சினஇ அங்கே அவன் பட் தைப் பார்க்க, "ஈன்ற ஞான்றினும் பெ



துவந்த" முதியவளின் வீரமும், நம் முன் நிற்கிறது. புறநானூறும், கலிங்கத்துப் பரணியும், இன்னும் பல்வேறு நூல்களும் தமிழர் வீரத்தை எடுத்துரைக்கும். அக்காலத்தில் மக்கள் வீரச்செயலுக்கே வாழ்ந்தனர். தேசிங்கு ராஜனின் போர்த் திறம் கவியை யலங்கரிக்கிறதன்றோ?

முன் சொன்ன வீரரெல்லாம் வாள் வீரர்கள். பொறுமையாலும், நோவுறினும் நோவியாத தெய்வ குணத்தாலும் தமது சத்தியத்தைக் காத்த ஆத்ம வீரர் நமது நாட்டிலேதான் பல்கோடி புகுந்தனர். ஏசுநாதர், புத்தர், அப்பர், பிரஹலாதன், அரிச்சந்திரன் முதலியோர் இத்தகைய அமர வீரர். பதி, பாலன், நிதி முதலிய எல்லாவற்றையும் இழந்தும், அரிச்சந்திரன் தன் கட்டுரையைக் கடைப்பிடித்த புண்ணியகதையை இன்னும் பாரத நாடு கண்ணியமாகப் போற்றுகிறது! "நாம் ஆர்க்கும் குடியல்லோம்: நமனை யஞ்சோம்," "அஞ்சுவ தியாதொன்று மில்லை. அஞ்ச வருவதுமில்லை," என்ற வீர வாக்கைப் பொழிந்த அப்பர், மஹேந்திர வர்மனைப் பொறுமையால் வென்ற தன்மையைப் புகலாத தமிழரும் உளரோ! அப்பர் கைலையந் செல்லச் செய்து கொண்ட உறுதியைப் போற்றாதாரும் உளரோ!

"வாளு நாயகன் கையிலின் இருக்கை கண்டல்லால் மாளுமிவ்வுடல் கொண்டு மீளேன்,"

என்ற அந்த உறுதி அந்நாளில் நிலவக்கண்டன்றோ அத்தகைய கடவுள் வீரர் நம் நாட்டை அலங்கரித்தனர்? அத்தகைய சாந்த வீரரே தற்போது நாட்டின் தேவை.

அஹிம்சை என்னும் கொடி உயர்த்தப்பட்டுள்ளது. பொறுமையும் சத்தியமும் வென்றுவிடுகிறது. உலகில் போர் ஒடுங்கிப் பொறுமை விளங்கும் காலம் வந்துவிட்டது. எல்லாவுயிர்களும் சுதந்திரத்துடன் இன்புற்றிருக்கும் புதுயுகம் பூத்திருக்கிறது. "எளிமையும் பொறுமையும், தியாகமும், சத்தியமும், அணிந்த வீரர்களே, நாட்டு விடுதலைக்கு வாருங்கள்," என்று பாரத மாதா அழைக்கின்றனள். மஹாத்மா அறிவத்தால் நமக்கு வழி காட்டி அழைத்துச் செல்லுகிறார். நம் நாடு, நம் சுதந்திரம், நம் பிறப்புரிமை, நமது சுதர்மம் என்ற உணர்ச்சி நம் முன் ஓங்கி நம்மைத் தூண்டுமாக! வீரர்களே முன் வாருங்கள்! தியாகக் கடலில் குதியுங்கள்!

வீரரன்னையை விளக்கொளி யெனப்புவி யேத்தும்
பாரி னன்னையை ஞானமாய் பரிதியை யன்பு
சேரு மன்னையைப் பாரத தேவியைப் பூவிற்
சீரினன்னையைச் சிந்தையிற் களிப்பெதும் வீடே!

சுத்தானந்த பாரதி.

# ஸ்வென் ஹெதின்

(ஸ்ரீமான் சி. ஸுப்ரஹ்மண்ய சர்மா எழுதியது)

கைலாச யாத்திரை யென்றால் நமக்கு இக் காலத்தில் பெரும் பாடாகத்தான் தோன்றுகிறது. ஔவை, ஒரு கிழட்டுப் பாட்டி, மானிட எறுகள் எனத் தகும் இரா பக்தர்கள் மத்தியில் அவர்களுக்குச் சிறிதும் பின் னடையாது, சலியாது, எல்லோருக்கும் முன்னதாகவே கைலாசம் சென்று சிவ பிரானைத் தொழுது நின்றதை மறந்துவிட்டோம். இன்று! அவளது பக்தித் திறம் வியக்கவைகளவே அவனைத் துக்கிச் சென்றும் என்று

கதை கட்டிவிட்டு அவளுடைய சுயப் பெருமையை அவளுடைய இஷ்ட தெய்வத்தின்பால் ஏற்றி உண்மையை நிதர்சனமாகக் காணக்கண் கூசிப்பின்னடைகிறோம். எப்பாடு பட்டாயினும் திருக் கைலாசத்தில் எம்பெருமானைத் தரிசித்தேதீருவோம்என்றுகால்தேயக் கைதேய ஆக்கையால் ஊர்ந்தாயினும் மேனோக்கிச் சென்ற பக்தர் பிரானின் வழி வந்த நாமும், "ஹா! கைலாச யாத்திரையா? யாரால் முடியும்?" என அலமருகிறோம்.

௨௬௦௦௦ அடி—ஐந்தரை மைல்— உயரத்திற்கு மேல் வெகு கம்பீரத்துடன் கிளம்பி வெண் சிகரம் தாங்கிமிளிரும் நம் கௌரி சங்கரத்தை உலகுக்கே அதி உன்னத சிகரம் என்றிருப்பதாலேயே அதன் மேலேறி இவ்வுலக முழுதையும் கண் காணிக்க வேணுமென்று அவாமேலிட்டு வெள்ளையர்கள் ஜதை ஜதையாய் முன்வருவதைக் கேட்டு நாம் ஆச்சரிய மடைகிறோம். தமக்கு முன் சென்றவர்கள் பல விதத்திலும் கஷ்டப்பட்டார்கள் என்று தெரிந்தும்கூட அவர்களுடைய கஷ்டத்தையே ஓர் அளவு குறியாய்க் கொண்டு பின்னையோர் முன்னிலும் அதிக ஊக்கத்துடன் புறப்படுவதை நம்மனோர் கண்டு வெட்கப்பட வேண்டியதே! அவர்களுடைய முயற்சிகளுக்குத் தக்க பலனையும் 'கர்ம தேவதை' கைம்மேல் கொடுத்து அவர்களைப் போற்றுகின்றாள். என்னே முயற்சியின் செழுமை! பிடிவாதத்தின் பிரதாபம்

அதி உன்னதமான ஓர் மேட்டு நிலம். இவ்வுலகின் சிகரம்என்றேசொல்லலாம். எப்பாகமாவது சமுத்திரமட்டத்திற்கு மேல் பன்னீராயிரம் அடி உயரத்திற்குக் கீழில்லை. சதா மழை சொட்டுச் சொட்டு என்றே இருக்கும். துருவப் பிரதேசத்திய குளிரை இங்கு அனுபவிக்கலாம். கங்கை, பிரஹ்மபுத்ரன் போன்ற பிரம்மாண்டமான நதிகளின் உற்பவ ஸ்தானமாகிய இப்பரந்த வெளியில் அங்கங்கே காணப்படும் பள்ளத்தாக்குகளில் தவிர வேறு எங்கும் ஜன சஞ்சாரமே காணமுடியாத ஓர் விஸ்தாரமான பூபாகம். நாம் இங்குசுவாஸிக்கும் ஆகாயத்திற்கு அரை அளவு இலேசான காற்றே அங்கு கிடைக்தற்பாலது. எனினும், நம் நாட்டை விட்டு வெளியேறிவிட சம்பிரதாய பௌத்த மதத்திற்குப் பிரதம குரு வசிக்கும் நாடு இதுவே யாகும். இங்குதான் மானஸசரோவரம், கைலாயம் என்னும்வெள்ளியங்கிரி முதலிய வைதிக புண்ய ஸ்தலங்களும் இருக்கின்றன என்று சொல்லப்படுகிறது. இதன் இயற்கை விநோதங்களைக் காண நம்மனோர் எவரேனும் இற்றை நாட்களில் போயிருப்பதாகத் தெரியவில்லை. எனினும், இத்தகைய நாட்டின் இயற்கை வளப்பங்களைக் கண்கூடாகக் காண வேண்டி ஆயிரக்கணக்கான மைலுக் கப்பாலிருந்து ஓர்ஸ்வேத நாட்டு யாத்திரிகன் வந்திருக்கிறான். சுதந்திர நாட்டிற் பிறந்து சுவாதந்திரிய ஆகாயத்தையே சுவாஸித்து வளர்ந்து வந்த அந்த ஞான பண்டிதன் தன் யாத்திரையில் தனக்குற்ற இன்னல்களை ஒரு சிறிதும் பாராட்டாது பல தடவைகளும் ஹிமோத்கிரியின் வட பக்கத்தில் உள்ள மத்திய ஆசியாவின் அற்புதங்களைக் கண்டு போன வரலாற்றை இவண் சிறிது கவனிப்போம்.

பிற நாட்டார் அறியா வண்ணம் மறை பொருளாகவே இருந்து வந்திருக்கும் இந் நாட்டின் மர்மங்களை அறிய வேண்டும் என்ற ஆசை பாலிய முதலேயே அவனை உந்தி வந்ததினால் அதற்கென அவன் தன்னைப் பல வழியிலும் தயாரித்துக்கொண்டான். இருபதாவது வயதிலேயே மெஸபொதாமியா, பாரசீகம் என்ற நாடுகளில் சுற்றித் திரிந்தான். பல பாஷைகளையும் கற்றுக்கொண்டான். அது காரணமாய், கலி ௪௯௮௬ இல் பாரஸீகத்து 'ஷா' வுக்கு ஓஸ்கார் மன்னனால் அனுப்பப்பட்ட தூதுவர்களில் இவனும் ஒருவனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டான். அப்பொழுது அவனுக்கு வயது இருபத்தைந்தே. இச் சந்தர்ப்பத்தையும் தனக்குப் பெரிதும் பயன் படுவதாகச் செய்து கொண்டான். கொராஸான், துருக்கிஸ்தானம் முதலிய நாடுகளைச் சுற்றி வந்து அவ்விடத்திய பாஷைகளையும் கற்றுக் கொண்டான். காஷ்கர் நகர் வரை போய்ப் பார்த்து அதையே தன் மத்திய ஆசியப் பிரயாணத்திற்குக் கேந்திர ஸ்தானமாய் வைத்துக்கொள்ளவேண்டுமெனக் கண்டுகொண்டான். எனினும் உடனேயே தன் ஜீவ யாத்திரைக்குப் புறப்பட்டு விடவில்லை. இன்னும் ஓர்



தடவை பாரசீகம் முழுதும் சுற்றியடித்து, டெஹரானுக்குக் கீழ்ப்பக்கத்திய உவர் வனாந்திரங்களைக் கடந்து ஹெல்மந்து நதி மார்க்கமாய்ப்பலுசிஸ்தானம் அடைந்து அங்கிருந்து இந்தியாவிற்கும் வந்திருக்கிறான்.

இங்ஙனமாகத்தேசாடனத்தில் தன் தேகத்தைப் பழக்கிக்கொண்டு வந்ததோடு மத்திய ஆசியாவைப் பற்றியுள்ள பூவர்ணன விஷயங்களைத் திரும்பத் திரும்பப் படித்து அதைத் தன் மனக்கண் முன் நிதரிசனமாகக் காணவும் பழகிக் கொண்டான். பெர்லின் நகரத்துச்சர்வ கலாசாலையில் பூகோள ஆராய்ச்சியில் கியாதி பெற்ற ரிஹ்தோபனப் * பிரபுவின்கீழ் நின்று அவன் அடைந்த பயிற்சி அவனுக்குப் பிற்றை நாளில் பெரிதும் பயன் பட்டது. ரிஹ்தோபனனும் கலி ௪௯௬௯, ௪௯௭௩-௭௫ இல் தனது சீனவிஞ்ஞான யாத்திரையில் தான் கண்ட விஷயங்களை அவனுக்குத் தெளிவாய் எடுத்துப் போதித்து அவன் கைக்கொள்ள விரும்பு தொண்டினுக்கு ஏற்ற ஆற்றலையும் அவனுக்குச்சமைத்து வைத்து விட்டான். ஆகவேஅவன்படங்கள்வரையவும், விஞ்ஞான கருவிகளை தனக்குத் ஏற்றவாறு உபயோகிக்கவும் பழகியதோடு மலைகள் ஏறவும் படகு விடவும் பழகிக் கொண்டான். அவன் படிப்பில் ஆழ்ந்த கருத்துடன் மூழ்கியிருந்தாலும் அவன் தன் தேகக்கட்டை உடையாமல் காத்து வந்தான். பழகின வஸ்தாதைப் போன்று ஓட்டப் பந்தயத்திற்குத் தன்னை எப்பொழுதும் பழக்கிக்கொண்டும் வந்தான். சுருங்கக் கூறின் தன் யௌவனத்தைத் தான் பின்னால் செய்யவிருக்கும் வீரச் செய்கைக்குத் தக்கவாறு தன்னைப் பழக்கிக் கொள்ளுவதிலேயே செலவிட்டான் என்று சொல்லுவது மிகையாகாது. என்னே, மேனாட்டார் பிறநாட்டதிசயங்களைக் காண வேண்டி எடுத்துக்கொள்ளும் முயற்சியின் வளமை! இவ் விளைஞனைப் போன்று வேறு எவனும் தன் நோக்கத்தை நிறைவேற்றுவதற்குவேண்டிய பயிற்சியைப் பெற முயற்சி செய்யவில்லை என்றேசொல்லலாம்.

திடகாத்திரமான தேகம், பல விஷயங்களையும் தெரிந்து வைத்துக்கொண்டிருக்கும் மனக் களஞ்சியம், பலதிறப் பட்ட பாஷாஞானம், ஆசியாவின் சுதேச பழக்க வழக்கங்களின் அனுபவம், மற்று அந் நாட்டு யாத்திரைப் பழக்கம்—எல்லாம் ஒருங்கே அமையப் பெற்றஇச் சிரியோனும் தன் தீர்க்க சங்கல்பத்தை நிறை வேற்றிக் கொள்ள கலி ௪௯௯௪—இல் தன் நாட்டை விட்டுப் புறப்பட்டான். தன் பள்ளிப் பருவத்தில் தன்னையொத்த ஸ்வேதனச் சிறார்களின் மனதைக் கொள்ளை கொண்ட நோர்டன் ஸ்கியோல்டினின் † துருவசமுத்திரயாத்திரை அவன் மனதில் எழுப்பிய கனவும் பலிக்கும் காலம் வந்து விட்டதையெண்ணிப் பெரிதும் மனமுவந்தான். மத்திய ஆசிய வனாந்தரங்கள் நம் இளைஞனையும்,ஆகர்ஷித்துவிட்டன. —அவன் தான்ஸ்வென்ஹெதின் ‡ என்பான்.

ஸ்தோக்கோலத்தினின்றும் அவன்சரத் காலத்தில் புறப்பட்டு, கப்பல் ஆவிரதம் மூலமாய் ஓரென்பர்கு வந்து சேர்ந்தான். இங்கிருந்து தான் அவன் பிரதான யாத்திரை ஆவங்குகிறது என்று சொல்லலாம். ஓர் பெரிய ஜதை சேர்ந்தது. வனாந்தரக் கப்பல்கள் தம் பாரத்தை ஏற்றிக் கொண்டு தென் கிழக்கு நோக்கிப் புறப்பட்டன. மத்திய ஆசியாவை மூடியிருந்த இருட்திரைகள் ஒன்றின் பின் ஒன்றாய் நம் வீரன் முன் கிழிந்து பட்டன. ஆயிரக்கணக்கான மைல்கள் அவன் திருஷ்டிக்கு உள்ளாயின. அவைகளை யெல்லாம் வீதியிற் போவோரும் அறிந்து கொள்ளும் வண்ணம் படம் வரைந்து வைத்து விட்டான். இவ் விடத்திய பூதத்துவ விசேஷங்களையும் தன் விஞ்ஞானக்கண் முன் கொணர்ந்து நாமெல்லோரும் தெற்றெனத் தெரிந்து கொள்ளும்படி சுளுவு படுத்தியிருக்கிறான். காற்றின் சேஷ்டைகளையும், சீதோஷ்ண வேறுபாடுகளையும் ஒவ்வோர் இடத்திலேயும் பார்த்து அது காரணமாய் அங்கங்கு காணும் பிரகிருதியின் தோற்ற பேதங்களைப் பற்றி அவன் குறித்து வைத்திருப்பது நமக்கு இன்று ஓர் விருந்தாக விருக்கிறது. முன்பின் அறியாத புதுப்புது இனத்தாருடன் உறவாடி, அவர்களுடைய பழக்க வழக்கங்களை அறிந்து, படம்பிடித்து தேவதா வழிபாடு முறைகளைக் கற்று, அவ்வப் பாஷா விநோதங்களையும் எடுத்துக் கூறியிருப்பது மானிட ஆராய்ச்சியையே விரிவு படுத்துகிறது. ஆங்காங்கு

* BARON VON RICHTHOPHEN. † NORDENSKJOLD. ‡ SIR SVEN HEDIN

காணும் விசேஷப் பூண்டுகளையும், மண்ணிற் புதைந்து கிடக்கும்புராதன நாகரிக சின்னங்களையும் ஓர்ந்து திரட்டிக்கொண்டு வந்திருக்கிறான். வனாந்தரங்களில் இடைக்கிடையே தோன்றி மறையும் பிரம்மாண்ட நதிகளின் பரிமாணத்தை அவன் அளந்து குறிப்பிட்டிராவிடின், அவ் வனாந்தரங்களின் பயங்கர தோற்றத்தை நாம் எளிதில் உணரமாட்டோம்.

இவ் அரும்பெருந் தொண்டுகள் ஆற்றிய இப் பூபக்தனை நம் பூமாதா தான் நம்மேல் இரங்கி அவ் வனாந்தரப்பேய்களினின்றும் காத்துத் தந்திருக்கிறாள் என்று சொல்வதே சாலப் பொருத்த முடைத்தாகும். ஏன்? ௧௨,௦௦௦ அடி உயரத்திற்குமேல் வளர்ந்து பரந்திருப்பதினின்றும் உலக முகடு என்னப் படும் பாமிர் பீடபூமியை மூன்று தடவை சுற்றிவந்து, அதன் உச்சிமலைமீதேறி அதினின்றும் நாலா பக்கங்களிலும் பரந்து விரியும் வறண்ட தரிசுப் பரப்பைக் காண ஆசை கொண்டான். ‘பனி மலைகளின் தந்தை’ எனப்படும் அந்த முஸ்தக ஆதா இருபத்தையாயிரத்துச் சொச்சம் அடியே உயர்ந்திருப்பினும், நம் வீரனால் ௨௦,௯௯௦ அடிக்கு மேல் ஏற முடியவில்லை. புயற் காற்று அதன் முடியை வெகு பந்தோபஸ்தாய்க் காத்துவருகின்றது. நான்கு தடவை முயன்றான். பயன் படவில்லை. ஆரோக்கியம் கெட்டுவிட்டது. கண் சிகிச்சா பந்தனத்தை நாடி நின்றது. உஷ்ண ஆகாயத்தை வேண்டி நின்றது தேகம். இந் நிலையிலும், பாவம்! தேகம் இவ்வளவு உடைந்தும், அவன் மனம் தளர்ந்தானில்லை! கீழ்ப் பக்கத்திய மணல் வெளியை நாடிப் புறப்பட்டான். உலகத்திலேயே கொடுங்கானகம் என ஒன்று இருப்பின் அது இதுவேயாகும். செந்நெருப்பினைத் தகடு செய்து பார் செய்ததை யொக்கும் இத் தரைப் பரப்பு! கண்ணுக் கெட்டிய தூரம் மணல், மணல், மணலே! இக் கொடும் மணல் வெளியில் அலைகளும் ஒன்றின் பின் ஒன்றாய்ப் பவனி வந்தன என்பார்கள். நூறு, இருநூறு அடி உயரம் வரை எழும்பும் அச் சுவர்ண அலைகளும் இம் மணற் கடலில் மணல் நீரைத் தவிர வேறு புனல் நீரும் கிட்டுமோ? தீயின் வாயினின்று நீர் பெறினும் பருகலாம் எனச் சிந்தை நொந்து, வாய்வெந்து, நவ்வியும் செந்நாயின் வாய்நீரை நீரென எண்ணி நாவினால் நக்கி விக்கும் எனில், இம் மானிடக் குழாமும் என் செய்திருக்கும் என்று ஊகித்துக் கொள்வதே சிறப்புடைத்தாம். மெல்ல மெல்ல நத்தையே யென ஊர்ந்து அந்த நாக்கல மக்கானைக்கடந்தனர் இவ் வற்புத யாத்திரிகர்களும். ஒட்டகைகளுங் கூட நீர் வேட்கையால் தலை கிறங்கி விழுந்தன. ஹா! நாக்கு உலர்ந்து, தொண்டை வறண்டு, குடல் குறுகி, ஒரு வாய்த் தண்ணீருக்குத் துடித்து அவதிப்படும் அவஸ்தையை என்னென்று சொல்ல! இவ்வளவு நாள் தம்மைத் தூக்கிச் சுமந்து வந்த அவ் வனாந்தர வாசிகள் இப்பொழுது தம் நீர்ப்பைகளும் சுருங்கித்தண்ணீருக்கு ஆலாய்ப் பறக்கும் அந் நிலையைப் பார்த்து ஸ்வென் ஹெதின் மனம்பட்டபாடு சொல்லத் தரமன்று! அவஸ்தைப் படுவதினும் சாவதே சாலச் சிறப்புடையது என எண்ணி, துப்பாக்கி கொண்டு அவைகளைச் சுட்டு வீழ்த்தினான். இன்னும் மேல் நோக்கிப்போனார்கள். சுதேச சேவகர்களே அவனுக்குத் துணை. “வனாந்தர நதி ஒன்று வந்துவிட்டது. பக்கத்தில்தான் இருக்கிறது. கோட்டான் நதி இதோ இருக்கிறது, இதோ இருக்கிறது,” என்று சொல்லிக்கொண்டு காற்றை நாடி நடந்து சென்றார்கள். கிட்டிற்றில்லை. போகப்போகத் தூரம் தொலையவில்லை. மரண தேவதையும் தனக்குப் பலி கிட்டிற்று எனக் களிக்கத் தலைப்பட்டது. கூற்றில் ஒரு துளி நீர் கூட மீதியில்லாமல் காலியாயிற்று. சுற்று முற்றும் வனாந்தரம். விட்டவிடம் தொட்டவிடம் தெரியாத விசித்திர பிரதேச மத்தியில் அக் கூட்டம் முழுதும் சிக்குண்டது. ஸ்தோக்கோலத்தை விட்டுப் புறப்பட்டு ஐநூற்றறுபத்தைந்தாவது நாள் நமனை நாடிப் பாசறை கட்டப்பட்டது. ஸ்வென் ஹெதினுக்கும் தலை கிறுங்கிவிட்டது. பிதற்றத் துவக்கிவிட்டான். பூர்வ ஞாபகங்கள் ஒன்றின் பின் ஒன்றாய் அவன் மனக்கண் முன் தோன்றி மறைந்தன. வீர சுவர்க்கத்தின் கபாடமும் தானாய்ந்து விழ்ந்தது. கதவு மட்டமல்லாக்காகத் திறந்தது. ஆயினும் பூமாதா தன் அருஞ் செல்வனை இந்த வயதிலேயே இழக்கத் துணிவாளா? மயக்கம் தெளிந்தது. ஓர் ஆவேசம் தோன்றியது. “நான் சாகேன்” என மார் தட்டி எழுந்தான். நடக்கவும் சக்தி வந்துவிட்டது. சலித்து விழாது எஞ்சி நின்ற ஒரே சேவகனுடன் நீரை நாடி நடந்தான். ஐந்தாவது நாள்



ஓர் காடு கிட்டிற்று. தழையை மென்று தின்றார்கள். இன்னும் ஜலம் காணவில்லை. மாலையில் சேவகனும் விழுந்தான். ஸ்வென் ஹெதின் மாத்திரம் தனித்தான். சிறிது நேரத்தில் அவனும் களைப்பு மேலிட்டு அயர்ந்தான். எனினும் பிடிவாதம் உந்தி இழுக்க நகர்ந்து தள்ளாடித் தள்ளாடிக் காட்டையும்கடந்து சென்றான். நதியையும் கண்டுவிட்டான். ஆனால், நீர் தான் இல்லை. எல்லாம் மணலில் மாயமாய் மறைந்திருந்தது. நீர்ப்பிடிப்புக்கும் வனாந்தரத்திற்கும் சிறிதும் வித்தியாசமின்றி எங்கும் மணல் மயமாய்க் காணப்பட்டது. “ஹா, இன்னுமா சோதனை? இக் கொடு வெயிலில் இனி நடக்க முடியாது.” எனச் சோர்ந்து விழுந்தான். ஆனால் சாகஸ தேவியின் பிரசாதம் அவன் பால் குடிகொண்டிருக்க எப்படிப் படுத்துத் தூங்குவான்? கடமையை மறந்து தூங்கியும் எழுந்திருப்பானோ? தூக்கம் வரவில்லை. உடன் எழுந்தான். ஒன்றரை மைல் தூரம் அச் சுடுமணலில் ஊர்ந்து சென்றபின் ஓர் குட்டையைக் கண்டான். கடைசியாய் ஜலத்தைக் கண்டுவிட்டான். அள்ளிஅள்ளிக் குடித்தான். புத்துயிர் கிளம்பிற்று. ஊக்கமும் உற்சாகமும் பிறந்தன. இரண்டு படி ஜலம் வரை பருகிவிட்டான். க்ஷணம் எல்லாம் பறந்து போயிற்று. இந் நிலையிலும் அவன் தன் சேவகனை மறக்கவில்லை. நீர் ஊறாத தன் கால் ஜோடுகள் ரெண்டு மட்டும் ஜலம் நிரப்பிக்கொண்டு வந்தவழியே திரும்பிச் சென்று தன் சேவகனையும் எழுப்பினான். அன்று சாவித்திரி சத்தியவானை நமன் கையினின்றும் காத்தாள் என்று கதை சொல்லப்படுகிறது. ஆனால் நம் ஸ்வென் ஹெதினோ தன் ஸாகஸத்தாலேயே தன்னை யெதிர்கொண்டு வந்த நமனையும் புறக்கணித்து சுவர்க்க வாசத்தையும் ஏகிறி யெறிந்துவிட்டு, இன்று நம் முன் இம் மண்ணுலகில் இப் பூத வுடம்போடேயே புகழுடலும் எய்தப் பெற்றுச் சுக புருஷனாய்த் திகழ்கின்றான். என்னே, சாகஸத்தின் மகிமை!

இப்பாடுகள் பட்டதும் உடன் ஊர் திரும்பிவிட்டான் என எண்ணுகிறீர்களோ? இல்லவே யில்லை. திரும்பவும் இன்னோர் மார்க்கமாய் அவ் வனாந்தரத்தை, அந் நமன் சாலையை, கடந்து சென்று, மணலில் புதைந்து கிடக்கும் பண்டைப் பெரு நகரங்களைப் பின் வரும் சரித்திர விஞ்ஞானகர்களுக்கு எடுத்துக் காட்டியிருக்கிறான். பின்னர், கோபி வனாந்தர விஷயங்களையும் ஒருவாறு ஆராய்ந்துகொண்டு பீகிங் நகரடைந்தான். அதுவே சீனாவின் பிரதான நகரம். ஊரை விட்டுப் புறப்பட்டு ஆயிரம் நாட்களுக்கு மேலாகவே மத்திய ஆசிய வனாந்தரங்களில் தன் காலத்தைக்கழித்துவிட்டானன்றோ. ஆதலின் அங்கிருந்து அவன் ஊர் திரும்பினான்.

முன் பிரயாணத்தில் அவன் கண்ட புதுமைகள் எல்லாம அவனுடைய யாத்திரைத் தாகத்தைத் தான் எழுப்பின. தாகம் சாந்தி யாகவில்லை. ஆகவே இரண்டு ஆண்டு தன் தேகத்திற்கு ஓய்வு கொடுத்தபின்பு திரும்பவும் தேசாடனத்திற்குப் புறப்பட்டுவிட்டான். முன் தன் உயிரையே பலி கேட்ட அப் பாலை வனத்தை நாடியே இப்பொழுதும் சென்றான். இப்பொழுது இரு மன்னர்கள் அவனுக்கு உதவி செய்ய முன் வந்தனர் முன்போன்றே ஸ்தாக்கோலத்தினின்றும் அவன் யாத்திரை துவங்கியது. கலி ௪௯௯௯ ஆம் ஆண்டுக் கோடையிற்புறப்பட்டுக் காடு மலை வனம் வனாந்தரங்கள் எல்லாம் கடந்து காஷ்கர் நகர் வந்தடைந்தான். பழைய கூட்டாளிகளையும் புதுச் சேகர்களையும் சேர்த்துக்கொண்டு ஓர் ஜதை சேர்த்து நாக்கலமக்கான் வனத்தின் நடுவே பாயும் யார்க்கந்து நதிக் கரை யடைந்து அங்கிருந்து அதன் வழியாய்ப் படகுமூலமாய் தான் சில சேவகர்களுடன் அதன் முகத்வாரத்தை யடைய வேண்டுமென்றும், மற்றோர் பகுதியினர் தரை மார்க்கமாய் அவன் அடைய வேண்டுமென்றும் முடிவு செய்துகொண்டு புறப்பட்டனர்.

புறப்பட்டதும் அங்கே இடியும் மின்னலுமாக மழை சரமாரியாய்ப் பொழிய ஒட்டகை யெல்லாம் எடுத்தடி வைக்க முடியாமல் மண்ணிற் புதைந்து அவதிப்பட்டன. மறுதினம் மேகம் வெளிவாங்க வழி சுத்தமாயிற்று. மரம் அடர்ந்த சாலைகள் வழியாய்ப் பல கனிச் சோலைகளையும் தோப்புக்களையும் கடந்து நதிக் கரை அடைந்தனர். நதி வளைந்து வளைந்து போன தோடு சிற்சில விடங்களில் வாய்க்கால் எனும் படி குறுகியும் மேடு தட்டியும் இருந்தது. கழிகொண்டு படகைத் தள்ளியும் இழுத்தும், வேண விடங்களில் பக்கத்துக் கிராம ஜனங்களின் உதவியை நாடியும் நதி மார்க்கமாய் மத்திய பனிக்காலம் வரை யாத்திரை போய்க்

கொண்டிருந்தனர். யாத்திரை உற்சாகமாகக் கழிந்தது. யார்க்கந்து நதி முடியும் வரையும் நாடு செழிப்பாகவே யிருந்தது. அது பாயும் தாரிம் நதி வந்ததும் அப் பிரமாண்டமான நதி பாயும் நாடு வெறும் தரிசாக விருப்பதைக் கண்டனர். இங்கு புலிகள் சர்வ சாதாரணமாய் இருப்பதையும் அவைகளைப் பிடிக்கப் பொறிகள் வைத்திருப்பதையும் கண்டார்கள். போகப் போக நாடு பயங்கரத் தோற்றம் எய்துவதாயும் ஆங்காங்கே இருநூறு அடி வரை உயர்ந்திருக்கும் மணல் மேடுகள் தம் தீர்க்க திருஷ்டியைத் தடுப்பதாயும் அவன் குறிக்கிறான். பயங்கர மணற் காற்றுகள் மணல் மேகத்தை வாரிக்கொண்டு வந்து மணல் மாரி பொழிந்து மணல் மேடுகள் உண்டாக்கி வழி மறிக்கும் விதம் விசித்திரமானதே. நாளேற நாளேற பனிக்காலம் தன் கொடுமையைக் காட்டத் துவக்கிற்று. பனி மழை நாட் கணக்காய் அடித்த வண்ணமாயிருந்தது. வழியெல்லாம் பனி மூடிவிட்டது. ஒட்டகை நடக்கத் திணறியது. மெல்ல மெல்ல நடந்து சென்று ஓர் தங்குமிடம் கட்டிக் கொண்டனர்.

அங்கிருந்து லோப் நார் ஏரிப் பக்கத்தில் தான் உள்ளது. ஆகவே அதைப் பற்றிய மாய மர்மத்தை நேரில் சோதித்து அறிய வேண்டி அதை நோக்கிப் பிரயாணமானான். ஒரு மாதத்திற்கு மேலேயே அதையும் அதைச்சுற்றியுள்ள மற்றும் சில்லரை ஏரிகளையும் சுற்றிப் பார்ப்பதில் கழிந்துவிட்டது. பண்டைக் காலத்தில் ஓர் பெருங் கடல் எனவே சொல்லத்தக்க வண்ணம் பரந்திருந்த அவ்வேரி கோபிப் பாலைவனத்தினின்றும் எழுந்து வரும் மணற்காற்றினால் மூடப்பட்டு,பண்டைப் பெருமைகளெல்லாம் இழந்து, அதன் பாசனத்தில் இருந்த செழிப்பான நிலங்களும் நகரங்களும் இப்பொழுது மணல் கொள்ளப்பட்டுப் புதைந்திருக்கின்றன.: என்னே, பிரகிருதியின் திரு விளையாடல்!

தோன்றின மறையும், மறைந்தன தோன்றும்:
பெருத்தன சிறுகும், சிறுத்தன பெருக்கும்,"

என்று ஓர் பெரியார் புகன்றிருப்பது உண்மையினும் உண்மையே.

அங்கங்கே புதைந்து காணும் தங்க நாணயங்களும் மரச் சிலைகளும், மட்பாண்டங்களும், தேயிலைக் கற்களுமே இப் பிரதேசத்தின் பண்டைப் பெருமையை இன்று உலகுக்கு நிதரிசனப் படுத்திக்கொண்டிருக்கின்றன.

திரும்பக் கோடை வந்ததும், தெற்கு நோக்கிப் பிரயாணமானார்கள். மணல் வெளிகளையெல்லாம் தாண்டி ஆசிய மத்திய பீடபூமியைச் சேர்ந்தனர். வட சுவரையணுகி, அதன் வேலைப் பாடுகளில் தங்கள் பிரயாணக் களைப்பை ஒரு சிறிது மாற்றிக் கொண்டு, பீடபூமியில் நுழைந்தனர். கஎ,௦௦௦ அடி உயரத்திற்கு வந்துவிட்டனர். பனி பொழியத் துவக்கிவிட்டது. தெற்கே வர வர நாடு உயர்ந்து கொண்டே வந்தது. எங்கு பார்த்தாலும் காட்டுக் கழுதைகளும், காட்டெருமைகளும் கும்பல் கும்பலாய் மேய்ந்து கொண்டிருந்தன. கஎ௦௦௦ அடி உயரத்தில் திபெத்தை அடைந்தனர். மூச்சு திணறியது. ஏன்? காற்று லேசாய் விட்டது. கொஞ்சம் உழைத்தாற் கூட மார்பு படபடென அடிக்கும்; மூச்சுத் தடுமாறும். வழி வர வரக் கடுமையாயிற்று. தரை நடக்கத் தரமன்று. இடியையும் மின்னலையும் எதிர்கொண்டு ஒட்டகைகள் நடக்கத் தயங்கின. உணவுப் பொருள்கள் கிட்டுவது அசாத்திய மாயிற்று. இச் சந்தர்ப்பத்தில், நற்காலமாய் சில சுதேச வேடர்கள் அவர்களுக்கு உதவி செய்ய முன் வந்தனர். பௌத்த யாத்திரிகர்கள் குழாம் குழாமாய் லாஸ்லா நோக்கிப் போய்க் கொண்டிருந்தனர். எனினும் அவன் அன்னிய தேசத்தனாயிருப்பது பற்றி எவரும் அவனை உடன் கூட்டிப் போகவாவது போகும் மார்க்கத்தைக் காட்ட வாவது ஒருப்படவில்லை. ஆகவே வந்த வழியே திரும்பிச்சென்று லோப் நார்ப் பிரதேசத்திய இடி மேடுகளை இன்னும் அதி சூக்ஷ்மமாய் ஒரு மாதம் வரை சோதித்து இருந்து, பல புதையல்கள் கண்டெடுத்தனர். நோட்டப் பதிவு புத்தகங்கள் கால்நடைப் பதிவு நூல்கள் முதலிய சாசனங்களும்,புத்த விக்கிரகம் முதலிய சிற்பங்களும், மண்ணிற் புதைந்து கிடந்த வீடுகளும் பல சீன தேசத்திய ஜோடுகளும் காணக் கிடைத்தன. பண்டைக் காலத்தில் வளம் பொருந்திய நாடாயிருந்து ஜன நெருக்க மிக் குடையதாய் மிளிர்ந்



ததுபோய் இப்பொழுது வேற்றுருக் கொண்டு பயங்கரத் தோற்றம் தாங்கி மாகாளியின் உறைவிடமாய்க் காணுவது ஏன்? தாரீம் நதி தனக்குப் புதிய வழி கோலியதே எனப் பிரகிருதி பதில் இறுக்கின்றாள். இவ் ஏரியில் கொண்டு கொட்டிக் கொண்டிருந்த தன் ஜலத்தை யெல்லாம் அந்த 'நதி இப்பொழுது பாலை வனத்து மணல் வெளி தத்தம் செய்திருப்பதே. என்னே, பிரகிருதியின் தோற்ற பேதம்!

அம் மஹா சக்தியின் வழிபற்றித் தானும் லாஹ்லா போக முயற்சிப்பதே சிறப்பாகும் என எண்ணி,தானும் உருமாறி மங்கோலிய உடைகொண்டு பௌத்தயாத்திரிகன் மாதிரி வேஷம் பூண்டு லாஹ்ஸாவுக்குப் போகப் புறப்பட்டனன். எனினும் வழியில் கள்ளம் கண்டு பிடிக்கப்பட்டு மேலே போகத் தடை உண்டாயிற்று. ஆக, அப்படியே மேற்கு முகமாய் விரைந்து நதிக்கரையை அடைந்து அங்கிருந்தும் காஷ்மீரம் சேர்ந்தான். பின்னர் இந்தியா இராஜப் பிரதிநிதியால் அழைக்கப்பட்டு கல்கத்தாவந்து அவணின்றும் கலி ருoo௬ இல் தன் நாடு திரும்பினான்.

எனினும் யாத்திரைப் பைத்தியம் அவனை விட்டபாடில்லை. நாலாண்டுகள் கழிந்து,,இரகசிய பூமியை" திபத்தைச் சுற்றிப் பார்த்து வருவதே தன் ஜீவ லக்ஷியமெனக் கொண்ட அத் தீரன் தரை மார்க்கமாய் இந்தியாவந்து இதன் எல்லைப் புறத்து வழியாய். அந் நாட்டுக்குள் போக எண்ணினான். ஆனால் இந்திய இராஜாங்கத்தார் அதற்கு இடம் கொடுக்கவில்லை. ஆகவே காஷ்மீரத்தினின்றும் துருக்கிஸ்தானம் போவதாகச் சொல்லிப் புறப்பட்டு, இடையே பிய்த்துக் கொண்டு, திபெத்துக்குள் நுழைந்து, பலதடைகளுக் கிடையே அதன் இரகசிய மர்மங்களையெல்லாம் ஒருவாறு கண்டு வந்திருக்கிறான். தென் திபத்து முழுதும் சுற்றியடித்து பிரஹ்ம புத்ரா நதியின் உற்பவ ஸ்தானத்தைக் கண் கூடாகக் கண்டு கைலயங்கிரி மானசரோவரம் முதலியவற்றையும் சுற்றிப் பார்த்துவிட்டு சுகமே நாடு திரும்பியிருக்கிறான்.

இம் மட்டோ! இன்று அவனுக்கு வயது அறுபதாகிறது. எனினும் இன்னும் ஓர் யாத்திரை போக எண்ணிக் கொண்டிருக்கிறான் என நமக்கு விபரம் எட்டியிருக்கிறது. என்னே பக்தியின் வலிமை!

"சோம்பல் அழியும்;—உடல்
சொன்ன படிக்கு நடக்கும்; முடி சற்றும்
கூம்புதல் இன்றி —நல்ல
கோபுரம் போல நிமிர்ந்த நிலைபெறும்;
வீம்புகள் போகும்;—நல்ல
மேன்மை உண்டாகிப் புயங்கள் பருக்கும்பொய்ப
பாம்பு மடியும்;—மெய்ப்
பரம் வென்று நல்ல நெறிகள் உண்டாய் விடும்
(பக்தியினாலே)

என்று இன்று ஸ்வர்க்க வாசியாயிருக்கும் நம் பாரதி புகன்றிருப்பதற்கு நிதர்சனமாய் இப் பூபக்தனே விளங்குகிறான்.

# பூமிதேவியும் செல்வமும்

(ஸ்ரீமான் வ. நடராஜன் எழுதியது)

இறைவன்னருளால் இப் பூலோகத்தில் நாம் அனுபவித்து சந்தோஷமாய் ஜீவனம் செய்வதற்காகக் கிடைத்துள்ள பொருள்கள் பல. அப் பொருள்களைப் பற்றி விரித்துச் சொல்லும் சாஸ்திரம் பூகோள சாஸ்திர மெனப்படும். இந்தப் பாடம் பள்ளிக்கூடங்களில் சரியான முறையில் கற்பிக்

கப்படாதபடியினால், பிள்ளைகள் களிப்புடன் இப் பாடம் படிப்பதில்லை; இப் பிள்ளைகள் பெரியவர்களானபின் பூலோக செல்வத்தைப் பற்றியும் நமது தேச நிலைமையைப் பற்றியும் தெளிவாக அறிந்து கொள்ள கஷ்டப்படுகிறார்கள். 'இவ் வுலகம் மனிதனுடைய சுவர்க்கம்; அவனுக்கு வேண்டிய செல்வத்தை அவனே விருத்தி செய்வதற்கேற்ற சாதனங்கள் இருக்கின்றன; என்ற அருமையான விஷயத்தைப் பிள்ளைகள் சிறுவயதிலேயிருந்து தெரிந்துகொள்ள வேண்டும். சாதாரண பூகோள பாடங்களில் ஓரிடத்தின் விளைபொருள்களையும் அவ் விடத்தில் ஜனங்களது தொழில்களையும் ஏற்றுமதி இறக்குமதிப் பொருள்களையும் வர்ணிப்பது வழக்கம். ஆனால் இவ்விதம் ஜாப்தா செய்வது மாத்திரம் போதாது. உலக முழுதும் ஓரே செல்வக் களஞ்சியம், உலகம் முழுதும் ஓரே தொழிற்சாலை, உலக முழுதும் ஓரே வியாபார ஸ்தலம் என்ற தற்கால விஷயங்களைக் கலந்து கொள்ளுவதினால் புதிய முறைப் பூகோள பாடம் ஏற்படுகிறது. இப் புதிய பாடத்தைச் செல்வ விருத்தி பூகோள பாடம் என்று சொல்லலாம். இப் பாடத்தைப் பிள்ளைகள் மாத்திரம் தெரிந்து கொண்டால் போதுமென் றிராமல் இக் காலத்துப் பெரியோர்களும் தெரிந்து கொள்வது அவசியம். ஏனெனில் இப் புது விஷயத்தைப் பெரியோர்கள் நன்றாகக் கிரகித்துக் கொண்டார்களாயின் பள்ளிக்கூடப் பாடங்கள் சீர்திருத்தமடையும். அடுத்த தலை முறை ஜனங்களாவது இப் பூலோகச் செல்வம் என்பன எவை? அச் செல்வத்தை விருத்தி செய்வது எவ்விதம் என்று அறிந்து தேச க்ஷேமத்தை அதிகப்படுத்தப் பாடுபடுவர்.

நாம் வசிக்கும் இவ் வுலகம் செல்வக் களஞ்சியம். அச் செல்வத்தை நாம் அனுபவித்து ஜீவிக்கிறோம். அப்படி சுகமாக அனுபவிப்பதற்கு உதவியாகப் பண்ட மாற்றல் (அல்லது வியாபாரம்) செய்கிறோம். மனிதர்கள் செல்வத்தை அதிகமாக அனுபவித்தால் செல்வம் அதிகமாக விருத்தியாகும். மனிதர்களுள் வியாபாரமும் அதிகப்படும். இப்போது உலகம் முழுதும் வியாபாரத்தினால் ஒரே கட்டாகப் பிணைக்கப்பட்டிருக்கிறது. ரயில் தண்டவாளங்களும், தந்திக் தபால்களும், புகைக் கப்பல்களும், ஆகாய விமானங்களும் உலக முழுதும் ஒன்றாகக் கட்டுவதற் கேற்ற சாதனங்கள். மனிதர்களைப் போல் மிருகங்களும் செடிகளும் வியாபாரம் செய்வதில்லை. இப் பூமியும் அதன் மீதுள்ள மிருகங்களும் மரஞ் செடிகளும் பகவான் அருளால் மனிதர்களின் சுக வாழ்க்கையி னிமித்தம் ஏற்பட்டவை என்று சாதாரணமாக நாம் கருதுகிறோம். அந்த எண்ணத்துடனே பல்லாயிரம் வருஷங்களாக மனிதர்கள் பாடுபட்டு உழைத்து மிருகங்களையும் மரஞ் செடிகளையும் தங்கள் ஜீவனத்துக்கு உதவியாக இருக்கும்படி பழக்கம் செய்து சுகப்படுகிறார்கள்.

பூலோக ஜனங்கள் தற்கால நிலைமையில் சுகமாகவும் சந்தோஷமாகவும் ஜீவிப்பதற்கு வியாபார விருத்தி அவசியம். பூமியிற் கிடைக்கும் பல பொருள்களைக் கொண்டுதான் வியாபாரம் செய்ய வேண்டும். இயற்கையாகப் பூமியில் விளையும் பல பொருள்கள் இராத பட்சத்தில் மனித வாழ்க்கையே முடியாது. ஜீவிப்பதற்கு அத்தியாவசியமான உணவு, உடை, இருக்க இடம் இவைகளும் மற்றும் பல சௌகரியங்களும் பூமியின் அருளால்தான் நமக்குக் கிடைக்கின்றன. பூமிதான் நமது ஜீவனத்துக்கு ஆதாரமாதலின் நாம் பூமிதேவி யென்றும் லோகமாதா என்றும் பூமியைக் கொண்டாடுகிறோம். மனிதர்களெல்லாம் பூமாதேவியின் மக்களென்றும் வர்ணிக்கிறோம். பாரதமாதா என்று நமது தேசத்தைப் பூஜிக்கிறோமல்லவா? தாயின் பொறுமை எனும்படி பூமி தேவியின் கோடானு கோடி மக்களுக்கு வேண்டிய பொருள்களைச் சலியாமல் அளித்து வருகிறாள். இதனால்



பூதேவி என்று நாம் பூஜிப்பதின் காரணம் நன்கு விளங்கும். பூமியின் மேல் வாழும் இருப்பன நகர்வன முதலிய சகல பொருள்களும் மனிதர்களுக்கு எவ்வளவு சுகம் கொடுக்கின்றன. பட்சிகள், மிருகங்கள், மரங்கள், செடிகள், மலை, பாறை, நதி முதலிய யாவும் பூமி தேவியின் அருளால் நமக்குக் கிடைத்த பெருஞ் செல்வம்.

இவ்விதம் பூமி தேவியின் அருளால் செல்வம் பூமியில் குவிந்திருக்கிறது எனினும் சிற்சிலர் தாம் இச் செல்வத்தை ஆனந்தமாக அனுபவிக்கும் பாக்கியம் பெற்றிருக்கிறார்கள். பூலோகத்து ஜனங்கள் யாவரும் ஒரே விதமான பாக்கியம் பெற்றிருக்கவில்லை. மனிதனுக்கு உபயோகமான இச் செல்வம் பூமியில் சில இடங்களில் வெகுவாகக் குவிந்திருக்க மற்றும் சில இடங்களில் வெகு சொற்பமாகவோ அல்லது இல்லாமலோ இருக்கிறது. அதாவது பூமியின் சாரம் வெவ்வேறு வகையாக வெவ்வேறு இடங்களில் இருக்கிறது. இவ் விஷயத்தை நாம் சாதாரணமாக நிலவளம் என்று சொல்லுவோம். தாவர வர்க்கங்களும் மிருக ராசிகளும் மிகுந்த நாடு நிலவளம் மிகுந்த நாடு என்று வர்ணிப்போம். இவ் விதம் நிலவளம் வித்தியாசப் படுவதையும் அதன் காரணத்தையும் அதனால் மனித வாழ்க்கை பாதிக்கப் படுவதையும் புவி வர்ணனை அல்லது பூகோள சாஸ்திரத்தில் நாம் படிக்கிறோம்.

இவ் வுலகத்தில் நிலவளம் வித்தியாசப் பட்டிருப்பதற்கு முக்கிய காரணம் சீதோஷ்ண ஸ்திதியில் காணப்படும் வித்தியாசம். இப் பூமியில் ஓரிடத்தில் சூரிய வெப்பம் வெகு உக்ரமாகவும் ஓரிடத்தில் உஷ்ணமே இல்லை யெனும்படி குளிர்ச்சியாகவும் இருக்கக் காண்கிறோம். ஒரே சூரியனிடமிருந்து வெளிச்சமும் வெப்பமும் நமக்குக் கிடைக்கிறது என்றாலும் தஞ்சாவூரில் சித்திரையில் அடிக்கும் வெயில் போல அவ்வளவு கடுமையாக லந்தன் பட்டணத்தில் இல்லை. நம் தேசத்திலேயே தஞ்சாவூரில் உள்ள உஷ்ணம் போலக் காசு மீரத்தில் இல்லை. அதே விதமாகவே மழையும் எல்லா விடங்களிலும் ஒரே விதமாகப் பெய்வதில்லை. கொச்சியில் ஆனி ஆடி மாதங்களில் ஏராளமான மழை பெய்யும். தஞ்சாவூரில் அச் சமயம் மழை பெய்வது அபூர்வம்; ஆனால் ஐப்பசி கார்த்திகை மாதங்களில் சுமாராக மழை பெய்யும். இவ் வுலகத்தில் சில இடங்களில் வருஷம் பூராவும் கொஞ்சங் கூட மழை பெய்வதேயில்லை. இத்தியாதி வித்தியாசங்கள் இருப்பதால் நிலவளம் ஒரே விதமாக இருக்கிறதில்லை. மழையும் வெப்பமும் அதிகமாக உள்ள இடங்களில் மரஞ்செடிகளும் மிருக ராசிகளும் ஏதேஷ்டமாக வசிக்கின்றன. மழையும் வெப்பமும் மிகக் குறைந்த இடங்களில் பயிர் பச்சை காண்பது துர்லபம். இவ்வித பூமியைப் பொட்டல்நிலம் அல்லது பாலைவனம் என்று சொல்லுவோம். இப் பிரதேசத்தில் வெகு ஜனங்கள் வசிக்கமாட்டார்கள்.

நிலவளம் இவ்வாறு பேதப் பட்டிருப்பதால் உலகத்தில் அல்லது ஒரு தேசத்தில் ஜன நெருக்கம் ஒரே விதமாக இல்லை. நில வளத்துக்குத் தக்கவாறு ஜனங்களது வாழ்க்கை முறையும், தொழில்களும் நடவடிக்கைகளும், பழக்க வழக்கங்களும் வெவ்வேறு விதமாக இருக்கின்றன. குளிர் நாட்டு ஜனங்கள் கம்பளிச் சட்டை அணிந்து கொள்ளுவதும் வீடுகளில் கணப்பைச் சுற்றிப் பொழுது போக்குவதும் வழக்கம்; ஆனால் உஷ்ண தேச ஜனங்கள் சட்டை அணிந்து கொள்வது வழக்கமில்லை. சந்தனம் பூசிக் கொள்வதும் விசிறிக் கொள்வதும் வெகு சகஜம்.

பூமியில் உள்ள செல்வம் பூலோக முழுதும் ஒரே யளவாகப் பாகிக்கப் பட்டிராமல் ஓரிடத்தில் அதிகமாகக் குவிந்தும் ஓரிடத்தில் சொற்பமாகவும் இருப்பதால் தான் உலக வியாபாரம் ஏற்

பட்டது. உலகச் செல்வத்தை நம் சௌகரியத்துக்குத் தக்கவாறு நாம் பங்கித்துக் கொள்வது தான் வியாபாரம். முற்காலங்களில் வியாபாரம் இவ்விதம் உலக முழுதும் பரவி இருந்ததில்லை. ஒரு கிராமத்திலேயே ஜனங்கள் தமக்குள் ஒருவருக் கொருவர் பண்ட மாற்றிக் கொள்வது வழக்கம். நெல் அதிகமாகப் பெற்ற ஒருவன் நெல்லை அளந்து கொடுத்து வாணியனிடமிருந்து எண்ணெய் வாங்கிக் கொள்வான். இப்பவும் கிராமங்களில் நெல் அல்லது அரிசி அளந்து கொடுத்து இலந்தைப் பழம் அல்லது கடலை வாங்குவது வழக்கம் அல்லவா? இவ்விதம் பண்ட மாற்றிக் கொள்வது விருத்தியாகி இக்காலத்திய உலக வியாபாரமாயிற்று. இந்தியாவிலிருந்து தோல்களும் பஞ்சும் பிரிட்டிஷ் தேசத்திற்கு அனுப்பி அப் பொருள்களுக்குப் பிரதியாக அங்கிருந்து இரும்பு இயந்திரங்களும் மில்துணி வஸ்திரங்களும் வாங்கிக் கொள்கிறோம். இவ்விஷயத்தைப்பற்றி விவரமாக இன்னொரு தரம் தொடங்குவோம்.

## புத்தர் நீதிநெறி

——[o]——

(ஸ்ரீ இலக்குமணப் போற்றி மொழி பெயர்த்தது)

உண்மையான நிதிகள் கிடைக்கத்தக்க ஸ்தலத்தை உங்களுக்குச் சொல்லி, விலக்கத்தக்கதை உங்களுக்கு எடுத்துக் காட்டி, இடித்து அறிவுறுத்துகிற புத்தி தீக்ஷணமுள்ள ஒருவரை நீங்கள் காண்கிறதானால் அவரைப் பின் பற்றுங்கள்; அவரைப் பின்பற்றுகிறவர்களுக்கு இழிவு உண்டாகாது மிகு நன்மையே உண்டாம்.

அவர் எச்சரிக்கட்டும். அவர் கட்டளை இடட்டும், தப்பாயுள்ளதினின்றும் பின் வாங்கிக் கொள்ளட்டும்! அவர் நல்லோரால் நேசிக்கப்படுவர்.

தீமை செய்வோரை நட்பினர் ஆக்காதேயுங்கள், இழிதகைமையுடையாரையும் நட்பாக்கிக் கொள்ளாதேயுங்கள்; நல்லொழுக்க முடையாரை நட்புச் செய்து கொள்ளுங்கள். சிறந்த மித்திரர்களையும் சினேகம் செய்து கொள்ளுங்கள்.

நியாயப் பிரமாணத்தின் சாரத்தைக் கிரஹிக்கிறவன் சாந்தமான மனதுடன் சந்தோஷமாய் வாழ்கின்றவன்; மகான்களால் உபதேசிக்கப்பட்ட நீதியில் எப்பொழுதும் ஞானியானவன் திளைத்துக் களிக்கின்றனன்.

கிணறு உண்டாக்குகிறவர்கள் (தங்களுக்குப் பிரியமுள்ள இடத்திலெல்லாம்) ஜலத்தை உண்டாக்குகின்றனர்; பாணம் இடுவோர் பாணத்தை வளைக்கின்றனர்; ஆனால் அறிவுடையார் தங்களைத் தாங்களே உறுதிப்படுத்திக் கொள்கின்றனர்.

கட்டியான பாறை காற்றினால் அசைக்கப்படுகிறதில்லை, அதுபோல அறிவுடைய மாந்தர் நிந்தையாலும் ஸ்துதியாலும் அசைவுற மாட்டார்கள்.



அறிஞர்கள் நியாயப் பிரமாணங்களைக்கேட்ட பிற்பாடு ஆழமும் சாந்தமும், அமைதியுமுள்ள ஏரியைப் போல சாந்தமுடையவர் ஆகின்றனர்.

நல்லவர்கள் தங்களுக்கு சம்பவிக்கிறதை யெல்லாம் வஹித்தே நடக்கின்றவர், நல்லவர்கள் சிற்றின்ப இச்சையுற்று முணுமுணுக்கின்றிலர். அறிவுடையார் சுகம் சம்பவித்தால் ஒருபோதும் இன்பம் அடைகிறதுமில்லை, துக்கம் பிடித்தால் ஒருக்காலும் துன்பம் அடைகிறதும்இல்லை.

ஒருவன் தனக்காகவேனும் அல்லது பிறருக்காகவேனும் புத்திரனையோ, தனத்தையோ, நாயகத்துவத்தையோ விரும்ப வில்லையானால், தீய நெறியினால் தன் சொந்தக் காரியத்தை அடைய விரும்ப வில்லையானால், அவன் நல்லவன், அறிவுடையான், ஒழுக்கமுடையான்.

எதிர்க்கரை (மோக்ஷக்கரை) யிற் போய்ச் சேருவோர் மனிதரில் மிகச் சிலரேயாவர், மற்றவர்கள் இல் வாழ்க்கையில் மேலும் கீழும் ஓடித் திரிகின்றனர்.

நியாயப் பிரமாணமானது தங்களுக்குச் செவ்வனே போதிக்கப்பட்டுள்ளபோது அதனை அனுசரிக்கிறவர்கள் மரண்பூமியைக் கடப்பது எவ்வளவு கஷ்டமுள்ளதாயிருந்த போதிலும் அதைக் கடந்து விடுவார்கள்.

விவேகியானவன் அஞ்ஞானமுள்ள இல் வாழ்க்கை நிலையைவிட்டு ஞானமுள்ள (துறவின்) நிலையை அனுஷ்டித்தல் வேண்டும். ஒருவன் தன் கிருக வாழ்க்கையை விட்டு (தனக்கென) வீடில்லாத ஆச்சிரமத்துக்குச் சென்ற பிற்பாடு யாதொரு இன்ப அனுபவமுமில்லாததாகத் தோற்றிய தன் ஒடுக்க நிலையில் இன்ப அநுபவத்தைத் தேடல் வேண்டும். சகல சிற்றின்பங்களையும் புறக்கணித்துவிட்டு யாதொன்றையும் தனது சொந்தமாகக் கூறாமல் விவேக ஞானமுள்ளவன் மனதின் சகல தொந்தரவுக்காயும் விட்டுத் தன்னைச் சுவாதீனப் படுத்திக் கொள்ள வேண்டும்.

அறிவின் அம்சங்களில் நன்றாய் நிலைபெற்ற மனமுடையவர்களாய், சகல பற்றுகளையும் விட்டொழித்து, யாதொன்றையும் பற்றாது சந்தோஷிக்கிறவர்கள், தடுமாற்றங்களை யெல்லாம் வென்று ஞான ஒளி நிறையப் பெற்றவர்கள், இவ்வுலகத்திலும் சுவாதீன முற்றவர்களாயிருக்கின்றனர்.

தன்னுடைய (உலக) யாத்திரையை முடித்துத் துக்கத்தை விட்டொழித்தவனுக்கும், எல்லா விதத்திலும் தன்னை விடுவித்துச் சகல பந்தங்களையும் உதறியவனுக்கும் கஷ்டம் கிடையாது.

நனமுயற்சி சேமிக்கப் பட்ட தங்கள் ஆலோசனைகளுடன் அவர் சொல்லுகின்றனர், அவர்கள் தங்கள் விடுதியில் சந்தோஷ முள்ளவர்களாய் இருக்கின்றிலர்; தங்கள் ஏரியைவிட்டு நீங்கிய அன்னப் பக்ஷிகளைப் போல் அவர்கள் தங்கள் வீட்டையும் விடுதியையும் விட்டு விடுகின்றனர்.

யாதொரு ஐசுவரியமுமில்லாதவராய், வரையறுக்கப் பட்ட ஆகாரத்தை உண்பவராய், பாழும் நிராதாரமும், ஏகத்துவத்தைத் தரிசித்தவர்களது மார்க்கமானது; வெட்ட வெளியிற (பறக்கும்) பட்சிகளுடையதைப் போல் கண்டறிவது கஷ்டம்.

இச்சைகள் அடங்கப் பெற்று, போகவஸ்துக்களில் மூழ்காது, பாழும் நிராதாரமும், தனிமையும் வாய்ந்த தத்துவத்தைத் தரிசித்தவனது

மார்க்கமானது, வெட்ட வெளியிற் (பறக்கும்) பட்சிகளுடையதைப் போல அறிவது கஷ்டமாயிருக்கிறது.

சாரதியால் நன்றாய் அடக்கப் பட்ட குதிரைகளைப்போல புலன்களை யொடுக்கி, அகம்பாவத்தை விட்டும் தவறுதலை விட்டும் சுவாதீனம் பெற்றவனைப் பற்றித் தேவர்களுங்கூடப் பொறாமைப் படுகின்றனர்.

தன்னுடைய கடமையைச் செலுத்துகிறவன் பூமியைப் போல பொறுமையுள்ளவனும், மின்னலைப் போலவும், கலங்காத ஏரியைப் போலவும் இருக்கிறான்; இனிப் புதிய ஜனங்கள் அவனுக்கு சஞ்சிதமாயில்லை.

உண்மை ஞானத்தினால் அவன் சுவாதீனம் பெற்றுள்ளபொழுது அமைதியுள்ள மனிதனாகியுள்ளபொழுது அவனுடைய நினைப்பு அமைதியாயிருக்கின்றது, அவனுடைய வாக்கும் செயலும் சாந்தமடைந்திருக்கின்றன.

ஆயாது நம்புவதை விட்டு நீங்கி ஆனால் சுயமாய் உண்டாய வஸ்துவை அறிந்து, சகல பந்தங்களையும் அறுத்து, துர்மனக் கவர்ச்சிகளை யெல்லாம் விடுத்து, சகல இச்சைகளையும் ஒழித்துள்ளவனே பெரிய மனிதன்.

குடிசையிலோ அல்லது காட்டிலோ, கடலிலோ தரையிலோ பூஜ்ய அருகரானவர்கள் வசிக்கும் இடமெல்லாம் இன்பமுள்ளதாயிருக்கின்றது.

காடுகள் இன்பம் தரத்தக்கன; உலகத்தாருக்கு இன்பமில்லாத இடத்தில் இச்சையற்றவர்கள் இன்பம் அனுபவிப்பார்கள், ஏனென்றால் அவர்கள் சிற்றின்பங்களை விரும்பார்.

# உலகின் அத்தியற்புதக் காட்சி *

(ஸ்ரீ சி. கந்தையா எழுதியது)

ஆகாய வெளியில் அங்குமிங்கும் தூமப் படலம் (சூக்கும நட்சத்திர கணம்) என்றழைக்கப்படுகிற மென்மையான புகை போன்ற ஒளி வட்டங்களை தூர திருஷ்டிக் கண்ணாடி காட்டுகிறது. நாம் அவைகளைப் பார்க்கும் பொழுது குறைந்தது க0,000 வருஷங்களுக்கு முந்தின ஒரு விஷயத்தைக் குறித்துச் சிந்திக்க வேண்டியவர்களாகிறோம். ஏனெனில், அத் தூமப் படலங்கள் நமது சூரியனைப் பார்க்கிலும் சந்தேக மின்றிப் பெரியதும் பிரகாசமானதுமான சில நட்சத்திரங்களைத் தம்முட் கொண்ட பதினாயிரக் கணக்கான நட்சத்திரங்களடங்கிய தாரகஸ்தபகங்கள் (தாரா கணங்கள்). ஆனால் பூமியிலிருந்து அதிக தூரத்திலிருப்பதினால் ஒரு செக்கண்டுக்கு க,அசு,000 மைல்கள் வீதம் பாய்ந்து செல்லும் ஒளி அவைகளிலிருந்து நமக்கு வர க0,000 வருஷங்கள் வேண்டியதாயிருக்கிறது! அதன் கருத்தென்னவெனின், அந்த ஒளியை நாம் பார்க்கும்

* கல்கத்தாவில் கக௨௪-ஞு அக்டோபர்மீ பிரசுரமான 'மாடன் ரெவியூ' பத்திரிகையிலிருந்து எடுத்து மொழி பெயர்த்தது.



பொழுது இவ்வுலகின்கண் உண்டாயின ஆதி நாகரிகம் தொடங்குகிறதற்கு ஆயிரக் கணக்கான வருஷங்களுக்கு முன் அவைகளிலிருந்து வந்த ஒரு வஸ்துவை நாம் நிச்சயமாய்க் காண்கிறோம். செல்காலத்திற்கும் நிகழ் காலத்திற்குமுள்ள ஒரு பூரணமான தொடர்பு.

மேலும், பெருந் தூரத்திலிருக்கிற தாரகஸ்தபங்களில் சிலதை மிகவும் நுட்பமான தூர திருஷ்டிக் கண்ணாடியின் உதவியின்றிக் காணக் கூடாதென்றாலும் அவைகளில் ஒன்றின் குறுக்கே ஒரு ஒளிக்கிரணஞ் செல்லக் குறைந்தது, ரு00 வருஷங்கள் தேவையான அவ்வளவு பெரியவை.

சப்த ரிஷி மண்டலத்தின் ஆங்கிரீசர், வசிட்டர், மரீசி, நட்சத்திரங்களுக்குக் கீழிருக்கிற "கேனிஸ் வினற்றிஸி" (வேட்டை நாய்கள்) என்ற தாராகணத்தில் ஒரு புரி போன்ற தூமப் படலமிருக்கிறது. அதனுடைய ஒரு பக்கத்திலிருந்து மற்றதுக்கு ஒரு ஒளிக் கிரணஞ் செல்ல உரு,000 முதல் ௧0,000 ஒளி வருஷங்கள் வரைக்கும் தேவையான அவ்வளவு பிரமாண்டமான ஒரு சுழலும் சக்கரம்.

மற்றவைபோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது நமக்கு அதிக சமீபத்திலிருப்பவைகளிலிருந்து தான் இவ்வளவு குறைந்த காலமான க0,000 வருஷங்களில் ஒளி நம்மை அடைகிறது.

தனு ராசியில் முக் கூறான ஒரு தூமப் படலமிருக்கிறது. அது அதிகக் கொதிப்பினால் வெண்ணிறமான வாசங்களின் அல்லது இரசாயன வாயுக்களின் சேர்க்கையாலுண்டான வெறுங் கண்களுக்கு அதிகப் பற்றுப் புலப்படாத புகை போன்ற ஒளி வட்டம்.

அவைகளிலுள்ள அனேக நட்சத்திரங் களிலிருந்து வரும் ஒளி உ00,000 வருஷங்களுக்குக் குறைய நமக்கு வருகிறதில்லை யென்று வான சாத்திரிகள் மதிப்பிட்டிருக்கிறார்கள். அதனுடைய ஒளி பூமிக்கு வர க,000,000 வருஷங்கள் வேண்டு மென்று மதிப்பிடப்பட்ட ஒரு மங்கலான தூமப் படலம் சில மாதங்களுக்கு முன்தான் தனு இராசியில் கண்டு பிடிக்கப்பட்டது! மனிதனால், எக்காலத்திலாகுதல் தரிசிக்கப்பட்டவைகளில் அதிக தூரத்திலிருப்பது இதுவேயானாலும் இதுதான் வான வெளியின் எல்லை யென்று வான சாஸ்திரிகள் கூறவில்லை.

ஆகாய விரிவில் வெகு தூரத்திலுள்ள தூமப் படலங்களின் அமிசங்களைச் சூரியர்களென்று சொல்லுவது முற்றுஞ் சரியே. எல்லா நட்சத்திரங்களும் சூரியர்களே; சூரியன் ஒரு நட்சத்திரமே. வான மண்டலத்தைச் சந்தேகமின்றி ஆளுகிறவன் போலத் தோற்றுகிற நமது சூரியனும் ஒரு சாதாரணமான நட்சத்திரந்தான். சாயா பதத்தின் எல்லைக்குள் மாத்திரம் பூரண சந்திரனளவு பருமனுள்ள அ0,000 நட்சத்திரங்களைத் தூர திருஷ்டிக் கண்ணாடியினுதவியைக் கொண்டு பிடிக்கப்பட்ட சாயாபடங்கள் காட்டுகின்றன. எத்தனை நமது சூரியனை விடச் சிறியதோ அத்தனை அதை விடப் பெரியதே. (சாயா பதம். அனந்த கோடி நட்சத்திரங்களின் சேர்க்கையால் புகை போலத் தோற்றுகிற ககோளத்தின் குறுக்கே தெற்கு வடக்காய்ப் பட்டை போல் நீண்டிருக்கும் பால் வீதி மண்டலம்.)

சந்திரன் பிரகாசியாத தெளிவான ஒரு இரவில் நாம் ஆகாயத்தில் காண்கிற மிகவும் மங்கலான பொட்டுகளில் அநேகம் சூரியனைப் பார்க்கிலும் அநேக மடங்கு பெரிய நட்சத்திரங்கள். உண்மையாய் எந்த மங்கலொளியுள்ள நட்சத்திரத்தையும் நாம் நேர்ந்தபடி தெரிவு செய்தாலும் அது பெரும்பாலும் நமது சூரியனைப் போலப் பிரகாசமுள்ளதும் அதைப் போலப் பருமனுள்

னதும், (குறுக்களவு ஏறக்குறைய ௮௮௫,000 மைல்) 'கன அளவு உள்ள தூரகத்தானிருக்கும். (கன அளவு ஏறக்குறைய ௬00, 000, 000, 000, 000, 000, 000, 000,...000, 000, 000, 000, 000, தொன்திறை)

கால புருஷ மண்டலத்திலுள்ள ஒளியற்ற தூமப் படலம் வான மண்டலத்தில் எளிதில் அறிந்து கோடற்கரிய இரகசியங்களில் ஒன்றாயிருக்கிறது. அது அதற்கப்பாலிருக்கும் நட்சத்திரங்களின் பிரகாசத்தை மறைக்கிற ஒளியற்ற பதார்த்தத்தின் பிரமாண்டமான ஒரு கட்டி யென்று வான சாத்திரிகள் நம்புகிறார்கள்.

ஒரு பிரகாசமான நட்சத்திரத்தைத் தெளிவு செய்தால் அது நம்முடைய சூரியனைப் பார்க்கிலும் ஒரு பெரிய சூரியனே. அது நமது சூரியனைப் பார்க்கிலும் ௪00 மடங்கு பெரிதான கேட்டையைப் போலவும், அல்லது ௨0௦ மடங்கு பெரிதான திருவாதிரையைப் போலவும், அல்லது ௨௫ மடங்கு பெரிதான சுவாதியைப் போலவும் இருக்கவுங் கூடும். அவைகளில் சிலதைத்தான் தூரதிருஷ்டிக் கண்ணாடி யில்லாமல் பார்க்கக்கூடுமானாலும், வான சாத்திரிகளின் மதிப்புப்படி இரண்டு இலக்ஷக் கோடிக்கும் மூன்று இலக்ஷ கோடிக்கும் இடையிலுள்ள தொகையான நக்ஷத்திரங்கள் தெளிவு செய்வதற்கு இருக்கின்றன.

இந்த அகண்டாகார வெளியின் அளவை மனக் கண்ணில் அனேகக் துணிந்து பிரயோசனமற்றதாயும் மயக்கத்துக் கிடமானதாயும் முடியும். மற்றவைகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது மிகவுஞ் சிறிதான நமது பூமியின் சுற்றளவாகிய ௨௫,00௫ மைல்களுக்கு மேற்பட்ட தூரங்கள் அநேகருக்கு விளங்குவது அசாத்தியம். நட்சத்திர வெளியின் அளவோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது குறுகிய தூரமாயிருக்கிற பூமிக்குஞ் சூரியனுக்கு மிடையிலுள்ள ௯௩,000,000 மைல் தூரமும் ஒரு தெளிவான குறிப்பைக் காட்டவில்லை. ஆகையினால் நம்மிலிருந்து ௧௨0, 000,000,000,000,000,000,000, மைல் தூரத்துக்கப்பா லிருக்கிற தாராகணங்களைப் பற்றி நாம் கூறுவதென்ன? இதைப் போன்ற தூரங்களைப்பற்றி ஒரு தெளிவான விளக்கத்தைக் கொடுக்கிறதற்காக நட்சத்திர வெளியை அளக்கிறதற்கு வான சாத்திரிகள் ஒளி வருஷத்தைத் தெரிவு செய்திருக்கிறார்கள். ஒரு வருஷத்தில் ஒளி செல்லக்கூடிய தூரம் இதுவே— பெரும்பாலுஞ்சரியான, ௬,000,000,000,000 மைல்கள். மிக்க தூரத்திலிருக்கிற தாரகஸ்தபகங்களைப் பற்றி அவைகள் பூமியிலிருந்து ௨00, 000 ஒளி வருஷங்களுக்கப்பால் இருக்கின்றனவென்று வானசாத்திரிகள் சொல்லுவார்கள்; அதாவது அவைகளிலிருந்து பூமிக்குவர ஒளிக்கு ௨00,000 வருஷங்கள் செல்லும். சூரியனிலிருந்து ஒளி எட்டு நிமிஷத்துக்குக் கொஞ்சங் கூடிய நேரத்தில் நமக்கு வருகிற தென்பதை நாம் நினைவு கூறும் பொழுதுதான் நட்சத்திர தூரங்களின் மெய்யான அர்த்தத்தை உணரத் தொடங்குகிறோம்.

ஒரு தூம படலத்தை விண்ணுலகின் ஒரு முகிலென்றும், நமக்குத் தோற்றுகிறபடி மிகவும் உக்கிரமான சூட்டையுடைய மென்மையாகிய இரசாயன வாயுக்களின் மென்மை பெரிய விரிவுள்ளதாக்கப் பட்ட ஒரு அக்கினிப்படலமென்றும் கூறலாம். தூம படலங்கள் தான் நக்ஷத்திரங்களின் உற்பத்தித்தானங்கள் என்று சில வானசாத்திரிகள் அபிப்பிராயப்படுகிறார்கள்.

௧௯0௭ம் ஆண்டில் "யேர்க்ஸ்" நட்சத்திர கணித சாலையில் சாயப் படம் பிடிக்கப் பட்ட "மோர்கவுஸ்" வால் வெள்ளியுடைய வாலின் பரப்பப்பட்ட தூமம் போன்ற வஸ்துக்கூடகா



அளவற்ற தூரத்திலிருக்கும் நட்சத்திரங்களின் பிரகாசம் தோற்றுவது கவனிக்கத்தக்கது.

இப்பொழுது "இன்ரோமெடா" என்னுந் தாராகணத்திலுள்ள தூமபடலம் நமது சூரியனைப் பார்க்கிலும் பத்துக் கோடி மடங்கு பெரியது. அதினுடைய குறுக்களவு சூரியனுக்கும் பூமிக்குமுள்ள தூரத்தைப் பார்க்கிலும் பத்து இலக்ஷ மடங்கு பெரியது. அதினுடைய அருகில் ஒரு ஒலிசெலுத்துங் கருவியையும் மற்றதில் ஒலியேற்குங் கருவியையும் நாம் வைக்கக் கூடுமானால் ஒன்றிலிருந்து அனுப்பப் படுஞ் செய்தி கிட்டத்தட்ட ௨௫,000 வருஷ வரைக்கும் மற்றதுக்குக் கேட்காது. இத் தகைய பெண்ணம் பெரிய அக்கினிப்படலமிருக்கும் சரியான இடத்தை ஒரு வான சாத்திரி நமக்குக் காண்பித்தாலும் ஒரு தூரதிருஷ்டிக்கண்ணாடியில்லாமல் நாமதைப் பார்க்கத்துணிவது கண்களை வீணாய்ச் சிரமப்படுத்துவதாய்த்தான் முடியும். ஏனெனில் இந்தப் பிரம்மாண்டமான ஒளிப்பரப்பை அநிலாண்ட கோடிகளையும் தன்னுள்ளடக்கியிருக்கிற அளப்பரும் வான வெளியோடு ஒப்பிடுவது ஒரு துளி நீரை "நயகரா" நீர் வீழ்ச்சியின் வெள்ளப் பெருக்கோடு ஒப்பிடுவதாயிருக்கும் அளவுபடாத வான வெளியின் புற வெல்லையில் அது இருக்கிற தென்பதுபற்றியு மல்ல; ஏனெனில் வானசாத்திரிகளின் கணிதப்படி அது மத்திய தூரத்தில்தானிருக்கிறது.

"ஒபின்கஸ்" தாராகணத்தில் இரத்தினக் கற்கள் போன்ற எண்ணற்ற சூரியர்களால் சூழப்பட்ட S இவ்வித உரு அமைந்த எளிதில் அறிந்து கோடற்கரிய, ஒளியற்ற ஒரு தூம படலமிருக்கிறது.

மேலே சொல்லிய, இத்தூமபடலம் பூமியை நோக்கி மெதுவாய் வந்து கொண்டிருக்கிறது. அதாவது வான சோதிகளின் கதி விதப்படி மந்தமாய்த் தான். ஒரு செகண்டுக்கு ஏறக்குறைய ௨00 மைல் வீதம் நம்மைக் கிட்டுகிறது. ஒரு வருஷத்துக்கு ஏறக்குறைய ௬0,000,000, 000,000 மைல் வீதம். ஒரு நாளைக்கு அது நம்மைச் சமீபிக்கலாம், ஆனால் அதைக் குறித்து நாம் திகில் கொண்டு கவலைப் படவேண்டியதில்லை. ஏனெனில் ஒரு வருஷத்துக்கு ௬0,000 000 000 000 மைல் வீதம் நகர்ந்து வந்தாலும் ௧,000,000,000,000 வருஷங்கள் சென்ற போதிலும் நாமதைக் காணக் கூடிய விதமாய் நமக்குக் கிட்ட வரக்கூடாத அவ்வளவு அகாத தூரத்திலிருக்கிறது. இந்த அக்னி படலத்துடைய தூரத்தை அவாந்தர வெளியிலுள்ள மற்ற ஜோதிகளின் தூரங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது இது நியாயமான சமீபதூரத்தில் தான் இருக்கிற தென்பது நினைவுகூறத்தக்கது.

சிலவேளைகளில் அளவிலா வானத்திலிருந்து சில நம்மைச் சந்திக்க வருகின்றன. நாம் அவைகளை நூதனப் பொருட் காட்சிச் சாலைகளில் கண்டிருக்கிறோம். ஒரு நூதனப் பொருட் காட்சிச் சாலைக்குக் கொண்டு போகுமுன் நாம் காணும்படி நமது வீடுகளுக்குக் கிட்டவும் பூமியில் விழுந்திருக்கக் கூடும். இங்ஙனம் வருபவை அதிகப் பற்றாய் இறுகிய கெட்டியான உலோகங்களாயிருந்தாலும் மிக பெரிய கற்பாறையைப் போலத் தோற்றுகின்றன. இவைகளோ வானக் கற்கள்.

இவைகள் ஒரு அவுன்சு தொடக்கம் ஒரு தொன்னுக்கு மேலான நிறையுள்ள, எரிந்து எஞ்சிய பூவுலக சம்பந்தமான பதார்த்தங்களின் துணுக்கைகளாயிருக்கின்றன. ஒவ்வொரு நாளும் ஒரு கோடி தொடக்கம் பத்துக்கோடி வரைக்குமுள்ள வானக் கற்கள் இப் பூமியின் மேல் வீசப் படுகின்றனவென்று வானசாத்திரி

கள் சொல்லுகிறார்கள்! என்றாலும் பூதலத்தைக் கிட்டுகிறது சிலவே! மீதியானவை அவைகளுடைய வெகு வேகமான கதியில் பூமியைச் சூழ்ந்து கொண்டிருக்கும் வாயுமண்டலத்திலுள்ள வாயு அணுக்களில் உராய்ந்துச் செல்வதினால் உண்டாகும் மிக்க சூட்டினால் எரிந்துபோகின்றன.

௫௦௦௦௦ தொடக்கம் ௨௦'௦௦ வரைக்குமுள்ள ஒளி வருஷங்களுக்கு அப்பாலிருக்கும் தாராகணங்களைப் போன்ற அளவுக்கெட்டாத வானத்திலிருக்கும் பொருள்கள் வானசாத்திர ஆராய்ச்சிக் கருவிகளுக்குத் தானும் பருமனிலும் பிரகாசத்திலும் வித்தியாசப் படுகிறதாய்த் தோற்றுகின்றன; ஆனால் அவைகளுடைய தூரங்கள் இன்னும் அதிகமாய் வித்தியாசப் படுகிறதென்ற உண்மை உடனே புலப்படக் கூடியதாயில்லை. அதனாற்றான் ககோள எல்லைபோல் தோற்றுகிற இடத்துக்குக் கிட்ட இருக்கும் நட்சத்திர சம்பந்தமான பொருள்களின் தூரம் இவ்வளவுதானிருக்குமென்று வான சாத்திரிகள் மதிப்பு மாத்திரஞ் சொல்லக் கூடியவர்களாயிருக்கிறார்கள்.

ஆயிரக்கணக்கான நட்சத்திரங்களைக் கவனித்துப் பார்த்ததின் பயனாக அவைகளின் பிரகாசத்திலுள்ள வித்தியாசத்தை அவைகளின் தூரத்திலுள்ள வித்தியாசமாகக் கொள்ள வான சாத்திரிகள் கற்றுக்கொண்டார்கள். ஆதலினால் தெரிந்த தூரத்திலிருக்கும் நட்சத்திரங்களின் ஒளி அளவோடு அதிகதூரத்திலிருக்கும் வான சோதிகளின் ஒளி அளவை ஒப்பிடுவதினால் பிந்தினவைகளின் தூரத்தை வான சாத்திரிகள் சரியாய் மதிப்பிடக் கூடியவர்களாயிருக்கிறார்கள்.

விண்டுரைக்க அரிய அரியதாய் விளங்குவான வெளி
யெனநின்றானை
அண்ட கோடிகள் வானிலமைத்தானை அவற்றி
லெண்ணற்ற வேகஞ் சமைத்தானை
மண்டலத்தை யணுவணுவாக்கினால் வருவதெத்தனை
யத்தனை யோசனை
கொண்ட தூர மவற்றிடை வைத்தானை கோலமே
யுனைக் காளியென் றேத்துவேன்.

சி. சுப்பிரமணிய பாரதியார்

# ஆனந்தரங்கப்பிள்ளையின் தினசரி

—:(*):—

விக்கிரம ௵ சித்திரைமீ ௲௭௱௬௰ ஆண்டு
௰௧வ சனிக்கிழமை அப்ரெல் மீ ௧௯வ

இந்த நாள் கேழ்க்கப்பட்ட சேதி மகா நாட்டார் எல்லாம் சேஷாசல செட்டியார் வீட்டிலே கூடி சாதி சாதிக்கும் பெரிய மனுஷராய் இருக்கிறவர்களிலே நாலு பேரை சாதி சாதிக்கும் அழைச்சனுப்பிச்சதின் பேரிலே கந்தப்ப முதலி பெரியண்ண முதலி சவுரி ராய பிள்ளை இவர்கள் வந்தவர்களிலே கந்தப்ப முதலி இருந்துகொண்டு எங்களை என் அழைச்சு அனுப்பிச்சீர்களென்று கேட்டதின் பேரிலே முசெலறி கொவர்னர் தொரை இரண்டு லக்ஷ ரூபாயி கொடுக்கச் சொல்லிக் கேழ்க்குறார். அதுக்கு யோசனை பண்ணிக்கொண்டு இதுக்கு ஒரு வரி பிரிச்சு எழுத வேணுமே அது நிமித்தியம் அழைச்சோமென்று சொன்னதின் பேரிலே கந்தப்ப முதலி உதாளப்பட்டு எங்களைப்போலே லக்ஷம் அன்பதினாயிரம் நீங்கள் கொடுத்தீர்களா உங்களைப் போலே பணக்காரர்களைச் சாக்குச் சாக்காய்க் கட்டி



சலங்கின்பேரிலே போட்டு நாகபட்டணம் தரங்கம்பாடி தஞ்சாவூர் இவிடங்களிலே அனுப்பிவிட்டோமா இருக்கிறவன் குடுக்கிறதுதானே எங்களை அழைக்க வேண்டிய காரியம் என்ன இருக்கிறது என்று சொன்னதின் பேரிலே துரைகளுக்குத் தார்த்துப்படிக்கு அழைச்சோமென்று சொன்னதின் பேரிலே ஆனால் துரையண்டை போவோம் வாங்கள் என்று கந்தப்ப முதலி அழைச்சதாகவும் அதிலே சாணார் பிள்ளை இரண்டு மூணு நாட்டாமைக்காரரிருந்துகொண்டு முன்னேயும் நாங்கள் எழைகள் வரி குடுத்தோம். பணக்காரர் ஆரும் கொடுக்கவில்லை. இப்பவும் எழைகளைத்தான் சொல்லுகிறதாயிருக்குது. ஆனால் இப்ப அவனவன் ஆஸ்திபாஸ்தியை சத்தியமாய்ப் பெருமாள் கோயிலிலே போயி சுவாமி முன்பாக எழுதி வச்சு அதின் பேரிலே பணம் இருக்கிறவன் குடுக்கிறானென்று சொன்னதாகவும் அதின் பேரிலே ராமச்சந்திர ராயன் கனகசபைப் பிள்ளையும் யிருக்கிறவர்கள் சத்தியமென்று சொல்லச்சே யோசனை என்ன இருக்குது. ஆனால் இந்த ஞாயம் பகலுக்கு மேலாய் துரையுடனே சொல்வோமென்று எல்லோரும் அவரவர் வீட்டுக்குப் போய்விட்டார்கள். இனிமேல் என்னமாய் தீருமோ அது அறிஞ்சு எழுத வேண்டியது. மத்தியானம் மகா நாட்டார் சாயங்காலம் சம்பாக் கோயிலண்டை ஏகத்துக்குக் கூடி கோட்டைக்கு முசெலறி கொவர்னர் தொரண்டைக்கு கண்டு பேச போன விடத்திலே சமயமில்லாமலிருக்கச்சே அதிலே பத்து மணிக்கு மேலே கோட்டையிலே இரண்டு பீரங்கி போட்டுத் தம்புரு அடிச்சு வெள்ளைக்காரர் எல்லாம் வரிசை வச்சு அந்தக் கலிபிலியைத் தொட்டு சமயமில்லாமல் காலமே ஆகட்டுமென்று மகா நாட்டார் புறப்பட்டு வந்துவிட்டார்கள்.

விக்கிரம ௵ சித்திரை மீ ௲௭௱௬௰ ஆண்டு
௧௨ வ ஞாயிற்றுக்கிழமை. அப்ரெல் மீ ௨௰ வ

இந்த நாள் கேழ்க்கப் பட்டசேதி நேத்துப் பகலுக்குமேலாய் இங்கிலிசுக்காரருடைய மனுஷரை இருநூறு குதிரைக்காரன் மட்டுக்கும் போயி கூடலூர் திருப்பாப்புலியூர், மஞ்சக்குப்பம் இதுகளெல்லாம் தோரணம் வச்சுக் கொண்டார்களென்றும் இங்கிலிசுக்காரருடைய மனுஷர் விஸ்தாரமாய் வாறார்களென்று வருகிறத்துக்கு முன்னே தானே நம்முடவர்கள் அங்கேயிருந்த கும்மாந்தான் போட்டியிருக்கிற சட்டையுடனேயும் பின்னையிருந்த சொலதாது சட்டைக்காரர் முப்பது பேர் மட்டுக்கும் படகின் பேரிலே ஏறி இவடத்துக்கு வந்து விட்டார்கள். இங்கிலிசுக்காரர் மனுஷர் சுகமாய் தோரணம் வச்சுக்கொண்டு அமுலுக்கும் ஒரு பிராமணனை வச்சுயிருக்கிறார்களென்று சமாச்சாரம் கேழ்க்கப் பட்டுது. இந்த நாள் பனிரெண்டு மணிக்கு மகாநாட்டாரெல்லாம் கூடி யொருத்தருக் கொருத்தர் ஆள்குபகு எழுதி கையெழுத்துப்போடச் சொல்லி விசேஷங்கள் நடந்த விடத்திலே ராமசந்திர ராயனும் பாபுராயனும் கையெழுத்துப்போட சம்மதி யில்லாமல் போனபடியினாலே நல்லது எல்லோரும் போயி முசெலறியுடனே சொல்லிக்கொள்வோமென்று போன விடத்திலே முசெலறி இருந்து கொண்டு இரண்டு லக்ஷம் ரூபாயி நீங்கள் குடுக்க வேண்டுமென்றுசொன்னதின் பேரிலே மகாநாட்டாரிருந்துகொண்டு நாங்கள் குடுத்துக் குடுத்துக்கெட்டுப் போனோம். எங்களுக்குக் குடுக்கிறத்துக்கில்லை என்று சொன்னதின் பேரிலே ஆனால் இவர்களை யெல்லாம் காவலிலே வை என்று உத்தாரம் பண்ணினதாகவும் அதன் பேரிலே ராமசந்திர ராயன், பாபுராயன் கும்பனி வர்த்தகர் வகையறா பதிமூணு பேரும் மகாநாட்டார் நாட்டாமைக்காரரிலே பதிமூணு பேரும் ஆக இருபத்தாறு பேரை மேலண்டைக் கோட்டை வாசப்படி மேலே காவல் வச்சதாய் சேதி கேழ்க்கப் பட்டுது முசெலறி மூணு நாளாய் சரீரம் சொஸ்தமில்லை யென்று காம்புரிலே கதவைச் சாத்திக் கொண்டு இருக்கிறாரெங்கிறதாய் சேதி கேழ்க்கப்பட்டுது.

விக்கிரம ௵ சித்திரை மீ ௲௭௱௬௰ ஆண்டு
௧௩ வ திங்கட் கிழமை. அப்ரெல் மீ ௨௧ வ,

இந்த நாள் பகலுக்கு மேலாய் மூணு மணிக்கி முசெபுலிக்கு ரெண்டாவதாயிருக்கிற வெள்ளக்காரன் ஒருத்தன் குதிரை ஏறிக்கொண்டு நயனருமா வந்து முசெலறி அழைக்குறானென்று நம்மை அழைச்சார்கள். நமக்கு நாலு மாசமாய் சரீரம் சொஸ்தமில்லாமலிருக்கிறது தெரியாதா என்று சொன்னதின்பேரிலே ஆனால் உங்கள் மனுஷன் யாரையாகிலும் அனுப்பிவையும்

என்று சொன்னதின் பேரில் மெலகிரி செட்டியை அனுப்புவோம் என்று யோசனை பண்ணினோம் அதிலே அந்த வெள்ளைக்காரன் இருந்துகொண்டு சொன்னது உங்களையும் பாப்பைய பிள்ளையும் பெரியண்ண பிள்ளையும் பாப்பயபிள்ளை மகனும் அப்படித் தானே போயிருக்கிறார்கள். நீர் வரவில்லையே. உம்முட தம்பிமகனுமிருக்குறாரே அவரை அனுப்பிவியும் என்று சொன்னான். அதின் பேரிலே அப்பாவை அனுப்பிவிச்சோம். அவர்கள் அப்பாவை இப்போ வரி வாங்கிறத்துக்கு ஏற்பட்டிருக்கிற வங்காளத்திலேயும் செல்விரோய் வந்திருக்கிற மூசெகுத்தேனெங்கிறவனண்டை அழைச்சுக்கொண்டு போனார்கள். அவன் அப்பாவைக் கோட்டையின் மெத்தையின் பேரிலே போயிரும் நான் வரேனென்று சொன்னான். அப்பாவு மகா நாட்டாரிருக்கிறார் மேலண்டைக் கோட்டைவாசப்படி மேலே அவர்கள் இருக்கிற இடத்திலே வந்து இருந்தார். அப்பறம் மூசகுதேன் என்கிறவன் வந்து அப்பாவை அப்பாலே யழைச்சு நீங்கள் இப்போ எம்மாதிரியாகிலும் கும்பினி சிலவுக்குக் குடுக்க வேண்டுமென்று கேட்டதின் பேரிலே எங்களுக்கு என்ன இருக்குது. முன்னே பதினாயிரம் ரூபாயி தெண்டத்துக்குத் தானே உடமை தட்டுமுட்டெல்லாம் மடங்க சாலையிலே வித்துக் கொடுத்தோம். மறுபடியும் மூசெலெறி பணம் வாங்கினபோது நம்மைப் பணம்கேட்ட விடத்திலே நம்முட நிருவாகமெல்லாம் சொல்லிக் கொண்டோம். அவர் இதுகளெல்லாம் நன்றாய் விசாரித்துப் பார்த்து மெய்தான் ஒண்ணுமில்லை யென்று தெரிஞ்சு விட்டுவிட்டார். இது சகலமான பேரும் அறிவார்கள் என்று சொன்னதின் பேரிலே நல்லது மகா நாட்டாரை இரண்டு லக்ஷம் ரூபாயி குடுக்கச் சொல்லிக் கேட்டிருக்கிறோம். அந்த ரூபாயை அவர்களைக் கேட்டுவாங்கிப் போடும் என்று சொன்னான். அப்பாவு சொன்னது அவர்களெல்லாம் இதோ இருக்கிறார்கள். நீங்கள் தானே கேளுங்கள். நீங்கள் சொன்னதை அவர்களுடனே சொல்லுகிறேன். அவர்கள் சொல்லுகிற உத்திரவை உங்களுடனே சொல்லுகிறேனென்று சொன்னதின் பேரிலே மகா நாட்டாரை பணம் கேட்டவிடத்திலே அவர்கள் எங்கள் கையிலே பணம் ஏது முன்னதானே குடுத்து விட்டோம். பணம் இல்லையென்று சொன்னதின் பேரிலே ஆனால் நீங்கள் எல்லாம் காவலிலே இருங்களென்று சொல்லி ராமச்சந்திர ராயனை, பாபு ராயனை மேலண்டை கோட்டைவாசப் படியிலே கசோத்திலே போடச்சொல்லி மத்தப்பேரையெல்லாம் வாசப்படிமேலே காவலிலே வைக்கச் சொன்னான். அப்பாவையும் ராத்திரிக்கு மாத்திரம் நீரும் கூட இரும் இல்லாவிட்டால் நன்றாயிராதென்று சொன்னான். அப்பாவு ராத்திரிக்கு கோட்டையிலே தானே மகா நாட்டாருடனே கூட இருந்தார். மூசெலெறி துபாசி கந்தப்ப பிள்ளையும் கூடக் காவல் வைச்சார்கள். அப்பாவையும் பெரியண்ண பிள்ளையையும் பாப்பய பிள்ளை மகனையும் அழைப்பிச்சவன் ராமச்சந்திர ராயன் அவன் தான் மூசெலெறி யுடனே சொல்லி அழைப்பிச்சவன் இவர்கள் போனவுடனே பாத்தியானாள் அழைப்பிச்சேனென்று அங்கேயிருந்த மகா நாட்டாருடனே சொல்லி நகைச்சான். அவர்களுக்குத்தானே உடனே கசோத்திலே போடச்சொல்லிச் சுவாமி தயவு பண்ணினார். இப்படி அவமரியாதை பண்ணினத்துக்கு மூசெகில்லியர் சின்ன துரையானபடியினாலேயும் அவருக்கும் மூசெபுலோவுக்கும் மூசெலெரியர் பிள்ளையும் இரண்டொருத்தர்க்கும் செலக்காருக்கும் சொல்லி அனுப்பிச்சத்துக்கு அவர்கள் சொல்லியனுப்பின உத்தரவு நாங்களென்ன இந்த செல்வுகளுக்கு சமாதானம் எங்களுடனே சொல்லியாகிறதென்ன என்று சொன்னார்கள்.

உன்னை மெய்யனாக்கிக் கொள். அப்பொழுது உலகில் ஒரு துன்மார்க்கன் குறைந்தான் என்று நீ நிச்சயமாய் அறிந்து கொள்ளலாம். கார்லைல்.

* * *

எவரைக் காணுந்தோறும் இறைவன் ஞாபகம் வருகின்றதோ அவரே ஆண்டவன் அடியாரில் சிறந்தவர். மகமது நபி.



# நமது சிற்பச் செல்வம்

## பழனி

ஒரு காலத்தில் சிவ பெருமான் சக்தி, சிவம் என்ற இரண்டு மலைகளை அகத்தியரிடம் கொடுத்து அதைத் தென்திசையிற் சேர்க்கச் சொன்னார். அகஸ்தியர் அம் மலைகளை வடக்கே ஒரு காட்டில்



பழனிக் கோயில்

வைத்துவிட்டுத் தென்திசை சென்றார். சில ஆண்டுகளான பிறகு மறுபடி அகஸ்தியர் அம் மலைகளைத் தென்திசைக்கு எடுத்தேக வந்தார். இடம்பன் என்னும் அசுர குரு அவைகளைக் காவடி போலத் தூக்கிச் சென்று அகத்தியருக்கு உதவி புரிந்தான். போகும் வழியில் அம் மலைக் காவடியைப் பழனிக் காட்டில் வைத்தான். மறுபடி அதை எடுக்க முடியவில்லை. காரணம் தெரியாது தயங்கினான். எங்கும் சுற்றிப் பார்த்தான். பழனி மலை மீது பிரம்ம தண்டம் ஏந்திய ஒரு ஒளி மைந்தனைக் கண்டான். கந்தனே அவ்வொளி மைந்தன். தேவ சேனாபதியாகிய வடிவேலன் குறிஞ்சி மன்னனாக அங்கு அமர்ந்திருக்கிறான். அவனுடைய இச்சையினாலேயே வைத்த மலைகளை எடுக்க முடியவில்லை. இதையறிந்த அரக்கன் முருகனிடம் பொருதினான். முருகன் அரக்கனை வீழ்த்தினான். பிறகு அவ் வரக்கனது மனைவியின் வேண்டுகோளால் அவனை எழுப்பித் தன் காவலனாக நிய

மித்தான், அவ் வரக்கன் செய்தது போன்று தன் மலைக்குக் காவடி கொண்டு வருவோருக்கு நலமெல்லாம் புரிவதாகவும் வாக்களித்தான். அன்று முதல் இன்று வரை பழனியாண்டவனுக்குக் கோடிக் கணக்கான காவடிகள் சென்று கொண்டிருக்கின்றன.

தெரிதற்கரிய மந்திரத்தைத் தனது தந்தைக்கும் உபதேசித்த நமது தமிழ்க் கடவுள் விற்றிருக்கும் பார்க்கத் தெவிட்டாது. அகத்தியருக்குத் தமிழையும், தேவர்களுக்கு ஓங்கார ரகசியத்தையும் உபதேசித்த வாயையும், அன்பர்களுக்கு அருள் புரியும் கண்களையும், அரக்கரைக் கொன்று அந்தணரைப் போற்றும் கைகளையும், பரந்து விரிந்த மார்பையும், பசிய தோற்றத்தையும் காண்பவர் அத் திருவுருவே உள்ளமாகி அன்பினால் உருகுவா ரென்பதில் ஐயமுவதோ? இத்தகைய அருளுருக் கொண்ட கடவுள் வாழும் பழனிக் கோயிலைப்




பழனிக் கோயில் பிராகாரம்

பழனிமலை என்னுவோருக்குப் பக்தியும், பார்ப்போருக்கு ஆவேசமும் தரத்தக்கது. இது திண்டுக்கல்லினின்று ௪௦ மைல் இருக்கிறது. இம்மலை கொடைக்கானல் மலையின் தொடர்பு. லக்ஷ்மி, சூரியன், பூமிதேவி, அக்னி முதலியோர் வழிபட்ட பாலவடிவான பழனியாண்டவரின் திரு, பார்க்கப் படத்தில் காட்டியிருக்கிறோம். அதிலுள்ள கல்வெட்டுகளும், மலைப் பாறையிலேயே செதுக்கப்பட்ட வேலைகளும் மிகவும் அழகாயிருக்கும்.

### திராக்ஷாராமம்

இந்த க்ஷேத்திரம் கோதாவரி ஜில்லாவிலுள்ள இராமச்சந்திரபுரத்திற்கு ஐந்து மைல் தென் கிழக்





திராக்ஷாராமம் கோயில்

கிலிருக்கிறது. இது தக்ஷதபோவனமென்று முன் அழைக்கப்பட்டது. இங்கேதான் தக்ஷன் யாகம் செய்ததென்று நம்பப்படுகிறது. இதிலிருக்கும் இலிங்கம் வியாசரால் பிரதிஷ்டை செய்யப்பட்டதெனச் சொல்லுகிறார்கள். சப்த ரிஷிகளும் இதை வழிபட்டனர். இக் கோயிலில் சப்தகோதாவரி என்னுமோர் புண்ணிய தீர்த்தம் உள்ளது.

செய்யும் யாகத்திற்குப் போகவேண்டுமென்று ஆத்திரப்பட்டாள். சிவபெருமான் எவ்வளவோ தடுத்தும் தாக்ஷாயணி தக்ஷ யாகத்திற்குப் போனாள். தன் தகப்பனான தக்ஷன் மகளைச் சிறிதும் விரும்பியழைக்கவில்லை. இந்த அவமதிப்பால் மனங்கசிந்த தாக்ஷாயணி தன் கணவன் சொல்லை மீறி வந்ததை வருந்தி யாககுண்



திராக்ஷாராமன் கோயில் குளம்

இராஜ ராஜ சோழன் ராஜமந்திரியில் அரசாண்டு வந்தபோது, பதினோராவது நூற்றாண்டில் இக் கோயில் கட்டப்பட்டதாகத் தெரிகிறது.

தக்ஷன் தான் செய்த யாகத்திற்குச் சிவபெருமானை அழைக்கவில்லை. சிவபிரான் தக்ஷன் மகளான தாக்ஷாயணியை மனைவியாக் கொண்டிருந்தான். தாக்ஷாயணிமட்டும் தனது தகப்பனார்

டக்கில் விழுந்து இறந்தாள். இதைக் கேட்ட சிவபிரான் வெகுண்டு தக்ஷனை அழித்தார். இந்த யாகத்தை திராக்ஷா ராம வாசிகள் கொண்டாடுகின்றனர்.

பேர் பெற்ற முகம்மதியத் துறவியான ஸையித் ஷாபாஜி ஆலியா என்பவர் மெதினாவிலிருந்து இக் கோயிலுக்கு வந்து ஒரு மசூதி



கட்டினார். அத் துறவிக்கு இங்கேயே ஒரு சமாதி அமைக்கப்பட்டிருக்கிறது. இச் சமாதி கட்டி ௫00 ஆண்டுகள் ஆகிறதாக அறிகிறோம்.

திராக்ஷாராமம் கோயில் அழகிய வேலைப்பாடுகளுடனும் பல கோபுரங்களுடனும் விளங்குகிறது. இக் கோயிலையும் அதன் கண்ணுள்ள



திராக்ஷாராமம் கோயிலும் குளமும்

இச் சமாதியில் அடங்கிய ஆலியாவும் நாகூர் மீரா சாஹபும் ஒரே காலத்தவரே.

புண்ணிய தீர்த்தத்தையும் படத்தில் காட்டியிருக்கிறோம்.

## விநோதச் செய்திகள்

பட்டைப் போல் நீண்ட நார்ப் பொருள் இல்லை. ஓர் பட்டுப் பூச்சியின் கூண்டினின்று முக்கால் மைல் நீளப்பட்டு நூல் எடுக்கப்பட்டதாம்.

லந்தனில் உள்ள பில்லிங்ஸ் கேத்து என்கிற சந்தை ஆயிரம் வருஷமாக மீன் சந்தையாகவே இருக்கிறது.

பியானோ என்கிற ஐரோப்பிய வாத்தியப்பெட்டி ஒன்று செய்வதற்கு மரமும், உலோகமும், மொத்தமாக ௧0,000 தனித் தனி துண்டுகள் தேவையாயிருக்கின்றன.

# ஹர்ஷ சக்ரவர்த்தியின் சமயம்

(ஸ்ரீமான் ச. செல்லம்பிள்ளை எழுதுவது)

நம் பாரத நாடு பல சமயங்களைக் கண்ட நாடு. வேறைய நாடுகளைப் போல் எளிதில் அழியாது, என்றும் நிலை நிற்பது சமையப்பற்றாலேயே. உலகிற்கே அரிய உபதேசங்களை வழங்கி ஓங்கிய புகழோடு நிற்பதும் இந்நால்தான். இது அன்பும் அருளுந் தங்கிய புத்த மதத்தைக் கண்ட தொருக்கால். உயிர்களிடம் உள்ளன்பைச் செலுத்தி வலுத்தது அது. அந்தணரும் அரசரும் அதை ஆதரித்தனர். புத்த மதத்தை நிலை நிறுத்திய அரசர் அசோக மகா ராஜாவிற்குப் பிறகு ஸ்ரீ ஹர்ஷ சக்கரவர்த்தியே. அசோகனோடு அழியவிருந்த புத்த மதம் ஹர்ஷனால் உயிர் பெற்றது. இவர் பாரதம் முழுதும் ஒரு குடைக்கீழாண்ட பெரியவர். புலவரைப் போற்றி வந்தார். இன்னாரின் வேறைய செயல்களை எடுத்துக் கூற இங்கு இடமில்லை.

ஸ்ரீ ஹர்ஷனுடைய காலத்தில் தலைமை பெற்று விளங்கிய சமயங்கள் இந்து புத்த சமண சமயங்களாம். அக்காலத்தில் இந்து மதம் உயரிய நிலையிலிருந்தது. மும் மூர்த்திகளோடு சூரியனும் ஒரு கடவுளாக எண்ணப்பட்டான். சூரியனுடைய ஆலயங்கள் ஆங்காங்குள்ளதாய் பல கல் வெட்டுகளால் புலனும். செய்யுள்களும் இதை விளக்குவன உள. தென்னிந்தியாவில் சைவ சமயம் சிறப்புற்றோங்கிய திக்காலமே. ஞானசம்பந்தரும் நாவுக்கரசரும் வாழ்ந்த திக்காலமே.

ஹர்ஷனுடைய காலத்தில் புத்த மதமும் சமண மதமும் அழிந்துவிட்டனவாயினும் பல பௌத்த மடங்களும் ஸ்தூபங்களும் பிக்ஷு பிக்ஷுணிகளும் பாரதத்தின் பல பாகங்களிலு மிருந்ததாக யுவாங் சுவாங் கூறுகிறார். அக் காலத்தில் புத்த மதம் ஹீனயான மதமென்றும் மஹா யான மதமென்றும் இரண்டு பிரிவுபட்டு இருந்ததென்றும் முன்னையது தென்னிந்தியாவிலும் பின்னையது வட இந்தியாவிலும் சிறப்புற்று விளங்கியதென்றும் எழுதியுள்ளார்.

இவர் காலத்தில் முதன்மை பெற்ற பௌத்த மடம் மகதத்திலுள்ள நாளந்த விஹாரம். இதை ஒரு பெரிய கலாசாலையாக வெண்ணலாம். கிழக்கு ஆசியாவில் தலைமையான மடம் இதுவே. பாரதத்தின் பல பாகங்களிலிருந்தல்லாது சீனம் முதலிய அயல் நாடுகளிலிருந்தும் மாணவர்கள் இங்கு வந்து பயிலுவார்கள். பௌத்த மத நூல்களை மட்டிலும் படிப்பதோடு அவர் நின்றுவிடவில்லை. இந்து மத நூல்களையுஞ் சமணத்தைச் சார்ந்த கிரந்தங்களையுங் கசடறக் கற்று வந்தனர். ஜாதி மத பேதமின்றி எல்லா மாணவருக்கும் அங்கு செல்ல அனுமதியுண்டு. நாளந்த விஹாரத்திற்கு ௨௦௦க்கு மேல் கிராமங்களும் ௯௦௦௦க்கு மேல் சன்னியாசிகளும் அ-பிரசங்க மேடைகளும் ௯௦௦-அறைகளு முண்டென இ—த்ஸிங் என்பார் கூறியுள்ளார். அங்குள்ள பண்டிதர்கள் ஊர் ஊராய்ச் சென்று தங்கள் மத வுண்மைகளை நிலைநாட்டப் பிரசங்கங்கள் செய்வார்கள். யுவாங் சுவான் இதைப்பற்றி விரிவாக எழுதியுள்ளார். இந்நால் அக்காலத்தில் புத்த மதத்தின் நிலை விளங்கும்.

இனி இவருடைய மத நயத்தைப் பற்றி சிறிது சிந்திப்போம். திபத் தேசத்தானாகிய தாரநாதன் என்ற சரித்திரக்காரனது வாக்கை ஆதாரமாகக்கொண்டு சில பண்டிதர்கள் ஹர்ஷனிடம் பர சமய ஹிம்ஸைப் பழியைச் சுமத்துகிறார்கள். ஆனால் அவர் கூற்றைப் பலமாகக் கண்டித்து தாரநாதன் கூறியது ஹர்ஷனை யல்லவென்றும், அங்ஙனமாயின் காலம் இடம் முதலியன மாறுபடுகின்ற பலமான குறையுண்டெனவும் வாதிப்பார் ஒரு கூட்டத்தவர். இவர் கூற்று பல உத்திகளால் நிறுவப்பட்டிருப்பதால் அதைக் கைக்கொள்ள வேண்டுவது நமது கடமை. இது மட்டிலுமல்லாது ஹர்ஷனது அவைக் களத்துப் புலவராம் பாணனது புகழ்ந்துரைப் பாக்களால் பர சமய ஹிம்ஸை விளங்கவில்லை.

நம் நாட்டு மன்னரைப் போல ஹர்ஷனும் ஜாதிமத பேதமின்றி மன்னுயிரைத் தன்னுயிராய் பாது காத்து



வந்தார். இது இவர் காலத்துள்ள கல் வெட்டுகளாலும் யுவாங் சுவான், பாணன் முதலியோருடைய நூல்களாலும் விளங்கும்.

ஹர்ஷனுடைய முன்னோர் ஆதித்த பக்தர்கள். தன் தமையனாகிய ராஜ்ஜியவர்த்தனனும் தங்கை ராஜ்ஜிய ஸ்ரீயும் புத்த மதத்தைக் கைக்கொண்டபோது இவரும் அதைக் கைக்கொண்டார். இவர் புத்த மதத்தில் அளவில்லாப் பக்தியைச் செலுத்தி வந்த போதிலும் சைவ சமயத்திலும் ஆதித்திய மதத்திலும் அன்பைக் கொண்டிருந்தார்கள்.

ஸ்ரீ ஹர்ஷனுடைய வரலாற்றிற்கு இன்றியமையாத நூலை யுதவிய யுவாங்சுவான் புத்தமத நூல்களைச் சேர்ப்பதற்கும் புத்த முனிவின் வாஸத்தால் தூய்மையான இடங்களைப் பார்வையிடுவதற்கும் சீனாவிலிருந்து புறப்பட்டார். பாரதத்தின் பல பாகங்களிலுஞ் சுற்றிய பிறகு நாளந்த விஹாரத்தில் சில நாளிருந்தார். காம ரூபத்திற்கரசனும் பாஸ்கரவன்மனது வேண்டு கோளின்படி அவர் நாடு சென்றார். இறக. ஹீனயான்மதத்திற்கும்மஹாயான மதத்திற்கும் உயர்வுதாழ்வு கற்பிக்க வேண்டியதாயிற்று. ஒரு பெரிய சன்னியாசியின் கருத்தை யறிய உன்னி அதற்குத் தகுந்தவர் யுவாங் சுவானெனக் கண்டார். ஹர்ஷ சக்கரவர்த்தி நாளந்த விஹாரத்தில் அவர் இல்லை என்றறிந்து அவரைத் தேடுவித்துக் கடைசியில் காம ரூபத்தில் அவர் இருப்பதாக அறிந்து அங்கு தூதுவரை அனுப்பினார். பாஸ்கரவன்மன் அதற்குச் சன்னியாசியை அனுப்பவில்லை. ஒரு பெரிய படையோடு அமைச்சனை அனுப்பி யுவாங்சுவானை அனுப்ப வேண்ட பாஸ்கரவன்மன் ஒரு படையோடு யுவாங்சுவானை ஹர்ஷ சக்கரவர்த்தியிடங் கொணர்ந்தான். சக்கரவர்த்தி அகம் பூரித்து முக மலர்ச்சியோடு நல் வரவு கூறி உபசரித்து பல விருந்துகளோடு ஆதரித்தார். சன்னியாசியும் சக்கரவர்த்தியும் தனியே பேசிக்கொண்டனர்.

ஸ்ரீ ஹர்ஷன் "பாபமான கொள்கைகளை நாசப்படுத்துவதற்கு ஒரு நூல் நீங்கள் எழுதுவதாக நான் கேள்விப்பட்டேன் அதைப் பார்வையிட எனக்கு மிகுந்த ஆசை" என்றான். யாத்திரிகர் தானெழுதின நூலை அரசனிடங் கொடுத்தார். அதை வாசித்துத் தன் அமைச்சர் முதலியவரிடம் இவ்விதங் கூறினார். 'எல்லாப் பண்டிதரையும் இவர் வென்று விட்டார். பெரிய பண்டிதனென்று கருவங் கொண்ட தேவஸேனன் தீர்த்த யாத்திரை போவதாகப் பொய் புகன்று போய்விட்டான். இவரை எதிர்ப்பார் எவருமில்லை. இவரில் வல்லுநருமில்லை." பின்பு இருவரும் பேசிக்கொண்டிருந்தனர். அறிவின் ஆற்றலும் மதப் பற்றுமுடைய மகிளா மணியாம் ராஜஸ்ரீ தன் தமயனின் பின்புற மிருந்து ஹீனயான மதத்தைக் கண்டிப்பதைக் கண்டு உவகை கொண்டாள்.

சக்ரவர்த்தி சன்னியாஸியை மிகப் புகழ்ந்து அவர் செய்கைகள் மிகவும் மேலானவைகளென்றும் ஹீனயான மத விசுவாசிகளை அவர் கொள்கைகளை விடும்படி செய்யவேண்டுமென்றும் கூறி ஒரு பெரிய கூட்டங் கூட்டுவதாகவும் அதில் அவர் பிரசங்கஞ்செய்ய வேண்டுமென்றுங் கூறினார்.

கி. பி. ௬௪௩-ல் கனியாகுப்ஜத்தில் வைத்து ஒரு பெரிய கூட்டங் கூடியது. எல்லா மதத்தவரும் பிக்ஷுணிகளும் பண்டிதர்களும் நாவன்மையுடையோரும் வந்திருந்தனர். யானைகளிலும் குதிரைகள் மீதும் அவர்கள் ஏறிவந்தனர். ஒவ்வொருவரும் கொடிகள் தாங்கியிருந்தனர். எவ்வித அதிசய பூரணமான உவமைக்கும் இக் கூட்டத்தை சிறப்பித்துக் கூறமுடியாது. ஸ்ரீ புத்தனது பதுமையை வைப்பதற்கும் மதப் பண்டிதர்களை வரவேற்பதற்கும் இரண்டு புல் மேய்ந்த பெரிய கூடாரங்கள் முன்னாலேயே கட்டப் பட்டிருந்தன. அக் கூடாரங்களுக்கு இரண்டு மைல் தூரத்தில் அரமனையிருந்தது. அங்கிருந்து பவனியாய் வந்தார். ஒரு பெரிய மதயானைமேல் தங்கத்தால் செய்த புத்த பதுமையை வைத்து அதன் ஒரு பக்கத்தில் தானும் மறு பக்கம் பாஸ்கரவன்மனுமாக நின்று கொண்டிருந்தனர். யுவாங்சுவானும் அமைச்சரும் வேறு யானைகளி லேறி வந்தனர். ௯௦ யானைகள் வரிசையாக நடந்தன. காலையில் இப் பவனி தொடங்கப் பட்டது. கூட்டத்திற்குச் சென்று அரசரும் யுவாங்சுவானும் பதுமையை வணங்கினர். பின்பு அரசர் அக்கூட்டத்திற்கு தலைமை வகிக்க யுவாங்சுவானைக் கேட்டார். அவ்விதமே அச் சன்னியாசியுந் தலைமை பேற்றார். கூடார நடையில்

தன் கொள்கைகள் அமைந்த ஒரு விளம்பரமெழுதி இறுதியில் "இதில் ஒரு வார்த்தையாவது குற்றமென்று காட்டுகிறவர்களுக்கு என் தலையை வெட்ட உடம்படுகிறேன்" என்று எழுதியிருந்தது. ஒருவரும் மறுத்துக் கூறவில்லை. ஐந்து தினம் இக் கூட்டம் நடந்தது. ஹீனயானமதத்தவர் தங்கள் மதர்களை இழித்துக்கூறின சன்னியாசியைக் கொல்லுவதற்கு முயன்றனர். இதையறிந்த அரசர்பெருமான் குற்றமுள்ள ஹீனயானமதத்தவரை கடினமாகத் தண்டிப்பதாய் விளம்பரஞ்செய்தார். பின் பதினெட்டு தினமுள்ள பிரசங்கத்தால் யாவரும் ஹீனயானமதத்தைவிட்டனர். சன்னியாசியிடம் சக்கரவர்த்திக்கு மதிப்புக் கூடுதலாயிற்று. பதினாயிரம் தங்க நாணயங்களும் முப்பதினாயிரம் வெள்ளி நாணயங்களும் நூறு விலை கூடின ஆடைகளும் கொடுத்தார். பதினெட்டு அரசரும் அவரவருக்கு ஏற்றவாறு ஈந்தனர். மதப் பற்றில்லாத சிலர் இக் கூட்டத்திற்கு இடையூறு செய்யவும் சக்கரவர்த்தியையே கொல்லுவதற்கும் முனைந்து நின்றனர். அவை ஆண்டவன் இன்னருளால் அகன்று விட்டன.

பிரயாகில் வைத்துத் தான் நடத்தப்போகிற பஞ்ச வார்ஷிக தானத்தைப் பார்ப்பதற்கு யுவாங்சுவானை ஹர்ஷசக்கரவர்த்தி அழைத்தார்.

கங்கையால் வடபாகத்தையும் யமுனையால் தென் பாகத்தையும் வளையப் பெற்றது அப புண்ய நகரம். வடமேற்கு நின்று இவ் விரண்டு ஆறுகளுந் தோன்றி பிரயாகில் ஒன்று கூடுகின்றன. பண்டைய காலத்து அரசர் தானஞ்செய்யுமிடமிது! அதற்கு தான ஸ்தானமென்பது பெயர். இதில் பெரிய கட்டடங்கள் தீர்த்து வைத்தார். எல்லா வகுப்பாருக்கும் தானஞ்செய்தார். அணிகள் அனைத்து மீந்தார். ஆடைகளைக் கொடுத்தார். தன் தங்கையிடமிருந்து ஒரு சாதாரண துண்டை வாங்கிக் கொண்டார். தானங்கள் கழிந்து யாத்திரீகர் தன் நாடாஞ் சீனஞ் சென்றார்.

ஸ்ரீ ஹர்ஷ சக்கரவர்த்தி கங்கைக் கரையில் பல கோபுரங்களும் சத்திரங்களுங் கட்டியதாய் யுவாங்சுவான் கூறுகிறார். தன் கிழப் பருவத்தில் சன்னியாசம் பூண்டார்.

இவ்வரிய செய்கைகளுக்கு மேல்சமயப்பற்றைப்பற்றி விதந்து வேறு கூற வேண்டுவதில்லை சமயப் பற்றே சால்பைத் தரும்.

# கம்ப ராமாயணம்.

(ஸ்ரீமான் வ. வெ. ஸுப்ரஹ்மண்ய ஐயர் எழுதுவது)

ரசனைச் சுவையின் ஆராய்ச்சியில் இங்கு கம்பனுடைய யுத்த காண்டத்தை ஆராய எடுத்துக் கொண்டோம். இவ் யுத்த காண்டம் ஒன்று மாத்திரம் அளவில் மேனாட்டுப் பெரிய மகா காவியங்களுக்கு ஏறத் தாழச் சரியாக இருக்கிறது. சாதாரண பதிப்புகளில் யுத்த காண்டத்தில் ௪,௩௫௮ விருத்தங்கள் காணப்படுகின்றன. இலியாதில் சுமார் ௧௫,௬௯௩ அறுசீர் வரிகளே இருக்கின்றன என்று கணக்கிடுகிறார்களாதலால் கம்பனது யுத்தகாண்டம் இலியாதைவிடப் பெரிதாகவே இருக்கிறது. அவ் இலியாதில் உள்ள சகல சுவைகளையும் இக் காண்டத்தில் நாம் காணலாகும். யுத்த காண்டம் என்று பெயர் வைக்கப்பட்டிருந்தாலும் இது யுத்தங்களை மாத்திரம் வர்ணிக்கவில்லை. சோகம், பயம், வியப்பு, பக்தி, காதல், முதலிய இதர ரஸங்களும் வீர ரஸத்தோடு சம்மேளித்து இக்காண்டத்தை அழகுபடுத்துகின்றன.



45

இக் காண்டமே கம்ப ராமாயணத்தின் இருதிக் காண்டம். இதில்தான் கதையின் வஸ்து சம்பூர்ணமாகிறது. சாதாரணமாக நமது பண்டிதர் யுத்த காண்டத்தை மற்ற ஐந்து காண்டங்களையும் படிக்கும் கவனத்துடன் படிக்கிறதில்லை. அவர்கள் இதில் மற்ற காண்டங்களிலுள்ள சுகம் இல்லையென்ற ஓர் எண்ணத்தை உண்டாக்கிப் படிப்போருக்கு இதன்மீது ஓர் அசிரத்தை ஏற்படும்படி செய்து விட்டார்கள். ஆனால் கம்ப ராமாயணத்தின் பெருமையெல்லாம் இவ் யுத்த காண்டத்தில்தான் காணப்படும். இதுதான் கம்ப ராமாயணமாகிற விஸ்தாரமான தூர்க்கத்தில் அரசன் உகந்து வாழும் அரண்மனையாகும்.

ஆகையால் கம்பன் தனது ரசனைத் திறனனைத்தையும் இங்கு காட்டியிருப்பான் என்று எதிர்பார்ப்பது முறையேயாகும். கம்பனும் அவ்வாறே, உண்மையில், தன் சக்தியனைத்தையும் இக் காண்டத்தில் காட்டியுள்ளான்.

யுத்த காண்டம் கடலின் வர்ணனையோடு தொடங்குகிறது. ஆனால் நாம் ஏற்கெனவே குறித்திருக்கிறதைக்கொண்டு படிப்போர் எதிர்பார்க்கக்கூடியபடி இங்கும், வருணனை வழிவேண்டு படலத்திலும் கடல் வர்ணனை மூன்றாந்தரத்ததாகத்தானிருக்கிறது. பைரனுடைய கம்பீரமான சமுத்திர வர்ணனையை நினைவுறுத்தக் கூடிய, ரஸிகர்களில் அடிக்கொருமுறை அவர்கள் விரும்பாமலிருக்கையிலும்கூடத் துவனித்துக் கொண்டிருக்கக் கூடிய, செய்யுள் ஒன்றேனும் இப் படலங்களில் இல்லை. கடல் காண் படலத்திலுள்ள பன்னிரண்டு செய்யுட்களும் கேவலம் வார்த்தைகளால், வியர்த்த வார்த்தைகளால், நிரம்பியிருக்கின்றன. அவைகளிலுள்ள உத்பிரேக்ஷைகள் சமுத்திரத்தின் கோஷத்தையோ, பூரிப்பையோ, அலை வீக்கத்தையோ பிரதிபிம்பிக்கும் ஆற்றலற்றனவாயிருக்கின்றன. வர்ணனையின் முடிவில் நவி,

......................இலங்கைப்
பின்னதாய காரியமும்
நிகழ்ந்த பொருளும் பேசுவாம்,

என்னும்போது நல்வேளையாய் இவ்வளவோடு நிறுத்தினானே என்ற எண்ணமே உண்டாகிறது.

மந்திரப் படலத்தில், அரக்கர் ராவணனது சன்னிதியில் ராமனோடு எவ்வாறு போர் புரியலாம் என்று விவரிக்கும் பாகத்தில், மில்டனது ஸ்வர்க்க நஷ்ட காவியத்தின் உடம் புத்தகத்தில் காணும் மந்திர* வர்ணனையின் ஒழுங்கும் சிறப்பும் உணர்ச்சியும் இல்லை. ஆனால் அரக்கரின் மந்திரத்தில்தான் உபாக்கியான ரத்னமாகிய இரணியன் வதைச் சரித்திரம் விபீஷணனால் ராவணனுக்குச் சொல்லப்படுகிறது. ஸ்ரீ பாகவதத்திலுள்ள பிரகலாத சரித்திரத்தையும், அதை அனுசரித்துப் பொம்மர போதன்ன ஆந்திர பாகவதத்தில் எழுதிய பிரகலாத சரித்திரத்தையும் கம்பனது இரணியன் வதைப் படலம் வெகுசுலபமாக வென்றுவிட்டது.

ராவணன் தன் வார்த்தையைத் திரஸ்கரிக்கவே விபீஷணன் அவனை விட்டுவிட்டு ராமனிடம் சரணாகதி செய்துகொள்ளப் போய்விடுகிறான். ஸ்ரீவைஷ்ணவ சம்பிரதாயத்தில் ராமாயணத்திற்குச் சம்பிரதாயி கிரந்த ஸ்தானத்தைக் கொடுப்பது இந்த விபீஷண சரணாகதியேயாகும் என்று சொல்லலாம். விபீஷணனைச் சேர்த்துக்கொள்ளலாமா கொள்ளக்கூடாதா என்கிற விஷயத்தை வானரர் சபையில் யோசித்து, அம் மந்திரத்தின் இறுதியில் ராம பிரான்,

---

* அரசன் மந்திரிகளுடன் செய்யும் ஆலோசனை.

ஆநயைநம், ஹரிச்ரேஷ்ட்ஹ,
தத்தமஸ்யாப்ஹயம் மயா!
விப்ஷீஷணேவா, ஸுக்ரீவ,
யதி வா ராவண: ஸ்வயம்! *

என்று சொல்லுகிற, யுக யுகாந்தரங்களையும் தாண்டி வந்து பரம பக்தர் அனைவருக்கும் முக்தி நம்பிக்கையைத் தருகிற, கம்பீரமான வாக்கானது வால்மீகி பகவான் நம்மனோருக்காக வரையாது கொட்டி வைத்திருக்கிற ரத்தினக் களஞ்சியத்தி னுள் ஜாஜ்வல்லியமானதோர் மணியாகும். இச் சபையின் மந்திரத்தை வர்ணிக்கையில் வால்மீகி தனது கவிதய மனைத்தையும் காட்டியிருக்கிறான். அண்ணனைக் காட்டிக்கொடுக்கிறவனை நம்பக் கூடாது என்று சுக்கிரீவன் சொல்லுவதும், தான் வாலியைக் காட்டிக் கொடுத்தது மாத்திரமின்றிக் கொல்வித்ததையும் சுக்கிரீவன் மறந்து விட்டான் பார்த்தாயா என்று ராமன் லக்ஷ்மணனைப் பார்த்து முறுவலிப்பதும்,

ராஜ்ய காங்க்ஷி ச ராக்ஷஸ:
பண்டிதா ஹி ப்ஹவிஷ்யந்தி
தஸ்மாத் க்ராஹ்யோ விப்ஷீஷண: †

என்று சொல்லி ராகவன் சுக்கிரீவனைக் குத்திக் காட்டுவதும் இந்த மந்திரி சபையின் வர்ணனைக்குச் சாத்தியதைத் தன்மையும் உயிரும் கொடுக்கின்றன. ஆனால் கம்பன் இந்தக் கட்டத்தில்கூட வால்மீகியை வெல்கிறான். எவ்வாறு என்று ஓரிரண்டு விஷயங்களில் குறித்துக் காட்டுவோம்.

விபிஷணனுடைய குணகுணங்களை அனுமான் எடுத்துக் கூறுவதில், தூதனைக் கொல்லக் கூடாது என்று அவன் ராவணனுக்குத் தர்மம் எடுத்துக் கூறி அனுமானுக்குப் பரிந்து பேசியதாகச் சொல்லுவது இயற்கையாகும். வால்மீகியில் இது கவனிக்கப்படவில்லை. கம்பனோ, அனுமானுடைய வாக்கில்,

'...............தூதரை எறிதல் என்பது
புல்லிது; பழியொடும் புணரும்; போர்த்தொழில்
வெல்லலம் பின்னை,' என்று இடை விலக்கினான்,

எனவும்,

'தூதரைக் கோறலும் தூய்து அன்றாம்,' என
ஓதுவின் சிறந்தன எடுத்துக் காட்டினான்,

எனவும் பேச்சுக்களை அமைத்து, சம்பாவிதத்தால் வரும் சிறப்பியை நமக்கு அளிக்கிறான்.

வேறொரு பாவிகம் கம்பனுடைய விபீஷண சரணாகதியை வால்மீகியினதைவிட உயர்த்துகிறது. அஃதாவது, விபிஷணனுக்கு அபயப் பிரதானம் கொடுத்தாயிற்றோ இல்லையோ உடனே வால்மீகியில் ராமன்,

ஆக்ஹ்யாஹி மம தத்த்வேந
ராக்ஷஸாநாம் பலாபலம், *

என்று சொல்லுவதால் விபீஷணன் மீதுள்ள நிர்ஹேதுகமான பிரீதியினாலன்று (முக்கியமாக) அவனுக்கு ராமன் அபயப்பிரதானம் செய்தது, மற்று, இலங்கை அரக்கரின் பலாபலத்தை ஒற்றித் தெரிந்துகொள்ளவே யாகும் என்று படிப் போருக்குப் படுகிறது. ஆனால் கம்பன் ராமனது குணத்தை ஒரு சிறு புனைவினால் மிகவும் உயர்த்திவிடுகிறான் என்று கீழே காட்டுகிறோம்.

---

* 'வானர சிரேஷ்டனான சுக்ரீவ! அவன் விபீஷணனாக விருந்தாலும் சரி, சாக்ஷாத் ராவணனா யிருந்தாலும் சரி! அவனுக்கு அபயம் கொடுத்து விட்டேன்: இனி அவனை என்னிடம் அழைத்துவந்துவிடு!

† இந்த ராக்ஷஸன் இலங்கை ராஜ்ஜியத்தை விரும்புகிறான். இவ்வாறு அரசை விரும்புவோர் அவ் விருப்பத்தைச் சாதித்துக் கொள்கிற விஷயத்தில் தங்கள் சாமர்த்திய மனைத்தையும் பிரயோகிப்பர். ஆதலால் விபீஷணன் கொள்ளத் தக்கவனே.

* ராக்ஷஸர்களது பலாபலங்களை உள்ளது உள்ளபடியே எனக்குச் சொல்வாய், விபீஷண!



ந ஸர்வே ப்ஹ்ராதாஸ் தாத
ப்ஹவந்தி ப்ஹரதோபமா: *

என்று சுக்கிரீவனையும் லக்ஷ்மணனையும் குத்திக் காட்டிய பிறகும்கூட வால்மீகியில் சுக்கிரீவன் பழைய ஆக்ஷேபணைகளையே திரும்பக் கூறுவதாக வருவது அசம்பாவிதமாக † இருக்கிறது. கம்பனில் இத்தகைய அசம்பாவிதப் போக்குகள் இல்லை. அனுமான் விபீஷணனை அங்கீகரிக்க வேண்டியது என்று அபிப்பிராயம் சொல்லியதும் ராமன் வாதத்தை முடித்து,

வெற்றியே பெறுக, தோற்க;
வீக, வீயாது வாழ்க;
பற்றுதல் அன்றி உண்டோ
புகல் எமைப் பகர்கின்றானை? ‡

என்று கம்பீரமாகக் கூறி விடுகிறான். அதன் பிறகு விபீஷணன் வந்து ராமனிடம் நேரில் சரணாகதி செய்கிறான். இதே சமயத்தில் இலங்கையைப்பற்றிக் கேட்டால் ராமனது குணத்துக்கு இழுக்குத் தரும் என்றுன்னிக் கம்பன் இப் படலத்தை இவ்வளவோடு நிறுத்திக்கொண்டு, ராமன் விரகதாபப்பட்டு வருந்துவதாகவும், அப்பொழுது சுக்கிரீவன் அவனிடம் வந்து,

'தேய்வது என்? காரியம் திரப்பும் சிந்தையை
'மேபவன்தன்னொடும் எண்ணி, மேல் இனித்
'தூயது நினைக்கிலை?' *

என்று யோசனை கூறுவதாகவும், அதன் பிறகு ராமன் விபிஷணனை இலங்கையின் காவலைப் பற்றியும் படைகளைப் பற்றியும் விசாரிப்பதாகவும் கற்பித்து வைத்திருக்கிறான். இதனால் இலங்கையின் சமாசாரமும் கேட்கப்படுகிறது, ராமனுடைய குணமும் சுயநலம் என்கிற குற்றத்தினின்றும் விடுபடுகிறது. †

ராம ராவணர்களாகிற இரண்டு வீரர்களும் எதிரிகளின் சைனியங்களைக் கண்ணுற்றுப் பலாபலங்கள் தெரிந்துகொண்ட பிறகு அங்கதன் ராமனால் ராவணனிடம் தூதனாக அனுப்பப்படுகிறான். 'மாருதி அல்லனாகில் நீ எனும் மாற்றம் பெற்றேன்,' என்று அடங்காத மகிழ்ச்சிகொண்டு அவன் ராவணனது அரண்மனை சென்று ராவணனோடு சமாதானம் பேசும் செய்திகூடக் கம்பனால் மிக நயமாகக் கற்பிக்கப்பட்டிருக்கிறது. இதன் பிறகு யுத்தம் துவங்கிவிடுகிறது.

போரை வர்ணிப்பதில் ஹோமரேதான் சிறந்த கவி என்ற மேனாட்டு ஆசிரியரின் கூற்றுக்களைக்

---

* இ-ள்: அப்பா, சகோதரராய்ப் பிறந்தவரெல்லாம் பரதனைப் போன்றிருட்டதில்லை.

இந்த பாவத்தைக் கம்பன் வால்மீகியிலிருந்தே எடுத்துக் கொண்டிருக்கிறான். ஆனால் அதை இங்கே ஆளாமல் வாலி வதைப் படலத்தில் தான் ஆளுகிறான்.

'அத்தா, இது கேள்..................................
'எத் தாயர் வயிற்றினும் பின் பிறந்தோர்கள் எல்லாம்
'ஒத்தால் பரதன் பெரிது உத்தமன் ஆவதுண்டோ?'

என்ற செய்யுளையே தான் குறிக்கிறோம் என்று வித்துவான்களுக்கு எடுத்துரைக்க வேண்டியதில்லை. ஆனால் இங்கேயும் வால்மீகி இதனோடு மத்விதாவா பிது: புத்ரா:—என்னைப்போன்ற பிதிருவாக்கிய பரிபாலனம் செய்யும் புத்திரர்களாவது—என்ற வார்த்தைகளைச் சேர்த்து ராமனுடைய வாக்கில் தற்புகழ்ச்சியைப் புகுத்தியிருக்கிறான். கம்பன் தகுதி நோக்கி அந்தபாவத்தை எடுத்து விட்டிருக்கிறது குறிப்பிடத் தக்கது.

† ஸமாஸார்த்தத்திலேயே நோக்க— அதாவது, 'நடந்திருக்கக்கூடிய தன்று போல' எனப் பொருள் கொள்க.

‡ இ-ள்: நமக்கு வெற்றியே வரட்டும், தோல்வியே வரட்டும்; நமக்கு அழிவே வரட்டும், அல்லது வாழ்வே பெருகட்டும்; சரணாகதி என்று சொல்லி என்னை அடைந்து விட்டவனை நான் கைவிடுவது எங்கேனும் உண்டோ?

* இ-ள்: என் தூங்கிக்கிறாய்? நம்மோடு வந்து சேர்ந்த விபீஷணனோடு கலந்துகொண்டு இனிச்செய்ய வேண்டிய காரியத்தைப் பற்றி நினைக்க வேண்டாமா?

† இவ்வாறு ஒவ்வோர் பாகத்தையும் ஆராய்ந்து கொண்டு போனால் இவ் ஆராய்ச்சி பெரிதும் விரியுமாதலால், இவ் வியாசத்தின் பிற் பாகத்தில் ரசனை ஆராய்ச்சி பெரும் போக்காகத்தான் செய்யப்படுகிறது.

கண்டும், ஹோமரின் உத்கிருஷ்டமான யுத்த வர்ணனைகளைப் படித்துப் பார்த்தும் நாம் மயங்கிப் போய் ஹோமரின் போர்ச் சித்திரங்களைவிட உயர்ந்த சித்திரங்கள் கிடையா என மதித்திருந்தோம். ஆனால் கம்ப ராமாயணத்தின் யுத்த காண்டத்தைப் படித்துப் பார்த்ததும், கம்பன் போர் வர்ணனையில் ஹோமருக்குத் தாழ்ந்தவனில்லை என்றும், சில இடங்களிலும் சில விஷயங்களிலும் ஹோமரது போர் வர்ணனையை வென்றிருக்கிறானென்றும் கண்டுகொண்டோம். ஹோமரில் ஓர் குற்றம் இங்கு எடுத்துக்காட்டற் பாலது. அந்தந்த நாயகனைப் போர் முனையில் கொண்டு வரும்போது ஹோமர் அதுவரையில் அவன் சும்மா இருந்தான் என்று பொருள் படும்படி கதை புனைந்திருக்கிறான். உதாரணமாக, மகா வீரனை தியமேதனைப் பார்த்து ஆத்ரேயன் 'நீ என்ன பயந்தாரியாயும் சோம்பேறியாயும் இருக்கிறாய்?' என்று நீண்ட பிரசங்கம் செய்த பிறகுதான் முன்னவன் தன் பராக்கிரமங்களைக் காட்டத் துவக்குகிறான். அதே மாதிரி இணையற்ற வீரனை ஹெக்தரைக்கூட ஸார்ப்பேதன், 'நீ என்ன போரிற் கலவாமல் வாளா இருக்கிறாய்?' எனக் கண்டிக்கிறான். அவனும் சும்மா இருந்ததாக ஒப்புக்கொள்கிறான். ஆனால் கம்பனில் இத்தகைய குற்றங்கள் கிடையா. போர் நடக்குமிடத்தில் கவி சாக்ஷாத்தாய் நின்று பார்த்தால் எவ்வாறு வர்ணிப்பானோ அவ்வாறே அவனது வர்ணனைகள் அமைந்திருக்கின்றன. அவன் முதலில் நாற்பெரும் படைகளும் தந்தமக்குள் போர் செய்தன என்று வர்ணனையைத் துவக்கிக்கொள்கிறான். அவ் வர்ணனை போதிய அளவு சென்ற பிறகு தனித்தனி வீரர்கள் யுத்தரங்கத்தில் காட்டிய பராக்கிரமங்களை வர்ணிக்க எடுத்துக் கொள்கிறான். அதுவரையில் அவர்கள் சும்மா இருந்தார்கள் என்ற எண்ணம் படிப்போருக்கு வாராதபடி கம்பன் சாமர்த்தியமாய்ப் பார்த்துக்கொள்கிறான். இதல் குறித்த நாயகர் இருவர் போர் செய்து ஒருவர் தோற்றுப் பின்னடைந்ததும் கம்பன் உடனே வேறு நாயகரைப் போர்க்களத்தில் புகுவிக்கிறதில்லை: மறுபடியும் ஓர் பொதுப் போரை விஸ்தாரமாக வர்ணித்த பிறகுதான் அவன் இரண்டாவது இணையைக் கொண்டு வந்து விடுகிறான். இவ்வாறு அனேகமாய் ஒவ்வோர் போரும் அவ்யக்தத்தினின்று பரிணமித்து வியக்த தசையை யடைந்தும், அந்த வியக்தம் பரிணமித்து ஆரோகணக் கிரமம் அனைத்தையும் பெற்ற பிறகு படிப்படியாயோ ஒரே அடியாயோ இறங்கி அவ்யக்தத் தன்மையை மறுபடியும் பெற்றும், பிண்டாண்டங்களின் வளர்ச்சிகளை அனுகரிக்கிறது வேறெந்த கவியும் இந்த உயர்ந்த வழியைக் கம்பனுக்கு முன் கையாண்டதில்லை என்று நிச்சந்தேகமாய்ச் சொல்லலாம்.

தனிப் போர் வர்ணனை ஓர் பக்கம் இருக்க, ராம ராவண யுத்தத்தின் சமக்ரத்தையும் கம்பன் ஆரோகணக் கிரமம் கெடாமல் அமைத்திருப்பது ஆச்சரியத்தைத் தருகிறது. இதுவே ரசனையின் பெருந்திறன். வால்மீகியில் ஆரோகணக் கிரமம் வெகு ஸ்தூலமாகத்தான் காட்டப்படுகிறது. முதல் போரிலேயே ராமன் அடிபட்டு விழுந்து விடுவதும் சீதை போர்க்களம் வந்து புலம்புவதும் வர்ணிக்கப்பட்டுப் போய்விடுகிறது. இதே போரிலேயே லக்ஷ்மணன் நாகபாசத்தால் கட்டுண்பதும், ராமன் அதைக் கண்டு மனமுடைந்து பிரலாபிப்பதும், கருடன் வரவினால் நாகபாசம் அவிழ்ந்து போய்விடுவதும் நிகழ்ந்து விடுவதாய் வர்ணிக்கப்படுவதால் வால்மீகியின் யுத்த காண்டம் ஆரோகணக் கிரமத்தினால் பெறக்கூடிய அழகை அம் மட்டுக்கு இழந்து விடுகிறது. ஏனெனில், எ௩-வது சருக்கத்தில் ராம லக்ஷ்மணர் இந்திரஜித்தினால் அடிபட்டு விழுகிறார்கள் என்ற வர்ணனைக்குப்பிறகு வால்மீகிக்கு எ௫-வது சருக்கத்தில் அதே மாதிரி சம்பவத்தையேதான் மறுபடி வர்ணிக்க வேண்டி வருகிறது. ஆதலால் வர்ணனைகள் வியப்பையும் ஆரோகண சுகத்தையும் இழந்துவிடுகின்றன. வால்மீகி இத்துணைப் பெரிய கவியாக இருந்திராத பக்ஷத்தில், வர்ணனையைத் துரித காலத்தில் ஆரம்பித்துவிட்டு விளம்ப காலத்துக்கு இறங்கவேண்டி வரும் போது அவனது வர்ணனை ரஸமின்றிப் போயிருக்கும். அவனது அசாமான்ய கவிதா சக்தியே இவ் இரசனைக் குற்றத்தால் வரும் ரஸக் குறைவினின்று அவனைக் காக்கிறது. உதாரணமாக, எப்படியாவது ஆரோகணச் சுவையை உண்டாக்குவதற்காக வால்மீகி இரண்டாவது முறை லங்கா தகனம் நிகழ்வதாகக் கற்பிக்க வேண்டி வருகிறது. அப்படியிருந்தும் முதலதனில் போலவே இதிலும் புதுமை புலப்படும்படி செய்ய அவனது அபாரமான பாவனா சக்தியும் சொல்லின் மோகனமும் அவனுக்கு ஆற்றல் அளிக்கின்றன.

கம்பனோ சிறந்த சுவையுணர்ச்சியுடன் படலங்களை ஆரோகணக் கிரமத்திலேயே அமைத்திருக்கிறான். அதனோடு, யுத்தங்களுக்கிடையில் சீதா ராவண சம்வாதத்தையும், மாயா ஜனகப் படலத்தையும், மாயா சீதைப் படலத்தையும், தேரேறு படலத்தையும் இடையிடையே புகுத்தியும், யுத்தங்களை வர்ணிக்கிற படலங்களிலேயே தானமாலையின் சோகம், விபீஷண கும்பகர்ணர்களின் அருமையான சம்வாதம், முதலியவற்றைச் சேர்த்தும், யுத்த வர்ணனைகளையே படித்து அலுத்துப் போகும் மனோபாவத்துக்கு அங்கங்கே இளைப்பாற்றி செய்து கொடுக்கிறான். எப்படி என்று சற்று விரிவாகக் காட்டி நம் ரசனை ஆராய்ச்சியை நிறுத்திக்கொள்வோம்.

ராவணன் வானர சைனியத்தைக் கண்ணுற்று வரும் போது சுக்ரீவன் திடீரென அவன் மீது பாய்ந்து அவன் மகுடத்தைத் தகர்க்கிறதே ராம ராவண யுத்தத்தின் முதற் சம்பவமாகும். இங்கே சுக்ரீவனுக்காக ராமனை இரங்கச் செய்து கம்பன் அப் போரையும் இரங்கலையும் ஒவ்வொன்றும் மற்றதினால் தூக்கிக் காட்டப்படும்படி செய்துவிடுகிறான்.

நின்னை அக் கருணையில்லோன்
கொல்லுதல் செய்தானேல்......
வெல்லினும் தோற்றேன் யானே
அல்லனோ விளித்திலாதேன்,

என்று ராமன் சுக்ரீவனைப் பார்த்துச் சொல்லுகிற வார்த்தை அவனது அபிராகிருதமான அன்பையும் கருணையையும் காட்டாநின்றது. அந்தப் புறத்தில்,

......................இன்று கண்டும்
கிளி மொழி மாதரானை
மீட்டிலேன்! தலைகள் பத்தும்
கொணர்ந்திலேன், வெறுங்கை வந்தேன்!

என்றும் பிறவும் சொல்லுகிற சுக்ரீவன் தன் வன்மையைத் தானே இழித்துக் கூறி அவனது வீரத்தை நாம் மெச்சும்படி செய்துவிடுகிறான்.

முதனாட் போரில் வீரர்கள் போர் செய்வதும் அவரவர்கள் தங்கள் சத்துருக்களைப் பற்றி நினைக்கும் எண்ணங்களும் சொல்லும் வார்த்தைகளும் பின்னால் வரும் போர்களில் அவர்கள் காட்டப் போகிற பராக்கிரமங்களுக்கு ஒத்திகையாகவும் கட்டியமாகவும் விளங்குகின்றன. அனுமான் ராவணனை முஷ்டியாமல் குத்தியபோது அவனது வலுவைக் கண்டு ராவணன்,

வலி என்பதும் உளதே, அது
நின்பாலது, மறவோய்! .........
சலி என்று எதிர் மலைவான் உரை
தந்தான இறை சலியேன்,
மெலிவு என்பதும் உணர்ந்தேன்,எனை
வென்றாய், இனி, விறலோய்! *

* உலகத்தில் வன்மை என்றொன்று இருக்குமானால் அது உன்னிடம்தான் இருக்கிறது, அனுமா! பிரமனை என்னோடு போர் செய்து நீ தளரக் கடவாய் என்று சபிக்கினும் தளர்வேனல்லாத நான் உன் முஷ்டிக் குத்தால் மெலிவு என்பது என்ன என்று உணர்ந்துகொண்டேன்: ஆதலால் நீயே எனை வென்றாய்!

என்று சொல்லி அனுமானது பலத்தை மெச்சு வதும், அதற்கு மாருதி,

.........................என்னை நீ
வென்றாய் அலேயோ, உன் உயிர்
வீடாது உரை செய்தாய்! *

என்று சொல்லுவதும் அவர்களது போரை நேரே பார்த்தால் தோன்றக்கூடிய உணர்ச்சியை விட அதிகமான உணர்ச்சியை நமக்குத் தருகின்றன. இந்த வார்த்தைகளை எழுதிய பிறகு கம்பன் நம்மை அழைத்து, ராவணன் யுத்த ரங்கத்தில் பிரவேசிக்கிறான், அனுமான் போர்க்களத்தில் வந்துவிட்டான், பார்த்துக் கொள்ளுங்கள், என்று சொல்லவே வேண்டியதில்லை. அந்த இரண்டு செய்யுள்களைக் கொண்டு கம்பன் அனுமனுக்காகவும் ராவணனுக்காகவும் நம்முடைய கவனத்தையும் வியப்பையும் விலைக்கு வாங்கிக் கொண்டுவிட்டான். இனி அவ்விரு வீரர்களும் யுத்த பூமிக்கு வரும்போது நமது மனம் தானே வலிய இழுக்கப்பட்டுப் போய் அவர்களுடைய பராக்கிரமங்களில் மூழ்கிப் போவதைத்தவிர வேறு மார்க்கமற்றதாய்விடுகிறது.

முதற் போரில் தோல்வியுண்ட ராவணன் மாலியவானிடம் தான் பட்டபாட்டைச் சொல்லி ராமனுடைய அபிராகிருதமான பலத்தை நாம் உணரும்படி செய்துவிடுகிறான். கும்பகருணன் எழுந்து போர் செய்தால்தான் இனி உண்டு என்று ராவணனுக்குத் தோன்றிவிடுகிறது. கும்பகருணனைக் கம்பன் வால்மீகி காட்டுகிறபடி காட்டாமல் தர்மாதர்மம் அறிந்த ஓர் ஞானியாகச் சித்திரித்திருக்கிறான். வால்மீகியில் கும்பகருண ராவண சம்வாத கட்டத்தில் நூற் சிதைவு இருப்பதாக நமக்குத் தோன்றுகிறது—அவன் பேசும் பேச்சு முன்னுக்குப்பின் முரண் பாடுற்றதாக இருக்கிறது. ஆனால் கம்பனில் அவனது நிலை முரணின்றி அறிவுக்குப் பொருந்தியதாக இருக்கிறது. ராவணன் செய்த தீமையை அவன் வெறுக்கிறான். ராமனை மகா பலவான் என்றும் அவதாரம் என்றும் நினைக்கிறான். ஆதலால் சீதையை விட்டுவிட்டுச் சமாதானம் செய்து கொள்ளும்படி ராவணனுக்கு அவன் புத்தி கூறுகிறான். ஆனால்,

உறுவது தெரிய அன்று உன்னைக் கூயது

என்று கூறி ராவணன அவனை அவமதித்ததும் அவன்,

என்னை வென்று உளர் எனின், இலங்கை காவல,
உன்னை வென்று உயருதல் உண்மை! ஆதலால்,
(பின்னை நின்று எண்ணுதல் பிழை),அப் பெய்வளை
தன்னை நன்கு அளிப்பது தவத்தின் பாலதே,*

என்று யோசனை கூறிவிட்டு,

இற்றை நாள் வரை முதல் யான்முன் செய்தன
குற்றமும் உள எனின் பொறுத்தி, கொற்றவ!

என்று அபராத க்ஷமை கேட்டுக்கொண்டு,

அற்றது, ஆல், முகத்தினில் விழித்தல், ஆரிய! †

என்று மனம் பொருமிக்கொண்டு போர் முனைக்குப் புறப்பட்டுவிடுகிறான். அச்சமயம் ராவணன் கண்களில் வந்த இரத்தங்கலந்த கண்ணீர் நம் கண்களையும் ஊற்றெடுக்கச் செய்கின்றன!

விபீஷணன் ராமனது உத்தரவு பெற்றுக் கும்பகருணனைப் பேதிக்க முயலுகிறான். அதற்குக் கும்பகருணன் ஒரு புறம் ராவணனுக்குத் துரோகம் செய்யமாட்டேன் என்றும், ஒரு புறம்,

---

* உன் உயிர் போகாததுமன்றி இத்தனை வார்த்தை நீ பேசுகிறபோது நீயல்லவோ என்னை வென்றவிட்டவன்!

* பொருள்: என்னை வென்று ராம லக்ஷ்மணர் பிழைத்து நின்றால் உன்னை வென்று விடுவார்கள் என்பதில் ஐயமில்லை. ஆதலின் அப்பொழுதாவது முன் யோசனையுடன் சீதையை ராமனிடம் அனுப்பிவிடு.

† இனி நமக்கு முகவிழி யற்றது, ஐயனே!



கும்பிட்டு வாழ்வெனோ யான்
கூற்றையும் ஆடல் கொண்டேன்? *

என்று மானத்தைப் பரிபாலிப்பேன் எனவும், மற்றோர் புறம், நீயும் எங்களோடு வந்து விட்டால் அரக்கராயினோர்க் கெல்லாம்,

கையினால் என் நீர் நல்கிக்
கடன் கழிப்பாரைக் காட்டாய்,

என்றும் கூறி, நான் ராவணனுக்காகக் கடைசிவரை போர் செய்து, ஆலம் கண்டுஅஞ்சி ஓடும் அமரர் போல வானரர்களை ஓடச்செய்து, போர்க் களம் முழுதும் கறங்கு எனத் திரிந்து,

கருவரை, கனகக் குன்றம் என்னலாம் காட்சிதந்த
இருவரும் நிற்க

மற்றனைவரையும் கொன்று போடுவேன் என்று சபதம் செய்து, எம் மீது இரக்கம் வையாமல் ராமனிடம் நீ திரும்பச் சென்று நாங்கள் இறந்த பிறகு எங்களுக்குப் பிதிருக்கிரியைகள் செய்து கரைபேற்று, என்று முடிக்கிறான். இந்தச் சம்வாதத்தினால் விபீஷணனது தன்மையும் கும்பகருணனது தன்மையும் மிகவும் உயர்வு பெறுகின்றன.

கும்பகருணனது போருக்கும் அதிகாயனது போருக்கும் இடையில் வேறொரு ருசியான சம்பவத்தைப் புகுத்தாமற்போனால் ரசனையில் சுகம் குறையும் என்று கண்டு கம்பன் மாயா சனகப் படலத்தை இடைப் புகுத்தியிருக்கிறான். இப் படலத்தில்,

ஊண் இலா ஆக்கை பேணி
உயிர் புகழ் சூடாது, உன் முன்
நாண் இலாது இருந்தேன் அல்லேன்:
நவை அறு குணங்கள் என்னும்
பூண் எலாம் பொறுத்த மேனிப்
புண்ணிய மூர்த்திதன்னைக்
காணலாம் இன்னும் என்னும்
காதலால் இருந்தேன், கண்டாய்! *

என்று, தன்னைக் காதல் இரக்க வந்த ராவணனிடம் கம்பீரமாய்க் கூறும் சீதாபிராட்டியின் திருவாக்குகள் நமக்கு வீரச் சுவையை வேறொரு வழியில் ஊட்டுகின்றன.

அதிகாயனது போர் முடிந்த பிறகு இந்திரசித்தனது நான்கு போர்கள் வர்ணிக்கப் பெறுகின்றன. இவை நான்கும் அழகிலும் காம்பீரியத்திலும் வேலைப்பாட்டிலும் ஒன்றை விட ஒன்று உயர்ந்து கொண்டே செல்லுகின்றன. முதற் போரிலே லக்ஷ்மணனை ராவணன் அவனிடமே மெச்சும் போது,

கானின் அன்று இகல் கரன் படை
படுத்த அக் கரி போன்
தானும், இந்திரன் தன்னை ஓர்
தனு வலம் தன்னால்
வானின் வென்ற என் மதலையும்,
வரி சிலை பிடித்த
யானும் அல்லவர் யார் உனக்கு
எதிர்? †

என்று சொல்லி இந்திரசித்தனது போர்த்திறத்தைப் புகழ்கிறான். அவனது போரும் இப்பெரும் புகழைப் பொய்ப் படுத்த வில்லை. அவன் ஒருவனே ராவணனை எதிர்த்துப் பேசும் திறலை

---

* எமனையும் போரில் வென்ற யான் என் தமயனைக் கொன்ற மானிடனைக் கும்பிட்டு வாழ்வேனோ?

* பிராணனை விட்டு இப்பொழுதே புகழுடம்பை எய்தாமல் நான் உயிர் தரித்திருப்பது, விரதங்களால் இளைத்த என் உடலின் மீது அபிமானம் வைத்து என்றாவது, மன உணர்ச்சி அற்றுப்போயினதால்தான் என்றாவது நினையாதே. தன் இணையற்ற குணங்களையே தன் ஆபரணங்களாகக்கொண்ட புண்ணிய மூர்த்தியாகிற என் கணவனை இந்த ஜன்மத்திலேயே காணலாம் என்கிற ஆசை ஒன்றினால்தான் நான் இன்னும் ஜீவனை வைத்துக்கொண்டிருக்கிறேன் என்று அறிந்துகொள்!

† ராமனையும் என் மகன் இந்திரசித்தனையும் என்னையும் விட்டால் போரில் உனக்கு நிகரானவர் வேறு யார்?

உடையுவன். அதிகாயனை யார் கொன்ருர் என்று அவன் கேட்டதற்கு லக்ஷ்மணன் கொன்ருன் என்று ராவணன் பதில் சொன்னபோது,

> கொன்ருர் அவரோ? கோலை
> சூழ்க என நீ கொடுத்தாய்!

என்று, அவனையே இந்திரசித்தன் கண்டிக்கிருன். பிறகு பெரிய சபதங்கள் செய்து, பெரும் படையோடு சென்று, வானரப் படையை நாறி, நாக பாசத்தை விட்டு லக்ஷ்மணனைக் கட்டிவிட்டு ஜயகோஷத்தோடு திரும்புகிருன். ஆனல்,

> விசையால் அனுங்க வடமேரு, வையம்
> ஒளியால் விளங்க, இமையாத்
> திசை யானை கண்கள் முகிழா ஒடுங்க,
> சிறையால் வழங்கு சிறையான்,

ஆகிய சருடன் தோன்றி அப் பாசக் கட்டை அவிழ்த்துவிட்டான். இது தெரிந்ததும் உடனே இந்திரசித்தன் போர்க்களத்துக்குத் திரும்பி வருவதானல் வேறுபாட்டினல் வரும் அழகு குன்றுமாதலால் கம்பன் அவனது இரண்டாம் போருக்கு முன் படைத்தலைவர் போரையும் மகரக் கண்ணன் போரையும் இடைப் புகுத்தி வைத்திருக்கிருன். மகரக்கண்ணன் இறந்தபிறகு ராவணன் அழைக்கிருன் என்று தூதன் வந்து சொல்ல இந்திரசித்து,

> 'போயின இருதர் யாரும் பொன்றினர் போலும்!

என்று சொல்லிக் கொண்டு ராவணனிடம் சென்று இன்று அனைவரையும் அதஞ் செய்கிறேன் என்று சங்கற்பித்துக்கொண்டு களம் செல்கிருன். அங்கே லக்ஷ்மணன் முதலுள் தோற்ற தோல்விக்குப் பரிகாரமாக இன்று தானே சென்று இந்திரசித்தனை எதிர்ப்பேன் என்று சொல்லி அண்ணனிடம் உத்தரவு பெற்று வருகிருன். போரில் எத்தனை விதமான வேறுபட்ட வர்ணனைகளைக் கொட்டமுடியுமோ அத்தனை வித வர்ணனைகளையும் கம்பன் கொட்டுகிருன். கடைசியில் லக்ஷ்மணனும் ராமனும் பிரம்மாஸ்திரத்தால் கட்டுண்டு வீழ்கிருர்கள். இந்திரசித்தனும் தன் வீரர் அனைவரும் களத்தில் பட்டுப் போயின்மையாலும், சத்துருக்கள் அனைவர்களும் அழிந்தார்கள் என்று நினைத்தும் லங்கை திரும்பித் தன் வெற்றியை ராவணனிடம் சமர்ப்பிக்கிருன். ஆனல் அநுமான், சாம்பவான், விபிஷணன் ஆகிய மூவரும் அவ் அஸ்திரத்திற்குத் தப்பினவரானதால், சாம்பவானது யோசனையின்மீது அநுமான் மருந்து மலையைக் கொண்டுவந்ததும் வானர சைனியமும் ராமலக்ஷ்மணரும் விழித்தெழுகின்றனர்.

இதைக் கேள்வியுற்றதும் இந்திரசித்தனுக்கு, முதல் தடவையாக, பயம் என்பது தோற்றத் தலைக்கிற்று.' பிரம்மாஸ்திரம் கூட அவர்களைக் கொல்லலாம் ஆற்றல் படையாத போது ராமன்,

> மானுடன் அல்லன், தொல்லை
> வானவன் அல்லன், மற்று,
> மேல் நிவர் முனிவன் அல்லன்,
> வீடணன் மெய்யின் சொன்ன
> எனவன் எண்ணின் தீர்த்தார்
> என்னுறும் ஒருவன் என்றே,
> தேன் நகு தெரியல் மன்னு,
> சேகு அறத் தெரிந்தது, அன்றே!

என்று தந்தையிடம் சொல்லுகின்றன். இருந்தும், அன்னது பகர்தல் ஆண்மையின்மை அன்ருகையால் நிகும்பலை சென்று, யாக பலத்தினல் புதிய ஆயுதங்கள் பெற்று அவர்களை வெல்ல முயலுதலே காரியமென்று தீர்மானித்து, அவ் யாகம் முடியும் வரையில் சத்துருக்கள் தன்னைத் தாக்காதிருப்பதற்காக மாயையினல் சீதையின் உருவம் ஒன்று செய்து, அவ் உருவத்தை வாளால் வீசிக்கொன்று ராமலக்ஷ்மணரைச் செயலறச் செய்து வெல்வேன் எனச் சங்கற்பித்துக் கொண்டு அவன் போர்க்களம் செல்கிருன்.

(தொடரும்.)

# இஸ்லாமும் சாஸ்திர பரிசிலனையும்

மனிதன் தனக்குப் பேருதவி செய்த வள்ளல்களை வெகு லேசாக மறந்துபோய்விடுகிருன். வண்டிகளை முதன் முதல் உண்டாக்கியவர்களையும் உலோகங்களை முதன் முதல் உபயோகத்துக்குக் கொணர்ந்தவர்களையும் யார் நினைவு வைத்துக் கொண்டிருக்கிருர்கள்? படகுகள் கட்டிப்பிற்காலத்தவர் திரை கடல் ஓடித் திரவியம் தேடுவதற்கெல்லாம் வழி காட்டியவர்களின் பெயர்களைக் கூடச் சரித்திரம் குறித்துவைக்கவில்லை. இன்னும் பாலங்கள் கட்டிக் காண்பித்துக் கொடுத்தவன் யார்? பூமியைக் கலப்பை கொண்டு உழுதால் பயன் ஒன்றுக்குப் பத்தாகும் என்று காட்டிக் கொடுத்தவன் யார்? மிகச் சாமானியமாய்க் கருதப்படுவதும், ஆனல் எல்லாவற்றிற்கும் பிரதானமானதுமான, அக்னியைப் பற்றவைக்கும் முறையைக் காட்டிக் கொடுத்த பெரியான் யாவன்? இவர்களையெல்லாம் உலகம் மறந்தே போய்விட்டது.

ஆனல் சரித்திர காலத்தில் பெரிய காரியங்கள் செய்த பெரியார்களின் பெயர்களும் செயல்களும் அவ்வக் காலத்து வித்துவான்களாலும் ஆசிரியர்களாலும் எழுதப்பட்டு வந்திருக்கிறது. இல்லையேல் மூல கிரந்தங்களைப் படிக்க ஆற்றலும் சௌகரியங்களும் இல்லாத எம் போன்றவர்களுக்கு பாரதாரு சரித்திரமும் எட்டாது போயிருக்கும். அங்ஙங்கே கல்விப் பொருள்களைப் பொருளென மதித்த பெருந்தகையாளர் தங்களுக்குமுன் சரஸ்வதி தேவியின் தொண்டர்களாக இருந்தவர்களின் திருச் சரிதைகளை எழுதிவைத்ததனலேயே பிற்காலத்தவர் அவர்களுடைய வரலாற்றை யறிந்து அவர்கள் வழிகளைப் பின் பற்றி வருவதோடு அவர்களையும் வாழ்த்துகிருர்கள்.

இருப்பினும், ஜாதி உணர்ச்சி ஒன்று நாம் அறியக்கூடிய உண்மைகளை நாம் அறியாமலே செய்துவிடுகிறது. அனேக விஷயங்களுக்கு ஜாதி உணர்ச்சி மிகவும் உதவியாக இருக்கிறது. ஆனல் மனித ஜாதிக்கு உயர் வழி காட்டியிருக்கிற அனேகம் பெரியார்களை, தங்களுக்குச் சம்பந்தமில்லாதவர் அல்லது விரோதிகள் என நினைத்துக்கொண்டு, அலக்ஷியம் செய்துவிடும்படி இந்த ஜாதி உணர்ச்சியே மனிதரைத் தூண்டி, அவர்களுக்கு இயற்கையாக ஏற்பட்டுள்ள செல்வத்தைப் புறக்கணித்துவிடும்படி செய்துவிடுகிறது. அந்த ஜாதிச் செருக்கினலேயே ஹிந்துக்கள் பிறரை மிலேச்சர் என்று கூறி வருகின்றனர். புராதன கிரேக்கர் பிற ஜாதியாரை அநாகரீகர் என்று கூறிவந்தனர். முஸ்லிம்கள் இதர மதத்தினரைக் காபிரிகள் என்று அழைக்கின்றனர். தற்கால ஐரோப்பியர் உலகத்தின் மற்ற ஜாதியாரைச் "சுதேசிகள்" என்று இழிவான பொருள் வைத்துப் பேர் வைத்திருக்கிருர்கள். இந்த அலக்ஷிய புத்தியைவிட்டு இதர ஜாதியார்கள் சேமித்து வைத்த அறிவுப் பொருள்களையும் அறப் பொருளையும் விசாரித்து ஆராய்ந்தறிந்தால்தான் மனிதர் அவசியம் அறியவேண்டிய விஷயங்களை அறியாது விட்டவராகார்.

இன்று நாம் எழுத எடுத்துக்கொண்ட பெரியார்களின் சரித்திரத்தில் இன்னொரு விசேஷம் இருக்கிறது. இவர்களது சரித்திரத்தை ஹிந்துக்கள் மாத்திரமில்லை, ஆங்கிலேயர் மாத்திரமில்லை ஐரோப்பிய நாடுகளிலுள்ள பண்டிதர் மாத்திரமில்லை, அவர்களால் கீர்த்தியையும் பெருமையையும் அடைந்த அவர்களது சகதர்மிகளான முஸ்லிம்கள்கூட அலக்ஷியம் செய்து விட

55



டிருக்கிறார்கள். ஆகவே இங்கு அராபிய வித்துவான்களுள்ளும் சாஸ்திரஞருள்ளும் சிலருடைய அரிய வேலைகளைப் பற்றி எழுதி அவர்களைப் பற்றி இன்னும் அதிகமாக அறிய வேண்டும் என்கிற ஆசையை ஹிந்துக்களும் முகம்மதியரும் பிறருமாகிய நம் நேயர்களுக்கு உண்டாக்க விரும்புகிறோம்.

முஹம்மது நபி—ஸல்லல்லாஹு அலைஹி வஸ்ஸல்லம்—இலக்கிய கல்வியையும் சாஸ்திர கல்வியையும் பெரிதும் புகழ்ந்திருக்கிறான். அவனுக்குக் கல்வி அதிகம் இல்லை. ஆனால் அவனது வாக்கு தெய்வத்தன்மை பொருந்தியதாக இருக்கிறது. குரான் ஷெரிபினுடைய இடிபோதை போன்ற கம்பீரமான நாதம் கோழைகளையும் சிங்கங்களாக்கும் ஆற்றலுடையதா யிருக்கிறது. அவன் தன் பிரசங்கங்களிலும் கல்வியைப் பற்றி மிகப் பெருமையாகப் பேசியிருக்கிறான். 'கடவுளின் சிருஷ்டிகளை ஆராய்ந்து பார்ப்பதில் செலவாகும் ஒரு மணி நேரம் ஸ்தோத்திரத்திலேயே செலவாகும் எழுபது வருஷங்களை விட அதிக பயனைத் தரும்,' என்கிறான். 'கல்வியை நாடுகிறவன் வானத்தவர்க்கு நல் விருந்தாவான்,' என்றும், 'கற்றோரைக் கௌரவிப்பவன் என்னைக் கௌரவிக்கிறான்,' என்றும், 'கல்விக்காக வாழ்ந்தவன் இறந்தவனே யல்லன்,' என்றும், 'பாண்டித்தியமே மனிதனது உத்கிருஷ்டமான பூஷணம்,' என்றும் கூறி நபிகள்நாயகம் தனது சிஷியர்களைக் கல்விப் பொருளையே தேடும்படி தூண்டி வந்தான். அவனது பெரிய தகப்பன் மகனான அலியை மகா பண்டிதனாக ஆக்கியது அவனே யாவன்.

பாண்டித்தியத்தையும் சாஸ்திர விசாரணையையும் முஹம்மதும் அவனது பிரதமசிஷியனான அலியும் இவ்வளவு பெருமையாக பாவித்ததிலிருந்து, அராபியர்களுள்ளும் இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவிய பிற ஜாதியாருள்ளும் கல்வியே மற்றெல்லாப் பொருள்களிலும் உயர்ந்தது என்கிற எண்ணம் விஸ்தாரமாகப் பரவ ஆரம்பித்தது. இஸ்லாத்தின் செல்வாக்கு உலகெங்கும் பரவிய ஓராயிர வருஷ காலத்தில் இந்த முஸ்லீம் பண்டிதர்கள் எழுதிய இலக்கியங்களும், செய்த ஆராய்ச்சிகளும் மீமாம்ஸ விசாரணைகளும் எண்ணுக் கடங்கட்டன வல்ல. அராபிய பாரஸீக நூல்களின் மொழிபெயர்ப்புக்களைப் படித்துப் பார்த்து லூயி பிகியே என்பவன் மஹா பண்டிதரின் ஜீவ சரித்திரங்கள் என்று பிரெஞ்சு பாஷையில் ஓர் அழகிய நூல் எழுதியிருக்கிறான். மூன்று கனத்த புஸ்தகங்களாக எழுதப்பட்ட அந் நூல் கல்வியபிமானம் உள்ளவர்க்குப் பெரியதோர் விருந்தாக இருக்கிறது. அதினின்று நாம் பொறுக்கி யெடுத்து வைத்திருக்கிற முஸ்லிம் பண்டிதரின் சரித்திரங்களுட் சிலவற்றை இம் மாதம் வெளியிடுகிறோம்.

பிர்தௌஸி, ஸஅதி, ஹாபிஜ், நிஜாமி, ஜலால் உத்தின் ரூமி என்கிற கவி ரத்தினங்களின் நூல்கள் இலக்கிய உலகத்தில் அமரத் தன்மையைப் பெற்றிருக்கின்றன என்று கல்விமான்கள் அறிவர். சிருங்காரம், வீரம், சோகம், பயானகம், பீபத்ஸை முதலிய சகல ரஸங்களையும் கையாடி இவர்கள் நம்மனோர்க்கெல்லாம் தெவிட்டாத இன்னமுது ஊட்டியிருக்கின்றனர். ஆனால் இவர்கள் இலக்கிய உலகத்துக்குச் சூரியர்களே யாவர். இவர்களுக்கு அடுத்த படியில், ஆனால் சாமானிய மனிதருக்கு அசாமானியமான ஆனந்தம் கொடுக்கக் கூடிய, இலக்கிய உலகமாகிற வானத்திற்குச் சந்திரனைப் போலவும் நக்ஷத்திரங்களைப் போலவும் உற்கைகளைப் போலவும் விளங்குகிற, அனேக கவிகள் இஸ்லாமிய உலகத்திற்குக் கீர்த்தி சம்பாதித்துக் கொடுத்திருக்கிறார்கள். அராபியக் கதைகள் எத்தனை ஐரோப்பிய

* Louis Figuier's VIE DES SAVANTS.



பாஷைகளில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றன! அவை வெளிவந்த உடனே அவ்வவ் நாடுகளில் எழுந்த புதிய இலக்கியங்களின் தொகையே அக் கதைகளின் பெருமைக்குச் சான்றாக நிற்கின்றன.

நம் நாட்டில் விக்கிரமாதித்தன், ஸ்ரீ ஹர்ஷன், அனபாயன், குலோத்துங்கன், போஜன், பிரதாபருத்திரன் முதலிய மகா ராஜாக்களைப் போன்ற வித்தியா போஷகர்கள் இஸ்லாமிய ராஜ்ஜியங்களில் தோன்றியது வித்துவான்கள் பெருகியதற்கு ஓர் காரணமாகும். கைரோவிலுள்ள அஜீஜ் பில்லாஹ, ஹாகிம் பி அமரில்லாஹ என்ற அரசர்கள் அனேக வித்துவான்களை ஆதரித்திருக்கிறார்கள். அவர்களுள் அலி இப்ன் யுனூஸ் என்பவன் மகா மேதாவி. இவன் கவியாக இருந்தது மாத்திரமின்றி, சகல சாஸ்திர பண்டிதனுமாயிருந்தான். அவன் ஜோதிஷ சாஸ்திரத்தைப் பற்றி எழுதிய ஜீஜ-ஹல் அக்பர் அல் ஹாகிமி என்ற நூல் இப்தோலமனுடைய சித்தாந்தத்தை * மங்க வைத்துவிட்டது என்றால், அதன் யோக்கியதையை அறிஞர் ஒருவாறு கண்டு கொள்வர். அதை உமர் கையாம் பாரசீக பாஷையில் கலி சக அ௰--இல் மொழி பெயர்த்தான். நசுருஸோ சோக்கா என்ற கிரேக்கன் அதன் பலன்களைத் தன் வானசாஸ்திரத்திலும், கோ ஷியோ கிங் என்ற சீனன் அதன் முடிவுகளை தன் கணித சாஸ்திரத்திலும் கிரகித்துக் கொண்டிருக்கின்றனர். யுனூஸேதான் தொங்கானின் † ஆட்டத்தால் நேரத்தின் செலவைக் கணிக்கலாகும் என்று முதலில் கண்டு பிடித்தவனும். ஹாரூன் அர் ரஷீதின் மகனான அல் மாமூன் என்ற சக்ரவர்த்தி வித்துவான்களைப் போஷிப்பதில் போஜனுக்கு இணையாக இருந்தான். ரூம் சக்ரவர்த்தியான மூன்றாவது மிக்கேல் என்பவனைப் போரில் முறியடித்த பிறகு மாமூன் அவனிடம் கப்பம் கேட்கவில்லை—அராபி பாஷையில் மொழி பெயர்க்கப் படாத கிரேக்க லத்தீன் நூல்களில் வகைக்கு ஓர் பிரதி கொடுத்தால் போரைத் தொடராமல் நிறுத்திக்கொள்கிறேன் என்று மிக்கேலுக்குச் சொல்லியனுப்பினான்! இப்பேர்ப்பட்ட அரசன் அன்றோ ராஜ சிங்காதனத்தையே அலங்கரிக்கும் மகா புருஷன்! இவன் காலத்தைத்தான் அராபிய இலக்கியத்தின் ஔகுஸ்த யுகம் * என்பர். இவன் ஆட்சிக் காலத்தில் இப்தோலமனின் ஆல்மாகேஸ்தம் என்ற வானசாஸ்திரம் மறுமுறை மொழி பெயர்க்கப்பட்டது. இவனது அவையின் கண் விளங்கிய ஸேந்து இப்ன் அலி, யஹியா இப்ன் அலி மன்ஸூர், காலிது இப்ன் அப்துல் மலிக் ஆகிய மகா கீர்த்திமான்களான மூன்று ஜோதிஷ நிபுணர்களும் திருக்கணனம் செய்து சோதித்துச் சரி பார்த்த சார ஜாபிதாக்கள் என்ற நூலை இயற்றி வெளிப்படுத்தினார்கள். மாமூனின் ஆணையின் படி தான் மூஸா அல் காரிஸ்மி என்பவன் பாஸ்கராசாரியர் எழுதிய சூரிய சித்தாந்தத்தை மொழி பெயர்த்தான்; அல் கிண்டி என்பான் கணக்கு, ரேகா கணிதம், தத்துவ சாஸ்திரம், ஸீதோஷ்ண தத்துவம், † பிரகாச தத்துவம், ‡ வைத்தியம் ஆகிய இத்தனை விஷயங்களையும் ஆராய்ந்து எழுதியுள்ளான்; அபூ மஅஷரும், மூஸா இப்ன் ஷாகிர் என்ற மகா பண்டிதனது குமாரர்களான முஹம்மது, அஹமது, ஹஸன் என்பவர்களும் ஜோதிஷ சாஸ்திரத்தைச் சேகற ஆராய்ந்து நூல்கள் எழுதினார்கள். பின் சொல்லிய மூவரும் சூரியன் நக்ஷத்திரங்கள் ஆகிய இவற்றின் சாரசரி கதியைப் பற்றிச் செய்திருக்கிற நிர்ணயம் நேற்றுத்தான் ஐரோப்பாவில் செய்திருக்கிற நிர்ணயத்துடன் ஒத்திருக்கிறது என்றால் அவர்களது ஆராய்ச்சியின் நுண்மையை எடுத்துரைத்தல் சாத்தியமாகுமா?

* Ptolemy's *Almageste*. † Pendulum.

* Augustan age. † Meteorology. ‡ Optics.

கஜினி மாமூதைப்பற்றி, அவன் இந்தியாவைப் படையெடுத்துக் கோடிக் கணக்கான திரவியங்களைக் கொள்ளை கொண்டு போயினன் என்றே தான் நம் இளைஞர் அறிவர். ஆனால் சௌரியத்துக்கும் பேராசைக்கும் அவன் எவ்வளவுக்குப் பெயர் போயிருந்தானோ அவ்வளவுக்குக் கல்விக்காகவும் கற்றோரை ஆதரிக்கும் குணத்துக்காகவும் பெயர் போனவனாயிருந்தான். பிர்தௌஸியை முதலிலெல்லாம் ஆதரித்து ஷா நாமா எழுதச் சொல்லியதும் அவனே. அவனிடத்தில் கடைசியில் லோபித்தனமாக நடந்துகொண்டானாலும் அனேக முதல்தரமான கவிகளும் சாஸ்திரக்ஞர்களும் அவனது சபையில் நக்ஷத்திர மண்டலத்தைப்போல விளங்கினர். அவனது அவையை அலங்கரித்தவர்களுள் சிறந்தவன் அல்பேருனி என்று சாதாரணமாய் அழைக்கப்பட்ட அபூ ரயிஹான் முஹம்மது இப்ன் அஹ்மது அல்பேருனி என்பான் ஆவன். இவன் தத்துவ சாஸ்திரத்திலும் கணித சாஸ்திரத்திலும் மகா நிபுணன். தவிர அவன் பிரயாணஞ் செய்த தேசங்களையெல்லாம் சேகற வர்ணித்து அப்துல் லதீபைப் போலவும், அல் அத்ரீஸி காஜ்வீனியைப் போலவும், அபுல் பேதாவைப் போலவும் தேச நூல்கள் பல எழுதியிருக்கிறான்.

அவிஸென்னா என்று ஐரோப்பியரால் அழைக்கப்படும் அபூ ஹுஸேன் இப்ன் ஸீனா என்பான் அக்காலத்துப் பண்டிதர்களுக்குள்ளெல்லாம் பண்டிதனாக இருந்தான். அவனைத் தன் அவையை அலங்கரிக்கும் திலகமாக வைத்துக்கொள்ள வேண்டும் என்று மாமூது அவனைப் பன் முறை வேண்டிக்கொண்டான். ஆனால் அவன் இசையவில்லை. அது கண்டு வெகுண்டு மாமூது அவனைத் தன் ஏகாதிபத்தியத்தாள் எங்கும் இருக்கக் கூடாது என்று பகிஷ்கார உத்தரவு செய்துவிட்டான். இருப்பினும், 'மன்னவனும் நீயோ? வள நாடும் உன்னதோ?' என்று சொல்லிக்கொண்டு அபூ இப்ன் ஸீனா ஹமதானின் அமீரான ஷம்ஸுத்தௌலா வினிடம் சென்று அவனது விஜியாக (மந்திரியாக)வும், பிறகு இஸ்பஹான் அமீரான அலாவுத் தௌலாவின் விஜியாகவும் நியமனம் பெற்றான். அவனுக்குத் தெரியாத சாஸ்திரம் கிடையாதாம். வைத்தியம், மனோ தத்துவம், கணிதம், ஜோதிஷம் இவைகளில் அவன் இணையற்றவனாக விளங்கினான். இது தவிர அவன் கவிதையிலும் சிறந்தவனாக இருந்தான்.

அவனது சரித்திரம் அன்பருக்குக் கல்வி உற்சாகத்தைத் தருமாதலால் அதை இங்குச் சற்று விரிவாக எழுதப் புகுகிறோம்.

அவன் கலி ௪௦அக-இல் பிறந்து பத்து வயதிலேயே குரான் ஷெரீபை அத்தியயனம் செய்து முடித்ததோடு சாமானிய கணிதத்திலும் பீஜ கணிதத்திலும் நிபுணனாகிவிட்டான். பதினாறு வயதிற்குள் அரிஸ்டாட்டலுடைய சாங்கியத்தையும்* அதன் மீது அல் பாராபி எழுதிய பாஷியத்தையும் கண்டபாடம் செய்துவைத்துக்கொண்டுவிட்டான். ஆராய்ச்சியின் பெருக்கத்தினால் அவன் இரவில் தூங்கக்கூட மாட்டானாம். தன் அறிவு சத்தியத்தையே காண வேண்டும் என்றும், தனக்கு அருள்வாக்கு உண்டாக வேண்டும் என்றும் கடவுளைப் பிரார்த்திப்பானாம். கஅ வயதுக்குள் மகா மகோபாத்தியாயன் என்று பண்டிதர் தன்னை வியந்து புகழும்படி அவன் கல்விக் கடலைக் கடந்துவிட்டிருந்தான். வைத்தியத்திலும் மகா நிபுணனாக இருந்தமையால் அவனை அமீர் நூஹ் இப்ன் மன்ஸூரின் வியாதியைத் தீர்க்க அழைத்தார்கள். பல வைத்தியர் தீர்க்க முடியாத வியாதியை அவன் தீர்த்தமையால் அவனிடம் அமீருக்கு அன்பு பிறந்துவிட்டது. அவனுக்கு வேண்டிய பொருளுதவியதோடு அமீர் தனது சிறந்த புத்தகசாலையை

* Aristotle's METAPHYSICS.



யதேஷ்டமாய்க் கையாளும்படி அவனுக்கு அனுமதி கொடுத்தான். அவனது கீர்த்தியைக் கேட்டு பாகதாது தாருஸ் ஸலாத்தின் அமீரான அபுல் ஹஸனும் அவனை ஆதரித்தான். அவன் வேண்டுகோளின்படி நம் பண்டிதன் ஸம்ஹிதை என்று பெயர் வைத்து ஓர் பெரிய நூல் எழுதி வெளியிட்டான். அவனுக்குப் பிரயாணத்தில் நிரம்பப் பிரியம். ஆதலால் அவன் கடைசியாய்த் தங்கின அல் பொகாராவிலிருந்து கோர்கஞ்சுக்கு ஓர் பாலைவனத்தின் வழியாய்ச் சென்றான். ஆனால் வழி காட்டுவாரின்றி வழி தவறி, வழியில் நோய் வாய்ப்பட்டு, இறக்கும் தருவாய்க்கு வந்து கடைசியாக அரிதில்தான் பிழைத்தான். இருப்பினும் நடக்கும் சக்தி வந்ததும் அவன் மறுபடியும் தன் வித்தியா யாத்திரையைத் துவக்கிவிட்டான். வெகு தூரம் அலைந்து திரிந்த பிறகு அவன் ஷிராஜுக்கு வரவே முஹம்மது அல் ஷிராஜி என்பான் அவனுக்கு ஓர் வீடு கட்டித் தந்து அவனுடைய யோக க்ஷேமங்களையும் விசாரித்துக்கொண்டான். ஷிராஜில் அவன் தர்க்கத்தைப் பற்றியும் இப்தோலமனுடைய அல்மாகெஸ்த்தைப் பற்றியும் பிரசங்கம் செய்து வந்ததோடு முஹம்மதுக்காக ஜோதிஷத்தைப்பற்றிய பல நூல்களும் எழுதினான். ஆனால் அவனது பாத சக்கரம் அவனை மறுபடி இழுத்து ஈராக்கிலுள்ள ரேயி என்ற இடத்துக்குக் கொண்டு போய்விட்டது. அவனது கீர்த்தி அவனுக்கு முன்னேயே அப் பிரதேசத்தில் வந்திருந்தமையால் அந்நாட்டு அரசன் அவனைச் சிகிச்சைக்கு அழைத்து அவனால் சௌக்கியமும் அடைந்தான். அது முதல் அரசன் அவனைப் பரம பிரேமையோடு தாங்கி வந்தான். ஆனால் ஈராக்கில் கலகங்கள் ஏற்பட்டதால் அபூ ஸீனா அதைவிட்டு ஹமாதானுக்குச் சென்றான். அங்கேயும் அவனது கைராசி அவனை ராஜமானியனாக்கிவிட்டது. அமீர் ஷம்ஸுத் தௌலா அவனை மந்திரியாக்கிக்கொண்டான். ஆனால் ஓர் போரில் அவன் தங்களுக்குப் போதிய உதவி அனுப்பவில்லை என்று ஷம்ஸுத் தௌலாவின் சிப்பாயிகள் அவனைக் கொன்றுவிட வேண்டும் என்று சத்தம் செய்ததால் அரசன் அவனை வேறு ஊருக்குப் பகிஷ்காரம் செய்தனுப்பினான். ஆனால் மறுபடி அரசனுக்கு ஓர் புதிய வியாதி வர அவன் தமது அபூ ஸீனாவையே அழைக்கவேண்டி வந்தது. அரசன் சாகிற வரையில் அவன் மந்திரி ஸ்தானத்தை மறுபடி ஏற்று வகித்து வந்தான். அவனது மகன் பட்டத்துக்கு வந்த பிறகுதான் அபூ மந்திரி ஸ்தானத்தை நீங்கினான். புதிய அரசன் அவனை நீக்கினதால்தான் உலகம் அவனது உத்கிருஷ்டமான நூல்களைப் பெறும் பாக்கியத்தைப் பெற்றது. தலைநகரை விட்டு ஓர் சிற்றூர் சென்று அங்கே ஓர் மருந்துக் கடைக்காரன் வீட்டிலே தங்கி அவ் வீட்டில் நின்றே வைத்தியவிதி, அர் ஜூஸா என்னும் தன் இணையற்ற மருத்துவ நூல்களை இயற்றி வெளியிட்டான். வெளியிட்டதையடுத்து மறுபடி ஓர் முறை சுற்றுப் பிரயாணம் கிளம்பிப் பல இடங்களும் சுற்றி, சிறையில் பல தடவை வைக்கப்பட்டு, கடைசியில் அவன் இஸ்பஹான் சென்று அவ்விடத்தில் அரசனால் மானிக்கப் பெற்றான். அவ் அரசன் அவையிலேயே கடைசி வருஷம் இருந்து வைத்தியம், தர்க்கம், சாங்கியம், ஜோதிஷம், க்ஷேத்திர கணிதம் முதலிய விஷயங்களைப் பற்றிக் கற்றோர் இன்றைக்கும் மதிக்கிற அரிய நூல்களை எழுதி முடித்து, ருஎ வயது நிரம்ப உ மாதங்களிருக்கும் போது அவன் இவ் உலகத்தை நீத்தான்.

அவனது வைத்திய விதி, லத்தீனில் ஜெரார்டு என்பவனால் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. ௬௦௦ வருஷங்களுக்கு ஐரோப்பிய வைத்திய உலகத்தில் இந் நூலே தனி ராஜ்யம் செலுத்தி வந்தது! இவனை எப்பொழுதும் வைத்திய ராஜன் என்றே அழைப்பது வழக்கம்.

ஆனால் மேற் சொன்ன சாஸ்திரங்களைத் தவிர இவன் ரஸாயனம், ரஸவாதம் முதலிய பல சாஸ்திரங்களை ஆராய்ந்து அவற்றைப் பற்றியும் நூல்கள் பல இயற்றியிருக்கிறான். ரஸவாத நூலில் பூகம்பமும் நீரோட்டங்களுமே மலைகளின் உற்பத்திக்குக் காரணம் என்று ஆதாரங்களோடு அவன் காட்டியிருப்பது வியக்கத் தக்கதாயிருக்கிறது. எழுதுகிறான், "மலைகளின் தற்போதைய அமைப்பிற்கு நீரே முக்கிய கருவியாக இருந்திருக்கிறது என்பதை அவற்றில் பதிந்து கிடக்கும் நீர் வாழ் பிராணிகளின் சின்னங்களினின்றும் பிற சின்னங்களினின்றும் அனுமானிக்கலாகும். மலைகளின் மீது காணப்படும் மஞ்சள் வர்ணமுள்ள மண்ணும் களி மண்ணும் பாறைகள் எம் மூலத்தினின்று உண்டாயினவோ அம் மூலத்தினின்று உண்டாகவில்லை. நீரினின்று படிந்த பிராணிகளின் பிரேதங்களும் களிமண்ணுமே இவற்றுக்கு மூலம். ஒரு காலத்தில் பூமி யனைத்தையும் மூடி இருந்த சமுத்திரத்தின் புராதன அடி மண்ணே இன்று இம் மலைகளின் மீது காணப்படும் மண்ணாக இருக்கலாம் என்றும் தோன்றுகிறது." இன்றைக்கு ஐரோப்பிய பூஸார சாஸ்திர நிபுணர்கள் * வெகு காலத்திய ஆராய்ச்சிகளின் பயனாக அனுமானித்திருப்பதை இத் தீரன் ஆயிரம் வருஷங்களுக்கு முன்னாகவே அனுமானித்திருப்பது நமக்குப் பேராச்சரியத்தைத் தருகிறது.

இன்னும் எத்தனையோ பண்டிதர்களைப் பற்றி எழுத விரும்பினோம். ஆனால் அல் பொக்காரா ஸுல்தான் தன் அவையை அலங்கரிக்கவேண்டும் என்று வேண்டிக்கொள்ள, என் புத்தகங்களைக் கொண்டு வருவதற்கு ௪௦௦ ஒட்டகங்கள் தேவையாக இருக்குமாதலால் நான் இருக்குமிடத்திலேயே இருந்துவிட அனுமதி தரவேண்டும் என்று கூறிய மகானைப் போன்ற பண்டிதர்கள் இஸ்லாம் உலகத்தில் எண்ணற்றவர்கள் இருந்திருக்கிறார்கள். ஸ்பெயின், மொராக்கோ, மிஸரம், துருக்கிஸ்தானம், ஸமரகண்டம், அப்கானிஸ்தானம், இந்துஸ்தானம், ஆகிய இத்தனை நாடுகளிலும் கல்வியையே மெய்ப் பொருளாக மதித்த மகா தேஜஸ்விகளான இஸ்லாமிய பண்டிதர்கள் ஆயிரக் கணக்காக வாழ்ந்திருக்கிறார்கள். கைரோ ஒரு நகரத்தில் இருபது லக்ஷம் நூல்கள் பகிரங்க புத்தக சாலையில் இருந்ததாம். அவற்றுள் வான சாஸ்திரத்தைப்பற்றி மாத்திரம் ௬,000 நூல்கள் இருந்தன! இவற்றை யெல்லாம் பற்றிப் பேச இவ் வியாசத்தில் இடம் போதாது. ஆனால் ஜாபிர் அல்ஸுபி, அபூ ஜகாரியா யாஹியா பின் மஸ்ஸுபியா, ராஜி என்று அழைக்கப்படுகிற முகம்மது அபூ பாகர் இப்ன் ஜகாரியா, அவெரோபெஸ் என்று பெயர் வைத்து ஐரோப்பியர் புகழ்கிற அபுல் வலீது முஹம்மது இப்ன் ருஷ்து, அபுல் காஸிம் முதலிய மகா பண்டிதர்களைப் பற்றி இன்னும் எப்போதாவது எழுதவே இருக்கிறோம்.

* Geologists.

ஆங்கிலேயன் (கம்பீரமாய்): எங்கள் ஏகாதிபத்தியத்தில் சூரியன் அஸ்தமிக்கிறதேயில்லை.

ஐர்லாந்தான்: கடவுளை முட்டாள் என நினைத்தாயா? வெளிச்சமில்லாத இடத்தில் அவன் உங்களை எப்படி நம்பி விட்டுவைப்பான்?



# எதிரொலியாள் *

ஓர் சிறு கதை

[இக் கதை எத்தனையோ பெயர்களால் எத்தனையோ முறை எத்தனையோ மாதிரி எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் எத்தனை முறை வெளிப் படுத்தப் பட்டாலும் அதன் இயற்கைச் சுவை அதற்கு நித்திய யௌவனத்தைக் கொடுத்திருக்கிறது. அதன் இயற்கைச் சுவையே நாம் அதை இவ்விடத்தில் இன்னொரு முறை பிரசுரிப்பதற்கு மன்னிப்பாகும்.]

நமது கதை கிரேஸ் நாட்டில் வானத்திலுள்ள தேவர்களெல்லாம் பூமியில் வசித்த நாட்களில் நிகழ்ந்ததாகும். பூமியும் வானமும் இன்னும் இளமைப் பருவத்திலேயே இருந்த காலத்தில் எலிகம் † என்ற மலையின் சாரலிலுள்ள ஓர் பூஞ்சோலையில் தேவ ராணியான ஏரை ‡ என்பவள் வசித்துவந்தாள். அவளுடைய கணவனும் தேவ ராஜாவுமான ஜேயஸ் § அவள் இட்ட பணிகளைச் செய்ய அநேக தேவ கன்னிகைகளை அவளிடம் அனுப்பி வைத்திருந்தான்.

பணிப் பெண்களெல்லாம் மகா ரூபவதிகள். அழகு என்னும் பொருளே பல உருவங்கள் தரித்து வந்தது போன்றிருப்பர். கிளியினும் இனிய மொழிகளால் அவர்கள் அச் சோலையில் வசிப்போரின் இருதயத்தைப் பரவசமாக்குவர். அவர்கள் இளமைக்கு இயற்கையாக உள்ள உற்சாகத்தினால் பாடி ஆடிக் குதிப்பது கண் கொள்ளாக் காட்சியாக இருக்கும். அவர்களுடைய லாவண்யத்தின் சாயை பட்டால் போதும், பட்ட மரம் துளிர்த்துவிடும்.

ஏரை இட்ட வேலைகளை யெல்லாம் இவர்கள் முணுமுணுப்பின்றிச் செய்வர். ஆனால் வேலைகள் பிரமாதம் என்று யாரும் நினைக்க வேண்டாம். அடுத்த வனங்களுக்குச் சென்று மேய்ந்து கொண்டிருக்கும் மான் குட்டிகளைப் பிடித்து வரவேண்டும். நந்தவனத்திலுள்ள மலர்களைப் பறித்து வந்து மாலைகள் கட்ட வேண்டும். மலர்ச் செடிகளுக்கு தண்ணீர் எடுத்துக் கொண்டு வந்து விடவேண்டும். ஏரை வளர்க்கும் பச்சைக் கிளிக்கு இன்னமுது ஊட்ட வேண்டும். ஏரைக்கே அணிகள் அணிவித்து, உடைகளைத் தெரிந்தெடுத்து உடுத்த வேண்டும். இடையில் தேவ ராஜா யாரோடாவது சல்லாபம் செய்து கொண்டிருக்கிறானோ என்று பார்த்து வரவேண்டும். ஏனெனில் ஏரை மிகுந்த சந்தேகக்காரி; ஜேயனும் சந்தேகத்துக்குக் காரணம் கொடுக்காமலிருப்பதில்லை.

கன்னிகைகள் எல்லா வேலைகளையும் சரிவரச் செய்வார்கள். ஆனால் ஏரை சிடுசிடுப்புக்காரி. எவ்வளவு சரியாகச் செய்தாலும் செய்த வேலையில் ஒரு 'குற்றம்' சொல்லாதிருக்கமாட்டாள். ஆகையால் பணிப் பெண்களுக்கு வேலை வளரும். உற்சாகமும் குறைந்துவிடும். அவர்கள் ஏதேச்சையாக விளையாடுவதற்குப் பொழுதே இராது.

கடைசியில் அவர்களெல்லோரும் கூடி ஓர் யோசனை செய்தார்கள். இத்துணைக் கண்டிப்புக்காரியான ஏரைக்கு ஒரு விஷயத்தில் மாத்திரம் ஓர் இளக்கம் இருந்தது. கதை என்றால் உயிரைக் கொடுத்துவிடுவாள். மத்தியான வேளைத்தில்

* Echo. † Helicon. ‡ Hera or Juno. § Zeus.

பூஞ்சோலையில் நிழல் செறிந்த ஓர் லதா மண்டபத்தில் உட்கார்ந்துகொண்டு, கன்னிகைகளையெல்லாம் பார்த்து, 'இது ஏன் சரியாக இல்லை? அதை ஏன் செய்யவில்லை?' என்று கண்டித்துக்கொண்டிருக்கையில், எதிரொலியாளைப் பார்த்துவிட்டாளானால் உடனே அவள் முகத்திலுள்ள கோணல்களெல்லாம் நேராகிவிடும். அவளைக் கூப்பிட்டு அருகில் உட்காரவைத்துக்கொண்டு ஒரு கதை சொல்லும்படி கேட்பாள். எதிரொலியாள் கதை சொல்லுகிறதில் மகா நிபுணை. தேவாசுர யுத்தம், ஏராகிளவுடைய அருஞ்செயல்கள், யாஸனுடைய கப்பல்யாத்திரை,* இவைகளைப்பற்றிப் பேசத் துவக்கிவிட்டாளானால் ஏரையும் அவள் பணிப் பெண்களும் அவள் வாயையே பார்த்துக்கொண்டிருந்துவிடுவார்கள்—நேரம் போவதே அவர்களுக்குத் தெரியாது. ஆகையால் தேவ கன்னிகைகள் ஏரையின் இந்த நொய்மையையும் எதிரொலியாளின் பௌராணிக சாமர்த்தியத்தையும் தங்கள் விளையாட்டுக்குச் சாதகமாக்கிக்கொள்ள நிர்ணயித்தார்கள். என்றைக்காவது கொட்டமடிக்க வேண்டுமென்று தோன்றினால் அன்று அவர்கள் எதிரொலியாளின் கழுத்தில் அழகிய மாலை ஒன்றைப் போட்டு அவளைச் சந்தோஷப்படுத்தி, 'இன்றைக்கு ஏரைக்கு ஒரு நல்ல கதையைச் சொல்லி மயக்கிக் கொண்டிரு, நாங்கள் ஆசை தீர விளையாடிவிட்டுச் சாயங்காலம் உனக்கு நல்லதொரு ரோஜா மாலை கட்டிக்கொண்டு வருகிறோம்,' என்பார்கள். எதிரொலியாள் சின்னச் சிட்டுக் குருவி. அவளுக்கு விசாரம் என்பதே கிடையாது. காட்டில் மலரும் மலருக்குள்ள ஆத்மலயம் அவளுக்கிருந்தது. மலர் ஒன்றின்மேல்தான் அவளுக்கு ஆசை. எத்தனை மலர் இருந்தாலும் அவளுக்குப் போதாது. ஆகையால் மற்ற கன்னிகைகள் மலர் மாலை கொண்டு வந்து தருகிறோம் என்று சொல்லிவிட்டால் அந்த லஞ்சத்தை மறுக்க அவளுடைய சுபாவம் அவளுக்கு இடங்கொடுக்காது. உடனே ஏரையினிடம் சென்று அவளுக்குக் குழைபடித்து அவளை வசப்படுத்திக் கதையால் மயக்கிக்கொண்டே யிருப்பாள். கன்னிகைகள் அடிக்கிற கொட்டமெல்லாம் அடித்துவிட்டுச் சோலைக்குத் திரும்பும்சமயத்தில் எதிரொலியாளும் கதையை முடித்துவிடுவாள்.

இப்படி அனேக நாள்களாக நடந்து வந்தது. கடைசியாக ஒரு நாள் ஏரை தேவலோகத்துக்குப் போக வேண்டும் என்று உத்தேசித்து, அதற்காகத் தேவ கன்னிகைகள் ஒவ்வொருத்திக்கும் ஒவ்வொரு வேலையிட்டு, எல்லாவற்றையும் சந்திரோதயத்துக்கு முன் முடித்து வைத்திருக்க வேண்டும் என்று கட்டளை இட்டாள். ஆனால் காரியங்களை மாத்திரம்தான் சொன்னாளே ஒழிய, தான் தேவ லோகத்துக்குப் போக இருப்பதாக அவள் அவர்களிடம் சொல்லவில்லை. ஆகையால் கன்னிகைகளுக்கு வழக்கத்தைவிட அதிகமான சிரத்தை தோன்றவில்லை. விளையாட்டெல்லாம் விளையாடிவிட்டுக் காரியத்தை ஒரு 'ஜட்கா'வில் பார்த்துவிடலாம் என்று சொல்லிக்கொண்டு, எதிரொலியாளை ஏரையிடம் அனுப்பிவிட்டு அவர்கள் ஆட்டத்துக்கு ஓடி விட்டார்கள்.

நன்றாய்த் தேய்த்து வெழுமட்டப்பட்ட ஒரு சலவைக் கல்லுக்கெதிரே நின்றுகொண்டு, ஏரை தன் அழகைத் திருத்திக்கொண்டும், தன் மேனியின் எழிலைக் கண்டு உள்ளூற மகிழ்ந்துகொண்டும் இருக்கையில், காம் சதங்கை கலீர் கலீர் என்று ஒலிக்க, குதித்துக் குதித்துக்கொண்டு எதிரொலியாள் அவளிடம் ஓடிவந்தாள். அவள் வந்து நின்றதும் அவள் புறம் திரும்பி நோக்கித் தேவராணி, "எங்கே வந்தாய், சிட்டுக்குருவி? இன்றைக்கு எனக்கு வேலை இருக்கிறது, உன் கதையைத் துவக்கிவிடாதே," என்றாள்.

"ஏதோ இது வரையில் சொல்லியிராத ஓர் கதை சொல்லலாம் என்று வந்தேன்; அம்மாளுக்கு இஷ்டமிருந்தால் கேட்கட்டும்: இல்லையானால் போய் வருகிறேன்," என்றாள் எதிரொலி.

"நீ போக வேண்டாம், இங்கேயே இரு; நான் காரியத்தைச் சீக்கிரம் முடித்துக்கொண்டுவிடுகிறேன், அப்புறம் உன் கதையை எனக்குச் சொல்லிவிட்டே போவாய்," என்று சொல்லிக்கொண்டு ஏரை அவளை நிறுத்திக்கொண்டாள்.

ஆனால் எதிரொலியாள் பக்கத்திலிருக்கும்போது ஏரைக்கு வேலை ஓடவில்லை. அதையும் இதையும் செய்து பார்த்தாள்—ஆனால் மனது எதிரொலியாளின்மீதேதான் சென்றது. கடைசியாக, "வேலையை அப்புறம் பார்த்துக்கொள்கிறேன், உன் கதையைத் துவக்கடி, சிட்டு," என்று சொல்லி, எதிரொலியாளுக்கு ஒரு முத்தமும் கொடுத்துப் பக்கத்தில் உட்கார வைத்துக்கொண்டு, தானும் பச்சைப் பசேல் என்றிருந்த பசும் புற்றரையில் உட்கார்ந்துவிட்டாள்.

எதிரொலியாளும் கதையைத் துவக்கிவிட்டாள். கதையைக் கேட்கக் கேட்க ஏரை இந்த உலகத்தையே மறந்துவிட்டாள்—வேறு ஓர் உலகத்திற்குள் பிரவேசித்துவிட்டாள். அரசியும் அரசனும், காதலும் பகைமையும் பழி வாங்குதலும், உத்தியானங்களும் விளையாடுமிடங்களும், படையும் போரும், அரசக் கூட்டமும் சுயம்வரமும், நதிகளும் கடலும், சந்திரிகையும் நக்ஷத்திரக் கூட்டமும் என்று எதிரொலியாள் வர்ணித்த வண்ணமாகவே இருக்கிறது. நாயகர்களுக்கும் நாயகிகளுக்கும் மனதில் எழுவதாக வர்ணிக்கும் உணர்ச்சிகளையும் மெய்ப்பாடுகளையு மெல்லாம் சாக்ஷாத்தாகத் தோன்றும்படி நடித்தும், குரலால் காட்டியும் ஏரையின் இருதயத்தில் நவரஸங்களின் அனுபவத்தையும் உண்டாக்கினாள். இடையிடையே விளையாட்டுக்குப் போன கன்னிகைகள் வரும் வழியைப் பார்ப்பாள். அவர்கள் திரும்பி வராததைக் கண்டு மனதில் வருந்திக்கொண்டும், ராணி மிகவும் பறந்தாளே—அவர்களுடைய தாமதத்தைக் கண்டு மிகவும் கோபிப்பாளே என்று பயந்துகொண்டும் கதையை முடிக்காமல் வளர்த்துக்கொண்டு செல்வாள். ஆனால் கதை மாத்திரம் ஆற்றொழுக்குப் போலத் தங்கு தடையில்லாமல் பெருகிக் கொண்டே போகும்.

சந்திரோதயமு மாகிவிட்டது. ஆனால் கன்னிகைகளுக்கு விளையாட்டுச் சலிக்கவில்லை. அத்தாவள்யமான சந்திரிகையில் மத்திமுப்பதும், குதித்துப் பாடுவதும், ஆடுவதுமாக இருக்கிறார்கள். இளமையும், தென்றலும், நிலவும், கூட்டமும் சேர்ந்துவிட்டால் நேரம் போவது தெரியுமா? ஆகையால் வெகு, வெகு நேரமாகிவிட்டது. கடைசியில் ஒருத்தி திடீரென்று, "அடி அடியே, குடிகெட்டுப் போய்விட்டதே, ராணி சாயங்காலத்துக்குள் வேலையெல்லாம் முடித்து வைத்திருக்க வேண்டுமென்று சொன்னாளே, என்ன செய்கிறது?" என்று கூவினாள். உடனே எல்லோரும் ஒருவரை ஒருவர் வெறிக்க வெறிக்கப் பார்த்துக்கொண்டு, குண்டோட்டம் குதியோட்டமாய்ச் சோலைக்கு வந்தார்கள்.

தூரத்தில் வரும்போதே எதிரொலியாள் உற்சாகத்தோடு கதை சொல்லிக் கொண்டிருப்பதையும் தேவராணி உன்னிப்பாய் ஒரு வார்த்தைகூட விடாமல் கேட்டுக்கொண்டிருப்பதையும் கண்டு தேவ கன்னிகைகள் சற்று மனம் தேறிக்கொண்டு சோலைக்குள் புகுந்து அவசரம் அவசரமாய் அவர்களுக்கு இட்டிருந்த வேலைகளைப் பார்க்கலானார்கள். ஆனால் குறித்த நேரத்தில் ராஜ ஹம்ஸங்கள் கட்டிய தேர் சோலைக்குள் வந்து நின்றது. விசும்பினின்று அது இறங்கிய காட்சி ஏரையைக்

* The wars of the Gods and the Titans; the Labours of Heracles; Jason's voyage to the Golden Chersonese.

கதா லோகத்தினின்று மண்ணுலகத்திற்குக் கொண்டு வந்து போட்டுவிட்டது. தேவலோகத்துக்குப் போவதற்குச் செய்திருந்த ஏற்பாடு அவளுக்கு உடனே நினைவுக்கு வந்தது. கன்னிகைகளைக் கூப்பிட்டுத் தான் செய்யச் சொல்லியிருந்த வெல்லாம் ஆயத்தமாக இருக்கின்றனவா என்று கேட்டாள். எல்லோரும் பதில் சொல்லாமல் விழித்தார்கள். கடைசியாய், அவர்களைக் கண்டித்துப் பயமுறுத்தினதின்மேல் ஒவ்வொன்றாய் வெளியில் வந்தது. எல்லாப் பெண்களும் தன்னை ஏமாற்றித் தினம் தினம் விளையாட்டுக்குப் போய்க்கொண்டு வந்தார்கள் என்றும், தனக்குப் பராக்குக் காட்டுவதற்காகத்தான் எதிரொலியாள் நாளுக்குக் கதை சொல்லிவந்தாள் என்றும், தான் ஆசை வைத்திருந்த தேவலோக யாத்திரை நின்றதற்குக் காரணம் எதிரொலியாளுடைய கபடமும் மயக்கப் பேச்சும்தாம் என்றும் ஏரை கண்டுகொண்டதும் அவளுக்கு அடங்காத கோபம் வந்துவிட்டது.

"உன் பேச்சால் என்னை ஏமாற்றி வந்தாயன்றோ, உன் வாய் இனிமேல் அடைத்துப் போய் விடுக! யாராவது பேசினால் அவர்களுடைய கடைசி வார்த்தைகளையே நீ திருப்பிச் சொல்லக் கடவாய்! உன் மனதிலுள்ளது எதையும் சொல்ல உனக்குச் சக்தி அற்றுப்போய் விடுக!" என்று அவள் எதிரொலியாளைச் சபித்து விட்டாள்.

பணிப் பெண்கள் 'ஐயோ!' 'ஐயோ!' என்று பெரு மூச்செறிந்தார்கள். எதிரொலியாளும் 'ஐயோ!' 'ஐயோ!' என்று கதறினாள்; ஆனால் ஏரையைக் கெஞ்சி மன்னிப்புக் கேட்டுக்கொள்ள முடியவில்லை—வாயடைத்துப் போய்விட்டது!

அதுமுதல் எதிரொலியாள் எலிகத்து மலைச் சாரலில் வாய் பேச மாட்டாமல் திரிவாளாயினள்.

இவ்வாறு அவள் பரம் துக்காக்கிராந்தையாய்த் திரிந்துவரும் நாளில் ஓர் நாள் 'நாரஸிஸ்ஸன்' என்னொரு வாலிபன், வேட்டையாடச் சென்றவன் வழி தப்பிப் போய், தன்னுடைய தோழர்களையெல்லாம் விட்டுப் பிரிந்து எலிகத்துச் சாரலுக்கு வந்தான். மனிதராய்ப் பிறந்தவர்களுக்குள் நாரஸிஸ்ஸனைப்போல அழகு படைத்தவர் எவருமில்லை. தேவர்களும் கூட அவனிடம் அழகுக்குப் பிச்சை கேட்க வேண்டியதே. ஆகையால் அவனைக் கண்ட பெண்களெல்லாம் அவன் மீது மோகங்கொண்டு விடுவர். ஆனால் அவனுக்கு மாத்திரம் ஒருவர் மீதும் ஆசையே கிடையாது. விளையாட்டிலும் வேட்டையிலும்தான் அவனுக்கு அளவிறந்த விருப்பம். "ஆருடம் சொல்லுபவனை திரேஸியன் என்பான் அவன் பிறந்த காலத்தில், 'தன் முகத்தைத் தானே பார்த்துக் கொள்ளாத வரையில் நாரஸிஸ்ஸன் சந்தோஷத்தோடு உயிர் வாழ்வான்,' என்று கூறியிருந்தான்.

அவனைக் கண்ணுற்றதும் எலிகத்திலுள்ள தேவ கன்னிகைகளெல்லாம் அவனைப் பின் தொடரத் துவக்கினார்கள். ஆனால் அவர்களுடைய அழகு அவனுடைய இருதயத்தைத் தொடவில்லை. அவன் அவர்களை லக்ஷியம் செய்ய வேண்டுமே, அது கூட இல்லை.

ஆகையால் ஒவ்வொரு பெண்ணும் தான் வந்த வழியை நோக்கித் திரும்பிவிட்டாள். எதிரொலியாள் மாத்திரம் அவனை விடாமல் தொடர்ந்தே போய்க் கொண்டிருந்தாள். அவளுக்கு அவன் மீது காதல் பிறந்துவிட்டது. ஆனால் அவனிடம் முகத்தைக் காட்டுவதற்கு மாத்திரம் அவளுக்கு வெட்கமாக இருந்தது.

நாரஸிஸ்ஸன் இவை யொன்றையும் கவனிக்கவில்லை. அங்குமிங்கும் தேடியும் தோழரைக்



காணாமையால், "அடே, எங்கடா இருக்கிறாய்?" என்று உரத்துக் கூவினான்.

சற்று தூரத்திலிருந்த எதிரொலியாளும் 'எங்கடா இருக்கிறாய்?' என்று கூவினாள். அவள் காதில் விழும் வார்த்தைகளில் கடைசி வார்த்தையைத் திரும்பக் கூவுதல் அவளுக்கு ஏற்பட்ட சாபமன்றோ?

எதிரொலியாளின் கூச்சலைக் கேட்டதும், தோழர்கள் எங்கேயோ பக்கத்தில்தான் இருக்கிறார்கள் என நினைத்து நாரஸிஸ்ஸன் அங்கேயே நின்று உற்றுக் கேட்டான். ஆனால் வேறு சத்தம் ஒன்றும் கேட்கக் காணோம்.

மறுபடியும் கூவிப் பார்க்கலாம் என்று அவன், "அடே நாரஸிஸ்ஸன் நான்! வனத்திலிருக்கிறேன்!" என்று கூவினான்.

எதிரொலியாள் வாயினின்று, 'அடே நாரஸிஸ்ஸ! நான் வனத்திலிருக்கிறேன்!' என்ற சத்தம் பிறந்தது.

"இங்கே வாயேனடா!" என்றான் நாரஸிஸ்ஸன்.

எதிரொலியாளும், 'இங்கே வாயேனடா!' என்று சொல்லுவதைத் தவிர வேறொன்றும் சொல்ல இயலாதவளாக இருந்தாள்.

தான் கேட்டிராத குரலாக இருக்கிறதே என்று சங்கித்து நாரஸிஸ்ஸன் சுற்றுமுற்றும் பார்த்தான். ஆனால் அவன் கண்ணுக்கு ஒருவரும் அகப்படவில்லை.

"ஏனடா, சமீபத்தில்தான் இருக்கிறாயா?" என்று நாரஸிஸ்ஸன் பின்னும் கூவினான்.

'சமீபத்தில்தான் இருக்கிறேன், ஐயா!' என்று சொல்லுவது போலிருந்தது, எதிரொலியாளின் வாயினின்று வந்த சத்தம்.

ஆனால் எதிரில் ஒருவரையும் காணோம். எதற்கும் சத்தம் வருகிற திசையை நோக்கிப் போய்ப் பார்க்கலாம் என்று நாரஸிஸ்ஸன் மேற் சென்றான். எதிரொலி வெட்கத்தினால் அவனெதிரில் வர விரும்பாமல் தூர தூர ஓடிச் சென்றாள். அவன் கூவும் வார்த்தைகளை யெல்லாம் திருப்பித் திருப்பிச் சொல்லிக்கொண்டே அவள் போகவே, அவனும் விடாமல் தொடர்ந்து சென்றான்.

கடைசியாக ஓர் எரிக்கு அடுத்தாப்போலிருந்த ஒரு மலைக் குகையில் நாரஸிஸ்ஸன் அவளைப் பார்த்துவிட்டான். அவள் கண்களினின்று நீர் பெருகிக்கொண்டிருந்தது. தன் மனதிலுள்ள காதலை வெளியிட முடியவில்லையே என்று அவள் மனது வெடித்துக் கொண்டிருந்தது. ஆனால் அவளைக் கண்டு நாரஸிஸ்ஸனது மனம் லவலேசமும் உருகவில்லை.

"நீ தானே என்னை அழைத்தாய்?" என்று கேட்டான் நாரஸிஸ்ஸன்.

'நீ தானே என்னை அழைத்தாய்?' என்றாள் எதிரொலியாள்.

"நீ யார்?" என்றான் நாரஸிஸ்ஸன்.

எதிரொலியும், 'நீ யார்?' என்றே கூவினாள்.

"நான்தான் முன்னேயே சொன்னேனே, நாரஸிஸ்ஸன்!" என்று நாரஸிஸ்ஸன் மறுமொழி கூறினான்.

'ஏ நாரஸிஸ்ஸன்!' என்றே கூவிக்கொண்டு அவனைக் கெஞ்சி அழைப்பாள் போல அவள் கையை நீட்டினாள்.

நாரஸிஸ்ஸன் கோபித்துக்கொண்டு "நீ யார் தானே? என்னை ஏன் கூப்பிடுகிறாய்?" என்று உரத்துக் கூவினான்.

"என்னை ஏன் கூப்பிடுகிறாய்?' என்ற தொனி தான் எதிரொலியாளின் வாயினின்று வந்தது.

நாரஸிஸ்ஸனுக்குக் கோபம் அதிகமாகிவிட்டது.

"பெண்ணே நீ யாராயிருப்பினும் சரி, எனக்கு இல்லாத பாய்ச்சலெல்லாம் காட்டிவிட்டு என்னைப் பரிகாசமும் செய்கிறாய்!" என்றான்.

அவள் என்ன செய்வாள் பாவம்! அவள் வாயினின்று, 'என்னைப் பரிகாசம் செய்கிறாய்!' என்ற வார்த்தைகள்தாம் வந்தன.

நாரஸிஸ்ஸனுக்குக் கோபம் ஏறிவிட்டது. அவளைத் தூற்றத் துவக்கினான். ஆனால் ஒவ்வொரு வசவும் அவன் சொல்லிய விதமே அவள் வாயினின்று பிறந்தது. கடைசியில் கோபம் தாள மாட்டாமல் அவளை விழித்துப் பார்த்துவிட்டு ஏரிக் கரையிலுள்ள பசும்புல் தரையில் 'நெடுஞ் சாங்கிடையாய்' விழுந்துவிட்டான்.

எதிரொலியாள் அவனைப் பரம துக்கத்தோடு பார்த்துக்கொண்டிருந்தாள். தன் மனதிலுள்ள காதலை அவனிடம் சொல்லவேண்டும் என்று அவளுக்கிருந்த ஆசையை அளவிட முடியாது. ஆனால் பாவி ஏரையின் சாபம் அவளுடைய வாயை அடைத்துவிட்டது. ஆகையால் மனம் பொருமிக்கொண்டு ஒதுங்கிப் போய் ஓர் மரத்தடியில் உட்கார்ந்துகொண்டாள்.

நாரஸிஸ்ஸனுக்குத் தாகம் எடுத்தது. ஏரிக் கரைக்குச் சென்று நீரை அள்ளிக் குடிக்கலாம் என்று போய்க் கரையில் உட்கார்ந்துகொண்டு குனிந்தான். ஏரியின் ஜலம் நிர்மலமாய், நீல வானத்தைப் பிரதிபிம்பித்துக் காட்டிக்கொண்டு பளிங்கு போல் அசைவற்றிருந்தது. [illegible]யில் வானை அளாவி நின்ற மரங்களின் நிழல் நீர்ப்பரப்பில் வெகு அழகாக விளங்கிற்று. அம் மரங்களின் புஷ்பங்களும், கரையோரத்திலிருந்த செடிகளில் பூத்திருந்த மலர்களும் நீரில் தோன்றி, நீரிலேயே பூத்த மலர்களின் எழிலைத் தூக்கிக் காட்டின. மந்தமாருதம் மிருதுவாக வீசிற்று. குயிலொன்று கனிந்த குரலில் கூவிக்கொண்டிருந்தது. அஸ்தமிக்கும் சூரியனுடைய பிரகாசம் மரங்களின் கிளைகளின் வழியே புகுந்து சோலைகளையும் ஏரிக் கரையையும் அழகு படுத்தியது.

நாரஸிஸ்ஸன் குனிந்தானோ இல்லையோ, மகா மோகனமான ஓர் உருவம் அவன் கண்ணிற் பட்டது. அப்படியே பிரமித்துப்போய்விட்டான். அது அவனுடைய பிரதிபிம்பம். ஆனால் அதை யாரோ ஒரு ஸ்திரீ என்று அவன் நினைத்துவிட்டான். அவனுக்குத் தன் பிரதிபிம்பத்தின் மீது காதல் பிறந்துவிட்டது!

பெருமூச்சு விட்டுக்கொண்டு அவ்வுருவத்தை அணைவதற்கென்று நாரஸிஸ்ஸன் தன் கைகளை நீட்டினான். உருவமும் அவன்புறம் கையை நீட்டிற்று. ஜலத்திற்கு மிகவும் நெருங்க முகத்தை வைத்துக்கொண்டு, 'கண்ணே, உன்னைக் காதலிக்கிறேன்,' என்று தன் இனிய குரலில் சொன்னான். சற்று தூரத்தில் உட்கார்ந்திருந்த எதிரொலியாளின் வாய், 'கண்ணே, உன்னைக் காதலிக்கிறேன்,' என்று பிரதித்வனித்தது. நெடுங் காலமாகத் தான் சொல்ல மனம் பொருமி ஆவற்பட்டுக் கொண்டிருந்த வார்த்தைகள் தன் வாயினின்று வந்ததைக் கண்டு எதிரொலியாளும் ஆனந்த பரவசமானாள்.

நிழலும் தன்புறம் நெருங்கி வாயசைப்பதையும், அதன் முகத்திலும் காதலின் லாவண்யம்



பரவி நிற்பதையும் கண்டு ஆனந்தங்கொண்ட நாரஸிஸ்ஸனுக்கு எதிரொலியாளின் வார்த்தைகள் தான் காதல் கொண்ட மங்கையின் மொழிகள் என்றே தோன்றின.

ஆகையால் அவன் அவ்வுருவத்தைக் கட்டி அணையப் போனான். அவன் கை நீரில் பட்டதும் பிரதிபிம்பம் கலைந்து மறைந்து போயிற்று.

காதலி எங்கோ ஓடிவிட்டாளே என்று வருந்திக்கொண்டு நாரஸிஸ்ஸன் சற்றுச் சும்மா இருந்தான். சிறிது நேரத்துக்கெல்லாம் நீர்த் திரை அடங்கிப் பளிங்கு போலத் திகழ்ந்தது. பார்த்தான் நாரஸிஸ்ஸன். முன்மாதிரி ஓடிப்போக விடக்கூடாது என நினைத்து, முன்னினும் அதிக ஜாக்கிரதையாகவும், முகத்தினின்றும் கண்களினின்றும் அன்பு ஒழுகவும், நிழலை நெருங்கி இலக்குப் பார்த்து அதை ஒரே கட்டாய்க் கட்டிக்கொண்டுவிட்டான்.

ஆனால் நிழல் எப்படி அகப்படும்? கையில் ஜலம் தான் அகப்பட்டது.

சற்றுப் பேசாமலிருந்தானானால் மறுபடியும் நிழல் அதி சௌந்தர்ய ரூப லாவண்யத்தோடு வந்து அவன் கண்களைப் பறித்து ஆவியைக் கொள்ளை கொள்ளும். அதைப் பார்க்கப்பார்க்க அவனுடைய காதல் ஜ்வாலைவிட்டுக் கொண்டு எழுந்தது. ஆனால் எத்தனை தடவை முயன்றும் அவன் அதை ஆலிங்கனம் செய்ய முடியவில்லை.

கடைசியாக, இந்தத் தடவை நம் கைக்கு அகப்பட்டால் ஆயிற்று, இல்லையாகில் இங்கே ஏரியினுள்ளே தானே ஒளிந்து கொள்ளுவாள், நாம் குதித்து மூழ்கித் தேடி எப்படியாவது கண்டு பிடித்து விடவேண்டும் என்று நிச்சயித்துக் கொண்டு நீர் நிழல் உருவத்தை அணைவதற்குக் கையை நீட்டினான். வழக்கம்போலவே கை நீரில் பட்டதும் உருவம் மறைந்துவிட்டது. உடனே கீழே குதித்தான். மூழ்கினான். தேடினான். ஆனால் நீர் வாழ் செடிகளின் கொடிகளும் தண்டுகளும்தான் அகப்பட்டனவே யொழிய அவன் தேடிய உருவம் அகப்படவில்லை. மூச்சுத் திணறிப்போய் நாரஸிஸ்ஸன் உயரக் கிளம்பினான். ஆனால் கொடிகள் அவன் காலில் நன்றாகச் சுற்றிக் கொண்டுவிட்டன. நீர் வாழ் மோகினியே அவன் அழகில் ஈடுபட்டு அவனைக் கட்டிக்கொண்டு விடமாட்டேன் என்று விட்டாள். நாரஸிஸ்ஸன் அந்த நிர்மலமான ஏரியில் தன் அழகுக்குத் தானே பலியாகிவிட்டான்.

திரேஸியஸ் சொன்ன வாக்குப் பலித்தது. தன் உருவத்தைப் பார்த்துக்கொள்ளாத வரையில் நாரஸிஸ்ஸன் சுகமாக வாழ்ந்தான்; பார்த்துக் கொண்ட உடன் அவனுக்கு முடிவு வந்துவிட்டது.

இதுவெல்லாம் எதிரொலியாளின் கண்ணெதிரிலேயே நிகழ்ந்தது. அவன் நீரில் விழும் நிமிஷம் வரையில் அவன் இன்னது செய்யப் போகிறானென்று அவளுக்குத் தெரியாது. விழுவதைப் பார்த்ததும் இருந்த இடத்தினின்று ஒரே தாவாய்த் தாவி வந்தாள். ஆனால் அவள் வந்து பிடிக்கு முன் நாரஸிஸ்ஸன் ஏரிக்குள் வீழ்ந்துவிட்டான். அவன் ஏரியினுள்ளே உயிர் விட்டான் என்று தெரிந்ததும் எதிரொலியாள் இடிவிழுந்த மரம் போலச் சாய்ந்துவிட்டாள்.

என்ன செய்வாள், பாவம்! அவள் காதலித்த இளைஞன் அவள் வாயினின்று வந்த வார்த்தைகளாலேயே தூண்டப்பட்டுத் தடாகத்தில் விழுந்து உயிர் துறந்துவிட்டான். அதை நினைக்க நினைக்க அவள் மனம் சண்டமாருதத்தில் பட்ட மரக்கலம் போலச் சுழன்று தவித்தது. மனதிலுள்ள துக்கம் கரை புரண்டு ஓடியது. ஆனால்

67



வாய் விட்டலற அவளுக்குச் சக்தி இல்லை. எரை யின் சாபம் வாயை அடைத்துவிட்டதே, என்ன செய்வாள்? துக்கத்தை வேறொருவரிடம் சொல்லாமற் போனால், அல்லது தனியிடத்தில் சென்று வாயார அலறாமற் போனால் பெண்களது மனம் சாந்தமடைகிறதில்லை. எதிரொலியாளின் மனம் விண்டு போயிற்று. நாஸிஸ்ஸனது கடுமையும் அதற்குத் தான் காரணமாய் நின்றதையும் நினைந்து நினைந்து உருகுவாளாயினள். தன்னை நொந்து கொண்டே அவள் மலைகளிலும் காடுகளிலும் குகைகளிலும் மண்டபங்களிலும் திரியத் திரிய அவளது சரீரம் வெறுங் கிருசமாகப் போய் விட்டது. கடைசியில், அவளது உடல் முற்றிலும் தேய்ந்து போய்விட்டது. ஆனால் இன்றைக்கும் அவள் குகைகளிலும் கிரிகளிலும் அசரீரியாக இருந்துகொண்டு மனிதர் கூவும்போது அவர்கள் சொல்லும் சொற்களையே திருப்பிச் சொல்லிக் கொண்டிருக்கிறாள். அவளது துக்கத்தைக் கண்டு இரங்கி, அவள் விரும்பிய ஒரு வார்த்தை எதாவது ஒன்று சொல்ல அவளுக்குச் சக்தி வரட்டும் என்று எரை தன் சாபத்தைச் சற்று மாற்றிக் கொண்டாள். அது முதல் மனிதர் பேச்சை எதிரொலியாத போதெல்லாம் எதிரொலியாள் நாஸிஸ்ஸ! நாஸிஸ்ஸ!! என்று கதறிக்கொண்டே நிற்கிறாள். இக் கதையைப் பொய்யென்று நினைக்கிறவர்கள் காற்றடிக்கும் போது மரங்களுக் கடியில் நின்றுகொண்டு அங்கு கேட்கும் சத்தம் வேறு எதாவதாக இருக்கிறதா என்று சொல்லட்டும்.

# புஸ்தக விமரிசனம்

(ஜில்லா சரித்திரத் தொகுதி, சென்னை. ஆசிரியர்: ப. வ. ஜகதீச ஐயர். பிரசுரகாரர்: வி. குமாரசாமி நாயுடுவும் குமாரர்களும், சென்னை. விலை ௩ அணா.)

இந்தத் தொகுதியையும், இதன் முதல் பகுதியாகிற சென்னை ஜில்லாவின் சரித்திரத்தையும் நாம் சந்தோஷத்தோடு வரவேற்கிறோம். தென்னாட்டு மக்களுக்கு அவரவர்கள் வசிக்கும் ஜில்லாவின் சரித்திரங்களை ஆரம்பமாகக்கொண்டு தேச சரித்திரத்தைப் போதிக்கவேண்டும் என்பதே இத் தொகுதியின் நோக்கம் என்று ஸ்ரீ சுவாமிக்கண்ணுப் பிள்ளையின் முன்னுரையாலும் நூலாசிரியரது முகவுரையாலும் விளங்குகிறது.

இப் பெரிய நோக்கம் கொண்டு எழுதப்பட்டு வரும் தொகுதி குற்றங்குறைகளற்றதாக இருக்க வேண்டும் என்றே பின் வரும் சில விஷயங்களை எடுத்துக் காட்டுகிறோம்.

நூல்களுக்கு மேலட்டையில் ஆங்கிலத்திலேயே பெயர் முதலிய புத்தகத்தின் சகல செய்திகளும் குறிக்கப்படுவதைப் பல தடவைகளில் பலர் கண்டித்தும் பிரசுரகாரர் அதைக் கவனியாமல் ஆங்கிலத்திலேயே தலைப்புகளை அச்சிட்டு வெளியிட்டு வருவதைக் கண்டு விசனியாமலிருக்க முடியவில்லை. தமிழ் நூல்களில் பக்க எண்கள் அரபி என்று சொல்லப்படுகிற ஐரோப்பிய எண்களாயிருப்பதைப் பார்க்கும் அன்னிய நாட்டினரும், பிற்காலத் தமிழரும் தமிழிற்குச் சொந்தமான அல்லது சொந்தமாய்ப் போய்விட்ட எண்களே இல்லையோ என்று ஐயுறுவார்கள் என்பது அசம்பாவிதமாகுமா?



நூலின் உடலின்கண் முடிகளில் பெயர்களின் ஆங்கில உருவங்களும் மொழிபெயர்ப்புக்களும் இத்தனை அதிகமாகப் போடப்பட்டிருப்பது ரஸமாகத் தோற்றவில்லை. அத்தியாவசியமாக இருப்பின் ஆங்கில உருவங்களையும் மொழிபெயர்ப்புக்களையும் அடிக் குறிப்புகளாகப் போடுவதே உசிதமென்று சொல்லுவோம்.

அச்சுப்பிழை பார்ப்பது ஜாக்கிரதையாகப் பார்க்கப்படவில்லை. பள்ளிக்கூடங்களில் பாடங்களாக வைக்கப்படவேண்டும் என்று கருத்துக்கொண்டு எழுதப்பட்ட நூல்களில் பிழைகள் சிறிதும் இல்லாமலிருக்கவேண்டியது அவசியமாகும். உதாரணமாக, எ-ம் பக்கத்தில் **Asafgah, நைஸாம் உல்லக்** என்ற பெயர்களும், கக-ம் பக்கத்தில் **மிர்ஸா பாஜங்** என்ற பெயரும், ௬௦-ம் பக்கத்தில் **நிரக்ஷரத்திற்கு** என்ற வார்த்தையும், ௬க-ம் பக்கத்தில் **அந்தரிஷ** என்ற வார்த்தையும், பிழையாக அச்சிடப்பட்டிருக்கின்றன. சிறு மாணவர்க்காகப் புத்தகங்கள் வெளியிடும் பதிப்பாளர் தாங்கள் பதிக்கும் நூல்களில் இன்னோரன்ன பிழைகள் இராதபடி பார்த்துக்கொள்ள வேண்டிய தவசியம்.

தற்கால சென்னையில் நாம் அறிந்து கொள்ள விரும்பக் கூடிய செய்திகளனைத்தையும் இந் நூல் அறிவிக்கிறது. சென்னைக்கு அழியாப் புகழ் தந்திருக்கிற திருவள்ளுவரைப் பற்றிய செய்திகளும் முதலாழ்வார்களைப்பற்றிய செய்திகளும் இந் நூலில் வந்திருப்பின் விசேஷமாக இருந்திருக்கும். அடுத்த பதிப்பில் இக் குறைகளெல்லாம் நீங்கி இந் நூல் மாணவருக்கும் பிறருக்கும் பெரிதும் பயன் தரும் என எதிர்பார்க்கிறோம்.

(பௌராணிக இந்தியா என்னும் பழைய ருசு தேசங்கள். ஆசிரியர்: ப. வ. ஜகதீச ஐயர். பிரசுரகாரர்: பி. ர. ராமஐயர், சென்னை. ௨ பாகங்கள்: விலை பாகம் க-க்கு க௨ அணா.)

இந் நூலிலும் முன் சொல்லிய நூலிற் காட்டியதுபோலத் தலைப்புப் பெயரும் பக்க எண்களும் ஆங்கிலத்திலேயே இருக்கின்றன என்று குறிக்க வேண்டியிருக்கிறது. அது ஓர் புறம் இருக்க, ஐம்பத்தாறு தேசங்கள் என்று நமது புராணங்களில் வரும் நாடுகள் எங்கெங்கே இருந்தன என்று அறிந்து கொள்வது துர்லபமாக இருக்கும் இந் நாளிலே இப் புத்தகம் கற்றோருக்கும் மற்றோருக்கும் மிகவும் பயன்படுவதாகும். இதைப் படித்தால் மனிதர் பஞ்சாபு நாட்டைப் பாஞ்சாலம் என்று குறிப்பது போன்ற அபத்தங்களை எழுத மாட்டார்கள் என்பது திண்ணம். அனேக புத்தகங்களைப் பொறுமையுடனும் சிரத்தையுடனும் படித்தபிறகு வந்திருக்கும் முடிவையே ஆசிரியர் இந் நூலில் குறித்திருக்கிறார். இன்னும் பல நூல்களைப் படித்தால் இம் முடிவை மாற்ற வேண்டியிருக்கும் என்று ஆசிரியரே அபிப்பிராயப்பட்டிருக்கிறார். அவ்வாறு அவர் மாற்றியிருப்பின் அவரது புதிய முடிவுகளைத் தமிழ் நாட்டுக்குச் சீக்கிரம் உதவுவார் என நம்புகிறோம்.

# ஆலோகன அவலோகனம்

## "பால பாரதி"யின் அட்டைப் படம்

சந்தாதாரர்களுக்கு நாம் "பால பாரதி"யை ஒழுங்காகத் தபாலில் போட்டு வந்தும், சஞ்சிகைகள் வந்து சேரவில்லை என்று வரும் கடிதங்கள் அதிகப்பட்டுக் கொண்டிருக்கின்றன. "பாரதி"யின் வெளி யட்டையே அது சந்தாதாரருக்கு ஒழுங்காகச் சேருவதற்கு இடையூறாக இருக்கிறது என்று நினைக்கப் பல காரணங்களிருக்கின்றன. அதன் மழமழப்புக் காகிதத்தாலும் படத்தினாலும் ஆகருஷிக்கப்பட்டுச் சில ரஸிகர் அதனைச் சொந்தக்காரருக்குச் சேராமல் செய்துவிடுகிறார்கள் என்று அறிகிறோம். ஆகலால் இச் சஞ்சிகை முதற்கொண்டு நமது "பாரதி"க்குப் படமில்லாத அட்டையே போட்டு அனுப்புகிறோம். இனி "பாரதி" சேரவில்லை என்ற முறையீடுகள் வாரா என நம்புகிறோம்.

## ஒரு சிறந்த கதர்த் தொண்டர்

சென்ற நான்கு ஆண்டுகளாகக் கதர் அபிவிருத்தி செய்வதிலேயே தன் காலத்தைச் செலுத்துவரும் இராஜபாளையம் ஸ்ரீ இ. பூ. அரங்கசாமி ராஜா அவர்களைத் தமிழுலகு நன்கு அறியும். உறுதியும் நேர்த்தியுமான கதர் ஆடைகள் அவர் முயற்சியால் இராஜபாளையத்தினின்று தமிழ் நாடெங்கும் பரவி வந்ததையும் நேயர் அறிவர். இன்னும் நமது மக்கள் கதரின் சிறப்பை மதியாததாலும், நமது நாட்டின் அடிமைச் சுழி மாற இன்னும் நற்காலம் கிட்டாமையாலும், நமது கதர்த் தொண்டரிடமும் இதர வியாபாரிகளிடமும் ௧௨,௦௦௦ ரூபாய் பெறுமான ஆடைகள் விற்காமலிருக்கின்றன. அன்னாரை நம்பி நூற்று வந்த ௭௦௦ ஏழைகளின் நூலை வாங்கக் கையில் பணமில்லாததால் ஸ்ரீமான் அரங்கஸ்வாமி ராஜா தவிக்கிறார். கதர்சபையை எதிர் பார்த்தும் காரியம் ஆகவில்லை. ஏழைகளுக்கு இரங்கித் தமிழர் எவரும்முன் வரவில்லை. ஏழைகள், கதர் உற்பத்திக் காரியத்தில் முதல் முதல் இறங்கினவரான ஸ்ரீமான் ராஜாவின் முகத்தைப் பார்த்தனர். ஸ்ரீமான் ராஜா தமிழ் நாட்டை எதிர்பார்த்தார். தமிழ் நாடு ஆதரிக்கவில்லை. ஆதலின் ஆண்டவனிடம் தன் குறையை அறிவிப்பதே நெறியெனை இரண்டு வாரங்கள் ஒரு வேளை விரதக்கோடிருந்தார். ௯—௫—௨௫முதல் உண்ணா விரதத்தை மேற்கொண்டார். ஏழைகளிடம் இப் பெரியோருக்கு எத்துணைப் பரிவு! கதரிடம் எத்துணை உறுதி! நாட்டிடம் எவ்வளவு அன்பு!

கடவுள் மனமிரங்கவே, இப்போது கதர்சபை இவருடைய ஆடைகளையும், ஏழைகளின் நூலையும் வாங்க முன் வந்திருக்கிறதெனக் கேட்டு ஆறுதலடைகிறோம். கதர் சபையின் இச் செயலைப் பெரிதும் போற்றுகிறோம். இனிமேலாயினும் கதரை அணிந்து பரப்பும்படி தமிழரை வேண்டுகிறோம். ஸ்ரீமான் அரங்கசாமி ராஜா அவர்கள் இனிக் கடவுளின் மேல் பாரத்தைப் போட்டுத் தன் கதர் முயற்சியை இரட்டை ஊக்கத்துடன் செய்வார் என நம்புகிறோம்.

## ரிப்பியரும் பிரெஞ்சுக்காரரும்

மொரோக்கோவில் காஜி அப்துல் கரீம் இஸ்பானியருக்கு விரோதமாகச் செய்துவரும் சுதந்திரப் போரைப் பற்றி நேயர் அறிவர். ஓர் காலத்தில் இஸ்பானியா முழுவதும் ஸாரஸேனரின் ஆட்சியின் கீழ் இருந்தது. ௮௦௦ வருஷம் இந்த ஸாரஸேனர் இஸ்பானியாவில் ஆட்சி புரிந்து வந்தார்கள். அக் காலத்தில் அவர்கள் நாகரீக வளர்ச்சிக்காகவும் இலக்கிய வளர்ச்சிக்காகவும் பௌதிக சாஸ்திர ஆராய்ச்சிக்காகவும் செய்துள்ள வேலை அபாரமானது. ஆனால் வேற்று நாடுகளை வென்று அரசாளுகிற ஒவ்வொரு ஜாதியும் காலக்கிரமத்தில் அவ்வந் நாடுகளினின்று துரத்தப்பட்டே விடுகிறார்கள். இந்த உலக விதியின்படி ஸாரஸேனர் இஸ்பானியரின் தாக்குதல்களுக்கு அடி அடியாய்ப் பின்னிடைந்து வந்து கடைசியில் இஸ்பானியாவை விட்டுத் தங்கள் பூர்வீக பூமியான மொரோக்கோவுக்கே திரும்பி விட்டார்கள். யந்திர யுகம் தோன்றுகிற வரையில் அவர்களது எல்லையில் ஐரோப்பியர் கால் வைக்க இயலாதது மாத்திரமில்லை, அவர்களைக் கண்டு நடுங்கியே வந்தனர். ஆனால் இங்கிலாந்திலும் பிரான்ஸிலும் அறிவு விரிவுபாட்டினால் தோன்றிய யந்திரத் தேர்ச்சி ஐரோப்பாவிலுள்ள மற்றைய நாடுகளிலும் பரவவே, அறிவின் கூர்மையோடும் தந்திர சாமர்த்தியங்களோடும் கலந்த தேகபலத்துக்கும் தைரியத்துக்கும் எதிரே அவ் அறிவுப் பயிர்ச்சியோடு கலவாத பலமும் தைரியமும் பின்வாங்கவேண்டி வந்துவிட்டது. ஆகலால் மொரோக்கோவின் கரை யோரங்களெல்லாம் இஸ்பானியரின் கையில் சேர்ந்துவிட்டன. ஆனால் மோரியர் நமக்கு இவ்வளவுதான் கிஸ்மத் என்று சொல்லிக்கொண்டு சும்மா இருக்கவில்லை. இஸ்பானியாவுக்கு விரோதமாக இடைவிடாமல் ஒரு மோரியன் இல்லாவிடில் இன்னொரு மோரியன் கொடியை உயர்த்திக்கொண்டே வந்திருக்கிறான். ஆகவே மொரோக்கோவில் இஸ்பானியர் குண்டூசி குத்திய நாற்காலியில் உட்காருகிற உபாத்தியாயரின் நிலைமையில்தான் இருந்து வந்தனர். மகா யுத்தத்தால் உலகத்தில் பரவிய சுதந்திரக் காற்றும் சேரவே ரிப்பியர் என்று இக் காலத்தில் அழைக்கப்படும் மோரியர் வெகு மும்முரமாய் இஸ்பானியரைத் தாக்க ஆரம்பித்தனர். பத்து வருஷ காலமாகப் போராடியதின் பயனாக இன்று அப்துல் கரீம் காஜியின் தலைமையின் கீழ் மோரியர் இஸ்பானியரைக் கடற்கரையை நோக்கி விரட்டிவிட்டனர். ஆனால் சென்ற மாசி மாதத்தில் நாம் சந்தேகப்பட்டது ஒரு பகுதிக்கு உறுதியாகிவிட்டது. பிரெஞ்சுக்காரர் அறுபதினாயிரம் சிப்பாய்களைத் திரட்டி அப்துல் கரீமை வலது பாரிசத்தில் தாக்கத் தலைப்பட்டுள்ளார்கள். ரிப்பியர் இஸ்பானியரை வென்றுவிட்டால் தங்கள் கீழுள்ள அல்ஜீரியருக்குச் சுதந்திரப் பிரியமும் தைரியமும் மறுபடி பிறந்துவிடும் என்று பயந்தும், இஸ்பானியர் விழுங்க முடியாமல் கக்கிக்கொண்டு வருகிற மொரோக்கோவைத் தாங்கள் விழுங்க வேண்டும் என்கிற கருத்துக்கொண்டுமே பிரெஞ்சுக்காரர் பெருங் கடனாளிகளாக இருந்தும், இவ்வளவு பெரிய சைனியத்துடன் வந்து மோரியரைத் தாக்குகின்றார்கள். ஆனால் மோரியர் இன்று ஆயுதத்தைக் கையாளும் வழிகளில் முன்னைவிட அதிகம் தேறியிருக்கிறார்கள். தவிர,

> சிறை நலனும் சீரும் இலர் எனினும் மாந்தர்
> உறை நிலத்தோடு ஒட்டல் அரிது. *
> சிறு படையான் செல்லிடம் சேரின், உறுபடையான்
> ஊக்கம் அழிந்துவிடும். †

ஆகையால் ரிப்பியர் இந்தப் புதிய அபாயத்தினின்றும் தப்பி விடுவார்கள் என நம்புவோம்.

## ஹிந்தென்பர்க்கு

ஜெர்மனியில் குடியரசுத் தலைவன் தேர்தல் நிகழ்ந்ததில் ஒன்றரைக் கோடி வாக்காளரின் வாக்குப்படி போன் ஹிந்தென்பர்க்கு தலைவனாகத் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார். பத்து வருஷங்களுக்கு முன், தினம் காலமே பத்திரிகைகள் வந்தவுடன் சாப்பாட்டு நேரத்தைக்கூட மறந்து, அவற்றின் பத்திகளை ஒரு வரிகூட விடாமல் வெகு அக்கறையுடனும் பரபரப்புடனும் படித்து வந்தவர்களுக்கு இவருடைய யுத்த சாஸ்திரத் திறமையைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. கரை புரண்டு ஓடிவரும் சமுத்திர வெள்ளத்தைப் போலவும் கிளேஸியர் என்று சொல்லப்படுகிற பயங்கரமான பனிப் பாளங்களைப் போலவும் ஜெர்மனி மீது எறி வந்த ருஷியச் சைனிய வெள்ளத்தை இவர் மெஜூரிய ஏரிகளின் கரையிலும் தன்னன்பூர்கிலும் தேக்கி நிறுத்தி ஜெர்மனிக்குப் புறங்கொடைகாத்து நின்றார். எந்த எந்த இடங்களிலெல்லாம்; இதர சேனாபதிகள் பின்வாங்கி வருவார்களோ அந்த அந்த இடங்களுக்கு இவரையே கைஸர் அனுப்புவது வழக்கமாக இருந்தது. கடைசியில் சைனிய மனைத்துக்கும் இவர் பரம சேனாதிபதியாகவும் நியமிக்கப்பட்டார். ஆனால் யுத்தத்தில் இனி ஜெர்மனியால் வெல்ல முடியாது என்று கண்டதும், இவர் வீம்புபிடியாமல் அமெரிக்காவின் மத்தியஸ்தத்தை ஏற்

---

* பலமாவது அரணாவது இல்லாமற் போனாலும் ஒரு கூட்டத்தார் தங்கள் சொந்த தேசத்தில் போர்செய்யும் போது அவர்களை வெல்லுதல் அரிது.

† சிறு படையை உடைய ஒருவன் அரணுள்ள இடத்தைச் சேர்ந்து போர் புரிந்தால் பலமுள்ள எதிரியும் அவனை வெல்லுதல் சாத்தியமில்லை.

றுக்கொள்ள வேண்டியது என்று அபிப்பிராயம் கொடுத்து ஜெர்மனிக்குள் சத்துருக்களின் பிரவேசம் நிகழாதபடி பார்த்துக்கொண்டார்.

இவ்வளவு பெரிய சாம்பராயிக ஞானமும், சலியாமை யும்; ஜாதியின் க்ஷேமத்தைப் பலி கொடுத்தால்தான் பணியாத சேனாபதி என்ற பேரை நிலை நிறுத்திக்கொள்ளலாம் என்ற நிலைமை வந்துவிட்டபோது தன் தனிப் புகழை அலக்ஷியம் செய்து ஜாதியின் நலனையே போற்றத் துணியும் திதிக்ஷையும், வாய்ந்தவராயிருந்தும் ராஷ்டிரமாகிற கப்பலில் சுங்கான் பிடிக்கும சாமர்த்தியம் அவருக்கு இருக்கிறதோ என்று காலம்தான் காட்ட வேண்டும். ஆனால் ஜெர்மனியில் பெரும்பான்மையோருக்கு அவரிடம் அன்பும் மதிப்பும் இருக்கிறது என்று இந்தச் சீட்டின் விளைவு காட்டியிருக்கிறது. பொது உடைமைக் கக்ஷியார் மாத்திரம் அவருக்குத் தலைமைப் பதவி கிடைத்ததைப் பற்றி வருத்தம் காட்டுகிறார்கள். ஏனெனில் அவருக்குக் கைஸரிடம் அன்பு உண்டென்றும், அவ் அன்பு காரணம்பற்றி அவரை மறுபடியும் அரசனாக்கிவிடப் பிரயத்தனப்படுவார் என்றும் அவர்களுக்குப் பெரியதோர் சந்தேகம் உண்டு. அச் சந்தேகத்துக்கு ஆதாரம் இருப்பின் ஜெர்மனியிலும் ஐரோப்பாவிலும், அது காரணமாக உலகத்திலும், பிரமாத குழப்பங்கள் வரும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. ஏற்கெனவே பிரான்ஸிலும் இங்கிலாந்திலும் இவர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டதைப் பற்றிப் பத்திரிகைகளும் ராஜ தந்திரிகளும் காய்ந்துகொண்டிருக்கின்றனர். ஹிண்டென்புர்க்கு ஜெர்மனியின் உண்மையான நன்மையையே நாடுகிறவராக இருந்தால் அந் நாட்டை ராஜ ராஷ்டிரமாக மாற்றப் பிரயத்தனப் படுவதாகச் சிறிதேனும் ஐயமுற இடந்தரக்கூடாது. அவருடைய ராஜதந்திரச் செயல்கள் ஒவ்வொன்றையும் உலகம் வெகு நுட்பமாகக் கவனித்து வரும் என்பதை உணர்ந்து அவர் தேச க்ஷேமம் ஒன்றையே நாடி உழைத்து வருவார் என்று எதிர் பார்க்கிறோம்.

## ஸ்வர்க்கவாசி ஸர் பிட்டி தியாகராஜ செட்டியார்

இப் பெரியார் இம் மாதம் ௨௮உ, சூரியமானப்படி தான் பிறந்த தினத்தன்று, இந் நிலவுலகத்தை நீத்து விட்டார். சென்னை நகரில் பொது ஊழியம் செய்து கீர்த்தி பெற்றவர்களில் இவர் சிறந்தவராக விளங்கினார். தேவாங்க குலத்தில் ௧௮௫௨ வருஷத்தில் பிறந்த இவர் கைத்தறிச் சாலை ஒன்று வைத்து நெடுங் காலம் நடத்தி வந்தார். ஆங்கிலத்தில் பி. ஏ. பரீக்ஷை தேறிய பிறகும் இவர் கைத்தொழில் அபிவிருத்தியில் இறங்கியதை நம்மவர்கள் ஓர் சிறந்த உதாரணமாகக் கொள்ளவேண்டியது அவசியம். இது தவிர இவர் தேச சபையிலும் நகர சபையிலும் சேர்ந்து பொது ஜனசேவை பெரிதும் செய்திருக்கிறார். சரீரத்தில் திடம் குன்றுகிற வரையில் இவர் சென்னை நகர சபைத் தலைவராக இருந்து நகர காரியங்களைக் கண்ணுங் கருத்துமாகப் பார்த்து வந்தார்.

மான்டேகு—செம்ஸ்போர்டு "சீர்திருத்த"ங்கள் யோசனையிலிருந்தபோது இவரும் டி. மாதவ நாயரும் சேர்ந்து செய்த பிராமணேதரக் கிளர்ச்சி நம் நாட்டு எதிரிகளுக்குத்தான் அனுகூலமாயிற்று என்று நாம் குறிப்பிடாதிருக்க முடியவில்லை. நமக்குள் பிரிவினைகளை எவ்வாறு உண்டாக்கி வளர்க்கலாம் என்று ஆய்ந்து கொண்டிருந்த அதிகாரிகளுக்கு, தமிழ் நாட்டில் இவ் ஆந்திரரும் மலையாளியும் சேர்ந்து உண்டாக்கிய பிளவுகள் புதையல் கண்டெடுத்த தனம் போலாகிவிட்டன. தமிழ் ராஜ தந்திர உலகத்தில் பரஸ்பர துவேஷமும் அவநம்பிக்கையும் தோன்றி ஓர் ஐந்தாறு வருஷ காலத்துக்கு நமது ராஜீய வளர்ச்சியைத் தடைப்படுத்தியிருப்பதல்லாமல், இப்பொழுது புதிதாகக் கிளைத்திருக்கிற வகுப்புத் துவேஷத்துக்கும் விதைபோட்டு வைத்துவிட்டன. ஸ்ரீமான் செட்டியார் தமது அபாரமான ஊக்கத்தையும் செல்வாக்கையும் ஜாதீய வளர்ச்சிக்குச் சாதகமாகப் பிரயோகித்து உதவி மறுத்தல் தர்மத்தைக் கைக்கொண்டிருந்தாரானால் இன்று நாம் சுதந்திரத்தைப் பெறும் நாள் மிகவும் நெருங்கியிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இருப்பினும் தென்னாட்டுப் பிராமணேதரர் மனதில் தன்னம்பிக்கையை வளரச் செய்து வைத்தது இவருடைய புகழாகும். அதனோடு சேர்ந்து வந்திருக்கும் உத்தியோகப் பற்றும் வகுப்புத் துவேஷமும் மறைந்து விட்டதானால் இத் தன்னம்பிக்கை ஜாதியின் உன்னதிக்குப் பெரிதும் பயன் படுமாதலால் அதனோடு



அவருக்குக் கடப்பாடுடையதாகவே இருக்கிறது. தவிர முதிர்ந்த வயதில் மரணப் படுக்கையில் படுக்கிற வரையில் தனக்குச் சரி என்று தோன்றிய வழிகளில் ஜன ஊழியம் செய்வதற்குப்பின்வாங்காமலிருந்து ஸ்ரீசெட்டியார்பிற்காலத்தவருக்குச்சிறந்ததோர்வழிகாட்டியாகவும் விளங்குகிறார். அவரது ஆத்மா சாந்தத்தைப் பெறுக. அவரது குடும்பத்தினருக்கு நமது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

## மகாராஷ்டிர மகா நாடு

இம் மகாநாடு நூல் சந்தாவை ரத்து செய்துவிட வேண்டும் என்று செய்துள்ள தீர்மானம் அனைவரும் எதிர்பார்த்ததே. ஆனால் மகா நாட்டின் தலைவர் எழுந்திருந்து தம் ஸ்தானத்தின் உத்தரவாதத்தைக் கூட மதியாமல் மகாத்மா காந்தி தேச சபையை விட்டே நீங்க வேண்டும் என்று கூறிய கூற்றை யாரும் எதிர்பார்த்திருக்கமாட்டார்கள். பாரத நாட்டில் ஜனங்களுக்குள் ஸ்வராஜ்ய எண்ணங்களைச் சர்வசாமானியமாக ஆக்கிய மகாத்மா காந்திக்குத் தேச சபையில் ஸ்தானம் இல்லையானால் அப் பேர்ப்பட்ட தேசசபை நாட்டுக்கு என்ன பயனை அளிக்க முடியும்? ஆனால் தேசமுகரின் வார்த்தையினால் மகாத்மாவின் கௌரவம் ஒன்றும் குறையப் போவதில்லை. தேசமுகர்தான் தன் அக்கிராஸனஸ்தானத்துக்கு ஓர் கெட்டபெயர் சம்பாதித்து வைத்துக் கொண்டுவிட்டார்.

## தமிழ்க் குரு குலம்

(ஆசாரியர் தி. ரா. மஹாதேவையர் எழுதுகிறார்)

தமிழ்க் குரு குல வித்தியாலயத்தில் சாப்பாடு சம்பந்தமாக அனுஷ்டிக்கப்பட்டுவந்த நடுநிலையான முறையைப் பற்றி ஸ்ரீ வ. வெ. ஸு. ஐயர் எழுதியது 'பாலபாரதி'யின் சென்ற கார்த்திகை மாதப் பகுதியின் ௩௪-வது பக்கத்தில் வெளிவந்திருக்கிறது. அதன் பின்பும் ஒரு சாரார் அது விஷயமாய்க் கிளர்ச்சி செய்து வந்தார்கள். அதன் மேல் உண்பதைக் குறித்து மஹாத்மா காந்தி யவர்கள் தரும் அபிப்பிராயம் எதுவோ அதைத் தழுவி நடப்பதாகக் குருகுல நிர்வாகிகள் ஒப்புக்கொண்டார்கள். மஹாத்மாஜி சென்ற பங்குனி ௧௯ உயில் சென்னையில் எல்லா அபிப்பிராயங்களையும் கலந்துகொண்டு குருகுலத்தில் உண்ணவேண்டிய முறையைப்பற்றித் தம் அபிப்பிராயத்தை எழுதி ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடுவிடம் கொடுத்தார்கள். மஹாத்மாவின் அநுமதியுடன் ஸ்ரீமான் வ. வெ. ஸு. ஐயர் அதற்கு ஓர் நகல் எடுத்துக்கொண்டு அதைத் தழுவியே குருகுலத்திற்கு ஓர் விதியும் ஏற்படுத்தினார்கள். அதாவது குருகுலவாசம் செய்கிற பிரம்மசாரிகள் ஒரே வரிசையிலிருந்து உண்ணவேண்டும். சமையல் செய்வது பிராம்மணராயிருக்க வேண்டும்; அபூர்வமான சந்தர்ப்பங்களில் வெளியில் வசித்து வரும் மாணவர்களைப் பள்ளிக்கூடத்தில் சேர்த்துக் கொள்ளலாம்; ஆனால் அவர்களுக்கு ஆகாரசம்பந்தமாக எவ்வித பிரத்யேக ஏற்பாடும் குருகுல நிர்வாகிகள் செய்துதரக்கூடாது, என்பதேயாம்; ஏற்கெனவே தனித்துண்ண அனுமதிபெற்றிருக்கிற இரண்டு மாணவர்கள் தவிர மற்றெல்லோரும் வழக்கம்போல இங்கே ஒரே வரிசையாக இருந்தே போஜனம் செய்து வருகிறார்கள். உடனுண்ணச் சம்மதியாத மாணவரைக் குருகுலத்தில் சேர்த்துக்கொள்வதில்லை என்று செய்திருக்கிற விதியை தினசரிப் பத்திரிகைகளி லெல்லாம் வெளியிட்டிருப்பதோடு, நமது 'பாலபாரதி'யின் சென்ற சித்திரைப் பகுதியின் ரு௩-ரு௪ பக்கங்களிலும் விருத்தாந்தங்களனைத்தையும் சுருக்கமாகப் பிரசுரித்திருக்கிறோம். என்றாலும் அதை அறியாமலோ அறிந்தோ குருகுலத்தைத்தாக்குவோர் மஹாத்மா கைப்படச்சென்னையில் எழுதித் தந்ததையும் வெளிப்படுத்தாமல் வைத்துக் கொண்டு, நாங்கள் மஹாத்மாவின் அபிப்பிராயத்தைத் தழுவி நடக்கவில்லை என்று வீண் பழி கூறிப் பணத்தை வாபீஸ் செய்யவேண்டுமென்று கிளர்ச்சி செய்து, அதற்குத் தமிழ் நாட்டுக் காங்கிரஸ் கமிட்டியின் ஆதரவையும் தேடினார்கள். ஆனால் அது கைகூடாமல் போயிற்று.

எல்லா சமாசாரப்பத்திரிகைகளையும் பார்த்து உண்மையைத் தெரிந்து கொள்ளமுடியாமலிருக்கும் தூர தேசத்து அபிமானிகள் உண்மையை உள்ளவாறுஉணர முடியாமையால், மஹாத்மா அவர்கள் சென்னையில் எழுதிக் கொடுத்த அவரது அபிப்பிராயத்தை ஸ்ரீ வரதராஜுலு நாயுடு அப்படியே புகைப்படம் எடுத்துப் பிரசுரம் செய்யவேண்டுமென்று பகிரங்கமாய் எழுதியுள்

னோம். ஆனால் அவர் இதுவரை அங்ஙனம் செய்ய வில்லை. இந்தச் சந்தர்ப்பங்களில் நாங்கள் மஹாத்மா வின் அபிப்பிராயத்தைப் புறக்கணித்துவிட்டோம் என்று சொல்லிக்கொண்டு செய்யும் கிளர்ச்சிக்கு யாதொரு ஆதாரமும் இல்லையென்பதை பொதுஜனங் களுக்கு வினய பூர்வமாய்த் தெரிவித்துக் கொள்ளு கிறோம். இந்த ஆதாரமற்ற கிளர்ச்சியை நம்பி, குரு குலத்தைப்பாதிக்குங்காரியங்களில்தலைப் படாமலிருக் கும்படி அன்பர்களை வேண்டிக்கொள்வோம்.

## தமிழரின் புராதன வாசஸ்தலம்

அஸ்ஸிரியா பாபிலோனியா முதலிய பிரதேசங்களில் பூமியைத்தோண்டி ஆராய்ச்சிகள் செய்துவரும் ஸாய்ஸ் என்னும் பண்டிதர் அங்கே அகப்படும் பாத்திரங்கள், ஆயுதங்கள், சமாதிகள் முதலியவற்றினின்று அங்கு அனேக ஆயிர வருஷங்களுக்கு முன்னே வசித்த ஜாதி யாரான ஸுமேரியருக்கும் திராவிடர்களுக்கும் நெருங் கிய சம்பந்தம் இருந்திருக்கவேண்டும் என்று ஊகிக்கி றார். இவ் ஊகம் உண்மையாயின் நம் நாட்டுச் சரித் திரத்தில் ஓர் ருசியான பாகம் மறதி என்னும் அந்த கார உலகத்தினின்று காப்பாற்றப் பட்டதாகும். திரா விடர் இந்தியாவில் தோன்றி வெளி நாடுகளில் குடியேறி னார்களா, அல்லது வெளி நாடுகளினின்று இங்குவந்து குடியேறினார்களா என்ற கேள்விகளை நிர்ணயிக்க இந்தப் புதையல்களும் ஓர் மட்டுக்கு உதவி புரியும் என்பதில் ஐயமில்லை. இவ்வாராய்ச்சியின் பரிணா மத்தை ஆவலோடு பார்த்திருப்போம். தமிழரில் தன வந்தர் இவ் வாராய்ச்சி நடைபெறும் ஸ்தலங்களுக்குத் தமிழில் தேர்ந்த ஆராய்ச்சியாளரை அனுப்பினவு பெரு நன்மை செய்தவராவர்.

## டரிதுபூர் மகாநாடு

பரிதுபூரில் ஸ்ரீ சித்தரஞ்சனதாஸ் செய்தள ராசனப் பிரசங்கத்தைச் சில பத்திரிகைகளும் பி களும் கண்டித்து எழுதுகிறார்கள். ஆனா யோசித்துப்பார்த்தால் அப் பிரசங்கத்தில் கண் தகுந்த விஷயம் ஒன்றுமில்லை என்றே தோ போராடுவோர் ஒருவருக்கொருவர் கலந்து கூடாது என்ற ஓர் எண்ணம் ஜனங்கள் மனதை நாட்களாகத் துன்புறுத்திவருகிறது. எதிரியே நேருக்கு நேராய் நின்று பேசுவதற்குப் பலசாலிக முதலும் தயாராக இருக்கவேண்டும். எதிரியோடு பேசுவதற்குக் கூட நமக்கு இஷ்டமில்லை யெ நடக்கும் போராட்டத்தை நிறுத்துவதற்குப் பே றைத்தவிர வேறு ஒரு மார்க்கமுமில்லை என்று லுவது போலாகும். போர் செய்துதான் இ சுதந்திரத்தைப் பெறலாகும் என்று சொல்லு தொகை இப்பொழுது மிகவும் குறைந்திருக் இங்கு அவ் அபிப்பிராயத்தைப் பற்றி வாதித்தல் வசியம். போரைப்பற்றி வாதிக்கத் தயாராக இ வர்கள்தாம் ராஜதந்திர கூட்டங்களில் பிர களாகச் சேர்ந்து தீர்மானங்கள் செய்கிறார்கள் தகைய கூட்டத்தினர் அரசாங்கத்தோடு எவ் வி ணத்துக்கும் பேசக்கூடாது என்று சொல்லுவது யமாகாது. ஆகையால் ஸ்ரீ தாஸ் அரசாங்கத் சமாதானம் செய்து கொள்ளுவதைப் பற்றிப்பே என்ற காரணம் பற்றி அவரைக் கண்டிக்கல் மு காது என்று சொல்லுவோம்.

# சிறந்த தமிழ் நூல்கள்!

## பாரதநாட்டின் நிலைமை

பொன்விளையும் பூமியெனவும், கற்பக நாடெனவும் புகழ்ப்பெற்று பலவகை ஏற்றமும் இயற்கை வளமும் வாய்ந்த நம் நாடு இக்காலத் திலே சிறும்சிறப்பு மற்று, பரிகாசத்துக்கிடமாய் விட்டது ஒருபுறமிருக்க, உலகினைத்திற்கும்உண வளித்த நாமவர் புசிக்க வகையின்றியும் கூலிக்கு வேலை யின்றியும் கூக்குர லிடும்படியான நிலைமை நேர்ந்திருக்கிறது. இத்தகைய இழி நிலைமைக்குக் காரணம் யாதென்பதற்குள்ள விவரங்களையும், இழி நிலையை நீக்கி, முன்போல் உயர் பதம் பெற்று ஒப்புயர்வற்று வாழ்வதற்கான வழிகளை யும், இச்சிறு நூலிலே பாக்கக் காணலாம். ராஜீய விஷயத்தில் உயர் நிலைமை பெய்துமுன், செல்வ நிலையில் உயர்நிலை எய்த முனைய வேண்டும். ஆதலின் தேசச் செல்வ நிலையை நம் சிறுவரும் சிறுமியரும் ஜன சமூகத்தினரும் நன்குணர்ந்து தேசத்தொழிலைவிருத்திசெய்து,வியாபாரத்தைப் பெருக்கி செல்வச் சிறப்புற்று சுக வாழ்வு வாழ் வதற்கான காரியங்களில் முனைய வேண்டும் என்பதே இந்நூலின் நோக்கமாகும்.

விலை ரூ க—0—0

## மகாத்மா காந்தியின் சிறைச்சாலை அனுபவங்கள்

தென்னாபிரிக்காவிலே நம்மவருக்காகப் போராடி சிறைச்சாலையை தேசாபிமான தவச் சாலையாகக்கொண்டு அரும்பாடுபட்டும் உள்ளஞ் சலியாது சாத்விக எதிர்ப்பையே சாதனமாகக் கொண்டு, தேசாபிமான தத்துவங்களை மகாத்மா விளக்கிக் கூறியிருக்கும் அரிய நூலின் தமிழ் மொழி பெயர்ப்பு. எளிய இனிய நடையில் அவராலே கூறப்பட்டவாறு எழுதப்பெற்றது.

விலை ரூ 0—அ—6

## சிலப்பதிகாரக் கதை

செந்தமிழ்ப் பெருங்காப்பியம் ஐந்தினுள் ஒன்றாக விளங்கும் சிலப்பதிகாரம் என்னும் பழைய நூல் காவிரிப்பூம்பட்டினத்து வணிக னாகிய கோவலன் அவன் மனைவி கண்ணகி என் னுமிவர்கள் சரித்திரத்தை விரித்துக் கூறும் அழகிய நூலாகும். அரசர் தமது நீதியில் சிறிது தவறினும் உயிர் வாழா ரென்பதையும், கற் புடைய மகளிரை மக்களே யன்றித் தேவரும் முனிவரும் கைதொழு தேத்துவ ரென்பதையும் முன்னர் செய்த இரு வினையும் செய்த முறையே செய்தோனை நாடிவந்து பின்னர் உருக்கொண்டு நின்று நுகர்விக்கு மென்பதையும், யாவரு மகிழ்த் துய்யக் கருதி, கதை கூறுமுகத்தானே, இம் மூன்று உண்மைகளும் சிலம்பு காரணமாகப் பெறப்படுதலின் இந் நூற்குச் சிலப்பதிகார மென்று பெயரிட்டனர். ந. பலராமய்யர் அவர் கள் எழுதியது.

விலை ரூ க—0—0

## மகாத்மா காந்தியின் இந்திய சுயாராஜ்யம்

சுயாராஜ்யம் என்பதை நன்கு விளக்கி ஆதி யில் மகாத்மா காந்தி எழுதிய நூலின் தமிழ் மொழி பெயர்ப்பு. நல்ல ப க்கில் புல்லுருவி பாய்ந்தது போல், நம் தேசத்தில் "நாகரிகம் நாக ரிகம்" என்று தோன்றிப் பற்பலரையும் மயக்கி வருத்தும் விஷய விவரங்கள் நிர்மல சிந்தை யுடன் விளக்கப்பட்டுள்ளன. படிப்போர் மன மயக்கம் நீங்கி, தெளிவு உண்டாகி, தேசாபி மான உதயம் உண்டாகும். விலை ரூ ர—அ—0

கிடைக்குமிடம்:-

**கணேஷ் கம்பெனி,**
39, தம்பு செட்டித் தெரு, சென்னை.

# பட்டுப் பீதாம்பர கம்பெனி, காசி.

நாகரிகமான ஜரிகைவேலை செய்த பட்டுச்சேலைகள்,
ரவிக்கைகள், துப்பட்டாக்கள், வெண்பட்டுகள், முதலியன
மிகச் சரசமாகக் கிடைக்கும்.
காசுமீரச் சால்வைகளும், கம்பளிப் போர்வைகளும், கஸ்தூரி,
கோரோஜனை முதலியனவும், கிடைக்கும்.

முந்துங்கள்! முந்துங்கள்!

## SILK PITAMBAR Co., BENARES CITY

## T. B. T. Malays, French Perfumers,
### KALAKKADU POST, TINNEVELLY DIST.

Hair Oil Essence! Cheap Price கூந்தல் தைல வாசனை!

இதனடியில் குறிப்பிட்டிருக்கும் வாசனைகளால் நீங்களே 16- அவுன்ஸ் அளவுள்ள நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய், பாதாமி எண்ணெய், ஆலிவ் எண்ணெய் இவைகளில் உயர்ந்த கூந்தல் தைலம் தயார் செய்துகொள்ளலாம். கடைகளில் விற்கப்படும் 2-அவுன்ஸ் புட்டிகளுக்கு ரூ 1—0—0 கொடுத்து ஏமாற வேண்டாம்.

| NAME | | | PRICE | NAME | | | PRICE |
|---|---|---|---|---|---|---|---|
| ரோஸ் | ½ oz | Rs. | 1—12—0 | கஸ்தூரி | ½ oz | Rs. | 2—0—0 |
| மல்லிகைப்பூ | „ | „ | 1—12—0 | தாமரைப்பூ | „ | „ | 1—4—0 |
| வெட்டி. வேர் | „ | „ | 1—12—0 | தாழம்பூ | „ | „ | 1—0—0 |
| மனோரஞ்சிதம் | „ | „ | 2—0—0 | மகிழம்பூ | „ | „ | 2—8—0 |
| சந்தனம் | „ | „ | 1—4—0 | குங்குமப்பூ | „ | „ | 1—0—0 |
| வைலிடி ரோஸ் | „ | „ | 1—8—0 | சுரங்கி | „ | „ | 1—8—0 |
| சாபர் | „ | „ | 2—0—0 | செண்பகப்பூ | „ | „ | 2—8—0 |
| அம்பர் | „ | „ | 2—4—0 | நெரோலி | „ | „ | 2—0—0 |
| சருவைப்பூ | „ | „ | 1—4—0 | பிச்சிப்பூ | „ | „ | 1—0—0 |

முக்கிய கவனிப்பு:—எங்களுடைய வாசனைகளில் ஒரே தடவையில் 6-புட்டிகள் வாங்குவோருக்கு, ஒரு பவுண்டன் பேனாவும், தைலத்திற்குச் சேர்க்கக்கூடிய கலரும் இனாமாக அனுப்பப்படும். தபால்சார்ச்சுவேறு.


# "பாலபாரதி," சேரமாதேவி

ஓர் உயர்ந்த மாதப் பத்திரிகை

ஆசிரியன்: வ.வெ.ஸுப்ரஹ்மண்ய ஐயர்

"பாலபாரதி"யில் புதிய ரஸமான சுவை சொட்டும் சிறு கதைகள் வருகின்றன. ஓர் அருமையான பெருங்கதை (நாவல்) தொடர்ச்சியாக வருகிறது. சிறந்த வர்ணப் படங்களும் பிற படங்களும் "பாலபாரதி"யை அழகு படுத்துகின்றன. நமது உயர்ந்த நூல்கள் நவீன ஐரோப்பிய முறைகளில் ஆராயப்பட்டு ஐரோப்பிய பாஷைகளிலுள்ள இலக்கியங்களுக்கு நம் தமிழ் இலக்கியங்கள் எள்ளளவும் தாழ்ந்தன அல்ல என்று காட்டப் பெறுகின்றன.

ஆழ்வார்கள், நாயன்மார்கள், தயானந்த சரஸ்வதி, ஜாரதுஷ்டிரன், முதலிய சமயாசாரியரின் சரித்திரங்களும், திருவள்ளுவர், மார்க்க ஔரேலியன், ஸஅதி ஸாதி முதலியோரின் சரித்திரங்களும் நல்லறிவு கொளுத்தும் திருவாக்குகளும் "பாலபாரதி"யில் இடைவிடாது வெளிவந்து கொண்டிருக்கின்றன.

வீரர் சரித்திரங்களும், பிரசங்கங்களும், வீரப் பெண்டிரின் சரித்திரங்களும், வீரங் காட்டியகுழந்தைகளின் வரலாறும் "பாலபாரதி"யை அலங்கரித்து வருகின்றன.

ஹாஸியப் பிரியர்களுக்கு ஹாஸிய ரஸம் உள்ள கதைகளும் வியாஸங்களும் வெளி வருகின்றன.

உலக விநோதங்களைப்பற்றிய வர்ணனைகளும் விவரங்களும் பத்திரிகையில் வருகின்றன.

பள்ளிக்கூடங்களில் கற்காத நமது பெண்மணிகளுக்கும் குழந்தைகளுக்கும் இப் "பாலபாரதி" ஓர் சிறந்த கலாசாலையைப் போல விளங்கி, தன்னைப் படிப்பவரைக் கலாசாலையில் படித்தவரைவிட அதிக கலை ஞானம் படைத்தவராக ஆக்கிவிடும் என்பதில் சிறிதேனும் ஐயமில்லை. இன்று முதல் ஆனி மாதத்துக்குள் சந்தாதாரராகச் சேருகிறவர்க்கு ஜாரதுஷ்டிரன், குரு கோவிந்த சிங்கன் என்ற நூல்கள் இனாமாகவும், "பாலபாரதி" புத்தக சாலையிலுள்ள இதர நூல்கள் விலையில் ரூபாய்க்கு ஒரு அணா விதம் விலை தள்ளியும் கொடுக்கப்படும். எல்லா நூல்களுக்கும் தபால் செலவும் கட்டும் செலவும் வேறு

சந்தா விகிதம்.

உள்நாட்டுக்கு வருஷச் சந்தா: ரூ. ௫. ௬மீ: ரூ. ௩. ௩மீ: ரூ. ௧-௧௨.
மாதிரி பிரதி அணா ௧௦. வெளிநாடுகளுக்கு வருஷச்சந்தா ரூ. ௯-௮.

வைகாசி, கலி ௫௦௨௭. காரியஸ்தன், "பாலபாரதி."

# இரண்டு அரிய நூல்கள்

## குரு கோவிந்த சிங்கன்

பாரத தர்மத்தை நிலைநிறுத்த அரிய தியாகங்கள் செய்த ஒரு வீரனுடைய சரிதை.

வேண்டுவோர் ருஇ அணா தபால்தலை அனுப்பவும்.

## ஜாரதுஷ்டிரன்

ஜொராஸ்தர் என்ற பாரசீக மதகுருவின் திவ்விய சரித்திரமும் உபதேசமும்

(ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் எழுதியது)

வேண்டுவோர் இரண்டரையணா தபால் தலை அனுப்பவும்.

டை இரண்டு புத்தகங்களும் வேண்டுவோர் எஇ அணா தபால்தலைகள் அனுப்பவும்

கிடைக்குமிடம்:—

"பாலபாரதி" புஸ்தகசாலை, சேரமாதேவி

(திருநெல்வேலி ஜில்லா).

…தேவி "குருகுல" அச்சுக்கூடத்தில் அச்சிடப்பெற்று, ரா. அனந்தகிருஷ்ணனால் பிரசுரிக்கப்பெற்றது.